மயிலேறி பாடிய

மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை

(வில்லுப்பாடல்)

தொகுப்பாளர் & பகுப்பாளர்:

சு. சண்முகசுந்தரம் எம். ஏ.,

ஆய்வாளர் தமிழ்த்துறை,

சென்னைப் பல்கலைக் கழகம்

பதிப்பாசிரியர் :

கொடுமுடி ச

கதையைப் படிக்குமுன்

இக்கதையைப் பாடி வருபவர் திரு மயிலேறி என்பர் திருநெல்வேலியில் பொருநைக் கரையில் ஒரு குடிலில் வாழ்கிறார்.

இக் கதையின் நாயகன் மெச்சும் பெருமாள் பாண்டியன். இவரைத் தெய்வமாக்கி பூஜித்துவருகிறார்கள். ஒரு குடும்பத்தின் சொந்த தேவதையாக விளங்குகிறார். இவரை ஊரிலுள்ள அனைவருமே வணங்கி வருகின்றனர். இக்கோயிலில் மண்டபங்கள் ஏதுமில்லை. கல்லால் அமைந்த சிறு பீடமே உள்ளது. இவருக்குப் போக்காள சாமி என்றும் பெயருண்டு.

இக்கதையை நான் பெறுமாறு மிகப் பெரும் உதவி செய்தவர் என் மைத்துணர் பெருமாள் பாண்டியன். அவரைப் பெற்றது என் பெரும்பேறு. இக் கதை நடந்த ஊரும், இன்று தெய்வமாக இருக்கும் ஊரும், இவர் இருக்கும் ஊரும் ஒரே ஊர்தான். அதுதான் திருநெல்வேலியிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டருக்குள் இருக்கும் கோபால சமுத்திரம். இதற்கு ராச கோபால சமுத்திரம் என்றும் பெயருண்டு.

இக் கதையில், ஓர் ஊர் காவலனுக்கும் கள்ளர்களுக்கும் போராட்டம் நடக்கிறது. ஊரையும் நாட்டையும் இந்த வீரனின் இளம் ரத்தம் காக்கத் துடிக்கிறது. ஆனால் வண்ணாத்தியிடம் கொண்ட கள்ளத் தொடர்புதான் நம்மை முகம் சுழிக்க வைக்கிறது. என்றாலும் காதலும் (அடுத்தவன் மனைவி என்றாலும் அக்காலத்தில் காதல்தானோ என்னவோ?) வீரமும் ஒரு தமிழ் வீரனுக்கு இருப்பது சகஜம்தானே. நன்றி மிக்க நாய்கள் நன்றாக தங்கள் கடன்களைத் தீர்க்கின்றன.

இக் கதையைப் பாடலாகக் கோவில் விழா நாட்களில் கேட்கும்போது, இவ்வூர் மக்கள் ஆனந்தப்பரவசம் கொள்கிறார்கள்.

[illegible] தயின் ஏட்டை எனக்குத் தரும்போது மயிலேறி [illegible] பா! என்னிடம் நிறைய ஏடுகள் உள்ளன. இனி [illegible] யாது. தேவையானதை எடுத்துச் செல்லுங் [illegible] கரியட்டும்'' என்றார் ஆற்றுநீர் கால்களை [illegible] வாறு சொன்னதும் என் நெஞ்சுக்கு

[illegible] தரம்

மெச்சும்பெருமாள் பாண்டியன் கதை

நாட்டுவளம்

நாட்டிலேயும் நல்லநாடு
நாவலர்கள் புகழும் நாடு
சிறுகதலி பழுக்கும் நாடு
செந்நெல் கன்னல் விளையும் நாடு
கதலி பழுக்கும் நாடு
தேங்காய் அமிர்தம் சோலை சூழும்
தென்னாடு தேசத்திலே,

ரிசியின் ஆசை

அட்டநீச[1] எட்டுபேர்கள்
ஆண்டிருக்கும் வேளையிலே,
அதிலேயொரு ரிசியவர்தான்
அழகு சுவேத ரிசியவர்தான்,
'கடவுளைத்தான் பார்க்க வேணும்
கனத்தவரம் வாங்க வேணும்
மாங்காய் அமிர்தம் சோலை சூழும்
மாணிக்க வட கயிலையிலே'
பரமசிவமும் பார்வதியும்
பாத்துவரம் வாங்கவேணும்;

கைலையும் காட்சியும்

கயிலைக்குத்தான் வழி நடந்தார்
கட்டுடனே ரிசியவர்தான்.
மாணிக்க சைலாசத்தில்
மகாதேவர் முன்னே வந்தார்.
சுவேத மகா ரிசியும்
சொன்னார் சிவனாரிடம்.
' ரிசிகளிலே பெரிய ரிசியாக
சிவனாரே நான் இருக்க வேணும்''
என்று சொல்லும் வேளையிலே
ஏது சொல்வார் சிவனாரும்.

சிவன் சொன்ன பதில்

''தவமது தான் செய்தீரானால்
தானே பெரியவனாய் இருக்க லாமே.
தென்னாடு தேசத்திலே
சிறந்த பாண்டிய நாடதிலே
பாண்டிய நல்ல நாடதிலே
படர்ந்த தாம்பர வர்ணியிலே[2]
தாம்பரவர்ணி அருகினிலே
தானே ஒரு வனமிருக்கே.
அந்த நல்ல வனமதுதான்
அருந்தவசுக்கு ஏற்றவனம்:
அதிலே ஆயிர வருட காலம்
அருந்தவசு செய்ய வேணும்,''
என்று சொன்னார் சிவனாரும்

ரிசியின் வேண்டுகோள்

ஏது சொல்வார் ரிசியவரும்,
''தவசு செய்ய வேண்டுமானால்
தலைமகன் வெள்ளைக் கணபதிய,[3]
தலைமகனைத் தந்தீரானால்
தவசுசெய்ய போவேனென்றார்.''

கைலையை விட்டுப் புறப்படல்

தலைமகனை அனுப்பிவைத்தார்
சாம்பசிவ மூர்த்தி தானே.
கணபதியும் ரிசியவரும்
கயிலையை விட்டு வந்தார்கள்.

தாம்பரவர்ணி கரையில் தங்கல்

தாம்பரவர்ணி யருகே
தானே மூங்கில் வனமதிலே,
வெள்ளை அரச மரத்தடியில்[4]
வீற்றிருந்தார் கணபதியும்.
வெள்ளை விநாயகர் என்றல்லவோ
வேந்தன்ரிசி[5] பேர் கொடுத்தார்;
ஆசிரமத்தைக் கட்டினாரே
அர்ச்சனைகள் செய்து வாரார்.

---

1. அட்டநீச — எட்டுவகை இழிவுகள்
2. தாம்பரவர்ணி — பொருநை
3. விநாயகரே வினைக்கு முதல்வன். எனவே அவனையும் அழைத்தார்
4. விநாயகரின் இருப்பிடம் வெள்ளை அரசமரத்தடிதான்.
5. வேந்தன் ரிசி — ரிசிகளின் தலைவன்.

சுவேதமகாரிசி வனம்

அந்த நல்ல வனமதற்கு
அப்போதே பேர்கொடுத்தார்.
சுவேத மகாரிசி வனமென்று
சொல்லலுற்றார் ரிசியவரும்.
அன்றுமுதல் வனமதுதான்
அதிசயமாய் ஆகுதய்யா.
பூக்காத மரங்களெல்லாம்
பூத்துச் சொரியுதங்கே.
காயா மரங்களெல்லாம்
காய்த்துக் கனிச் சொரியுதங்கே.

ரிசியின் வழிபாடு

சுவேத மகா ரிசியவர்தான்
தீர்த்தமாட வாராரே.
தாம்பரவர்ணி நதியதிலே
தானே மூங்கிலடி தீர்த்தமதில்
தானம்பண்ணி நேமம் செய்தார்.
தர்ப்பணபூசை தான் முடித்தார்.
சுவேத மகா ரிசியவர்தான்
சுற்றி வந்தார் விநாயகரை.

விநாயகரின் விளக்கம்

நமஷ்கரித்த நேரத்திலே
நல்ல வெள்ளைக் கணபதியும்,
"வடநாடு தேசத்திலே
வாழ்மதுரை தனிலிருந்து,
பாண்டியமார் இருபேர்கள்
பவனி சுத்தி[1] பாத்து வாரார்.
அவர்களாலே நம் நாட்டுக்கு
அனேகம் பேர் வரப் போறார்."
"ஆகட்டும்", என்று சொல்லி
அடிபணிந்தார் ரிசியவர்தான்.

பாண்டிய மன்னர்களின் வருகை

வீரக் கரையாள ராசாவும்
வீரமார்த்தாண்ட ராசாவும்
அண்ணன் தம்பி இருபேரும்
அசுவத்தில்[2] ஏறலுற்றார்.
பாண்டியமார் இருபேரும்
பணமுடிப்பைத் தோளிலிட்டு
நாடு சுற்றி பார்ப்பதற்கு
நலமுடனே வாரார்கள்.
காடுசெடி வனம் தாண்டி
களைத்து வந்தார் தென்னாடு.

ரிசியும் மன்னர்களும் சந்தித்தல்

தாம்பரவர்ணி கரையதிலே
தானம் பண்ணி பூசை செய்தார்.
பாண்டியமார் பூசைபண்ண
படுத்திருக்கும் அசுவம்
ரெண்டும்.
சுவேதமகா ரிசியவர்தான்
வெள்ளை விநாயகருக்குப் பூசை
செய்தார்.
மணி சத்தம் காதில் கேட்டார்
மதுரை நல்ல ராசாக்கள்.
மூங்கில் வனமதிலே
முழங்குதய்யா மணியோசை.
மணியோசை கேட்டவுடன்,
மன்னர் ராசா இருபேரும்
ஓட்டமும் நடையுமாக
ஓடி வந்தார் இருபேரும்.
சுவேதமகாரிசி ஆசிரமத்தை
சுற்றிபார்த்தார் இருபேரும்.
வெள்ளை மரத்தடியில்
விநாயகரை நமஸ்கரித்தார்.

ரிசியின் கூற்று

சுவேத மகா ரிசியவர்தான்
சொல்லுகின்றார் வாய் திறந்து,
"வாரும் பிள்ளாய்[3] ராசமன்னா!
வார்த்தையொன்று சொல்லக்
கேளாய்!
ராச்சியமாக அமைக்க வேண்டும்
இந்த நல்ல வனமதைதான்.
ராசமுடி தரிக்க வேண்டும்.
ராசபட்டம் கட்டி வைப்போம்".
என்று சொன்னார் ரிசியவரும்.

மன்னர்கள் மதுரை செல்லல்

ஏது சொல்வார் ராசாக்கள்,
அப்படியே நல்லதென்று
அண்ணன் தம்பி இருபேரும்
அசுவத்தின் மேலேறி,
அழகு மதுரைக்கு வந்தார்கள்.

---

1. மன்னர்கள் நாட்டைச் சுற்றிபார்த்து வருவது பவனியாகும்.
2. அசுவம் — குதிரை.
3. பிள்ளாய் என்பது மரியாதையைக் குறிக்கும்.

மதுரைப் பட்டனம் நாடதிலே
மன்னர் பாண்டியர்கள் வந்தார்.

மதுரையைவிட்டுப் புறப்படல்

ஆனைபரி சேனைகளும்
அதற்கேற்ற காலாளும்
ராமா லட்சுமணா
களஞ்சியத்தை[1]
நலமாகத் தான் துறந்து
களஞ்சியத்து பணத்தை
யெல்லாம்
கட்டிவைத்தார்யானையின் மேல்
ஆனையின் மேல் அம்பாரி
அருமையுடன் வைத்தார்கள்.
காலாளும் சேனைகளும்
கடுகெனவே பயணம் வைத்தார்.
சொக்கலிங்க நாதரையும்
மீனாட்சி அம்பிகையையும்
தரிசனங்கள் செய்தல்லவோ
செல்வமாக வாரார்கள்.
தென்னாடு தேசத்துக்கு
சீராக வாரார்கள்.

வனத்திற்கு வந்தடைதல்

தாம்பரவர்ணி தான்கடந்து
தானே வந்தார் ரிசியருகே.
சுவேத மகாரிசி வனமதிலே
கூடாரம் போட லுற்றார்.
அழகழகா மேடை வைத்தார்
அரண்மனைகள் கட்டலுற்றார்.

அரண்மனை அமைத்தல்

சுத்துகட்டு மாளிகையாம்
சூழ நல்ல அங்கணமாம்[2]
கோட்டைகளும் கொத்தளமும்
கோபுரமும் துறவுகளும்
ஆசார வாசல்களும்
அதிகார மேடைகளும்
ஆனைக்கட்டும் சாவடியாம்
அசுவம் கட்டும் கொட்டகையாம்
குதிரை கட்டும் சாவடியாம்
கொட்டார வாசல்களாம்
துர்க்க என்னும் காளி கோயில்[3]
துரிதமாகக் கட்டி வைத்தார்.

ஆட்களை அழைத்தல்

ஆளடிமை வேணுமென்று
அண்ணன் தப் பி இருபேரும்
'நாம்நாடு செல்ல வேண்டும்
நலமான குடும்பக்கமாற்[4]
நாற்பது வீட்டுக்காரர்
நலமுடனே கொண்டு வந்து
குடியேத்தி வைக்க வேண்டும்
குணமுடனே வாழவேண்டும்',
அண்ணன் தம்பி இருபேரும்
அந்தநாடு வந்து சேர்ந்தார்.
நாற்பது வீட்டு பள்ளர்களை
நலமுடனே கூட்டி வந்தார்.

நாட்டினை நிறுவல்

வீரக்கரையாள ராசாவும்
வீரமார்த்தாண்ட ராசாவும்
சுவேத மகாசிரியை வந்து
துரிதமுடன் வணங்கலுற்றார்.
சக்கர நகரமென்று
சரியாகப் பேர் கொடுத்தார்.
சக்கர நகரத்தில் வந்தல்லவோ
சந்தோசமாக குடும்பக்கமார்
பாண்டிய ராசாவை
நமஸ்கரித்தார்.
பணத்தை அள்ளி தான்
கொடுத்தார்.

கோவில் கட்டல்

நாற்பது வீட்டு குடும்பக்கமார்
நலமுடனே ஒன்று கூடி'
சிவன் கோவில் கட்டியல்லோ
சிறப்பாகத் தான் முடித்தார்.
காளி கோவில் கட்டினார்கள்

---

1. களஞ்சியத்திற்கு இராமனின் பெயரையும் இலக்குவன் பெயரையும் வைத்திருந்தனர்.
2. அங்கணம — கழிவுநீர் செல்லும் இடம்.
3. கோட்டையின் காவல் தெய்வம் காளி என்பது மக்கள் நம்பிக்கை.
4. குடும்பக்கமார் — பள்ளர் சாதியினர்.

கட்டுடனே குடும்பக்க மார்கள்.
முப்பிடாதி அம்மாள் என்று
மூன்று தரம்[1] அழைத்தார்கள்.

இருசால் பணம் பிரித்தல்

இப்படியாகத் தானே
இருந்து வரும் நாளையிலே —
பார்த்தாரே பாண்டியரும்
பகுதி பணம் பிரிப்பதற்கு.
இருசால் பணம் பிரிப்பதற்கு
இன்பமுடன் அழைத்தார்கள்.
அரண்மனைக்குக் காவலய்யா
அழகுப் பொன்பெருமாள் தேவர்.
அவரை மெள்ள அழைத்தல்லவே
அன்புடனே ஏது சொல்வார் —

தலையாரியை நியமித்தல்

"இன்றுமுதல் தலையாரியாக
இருக்கவேண்டும்'', என்று சொன்னார்.
ஆயிரம் பொன் கொடுத்து
அரண்மனைதான் கட்டச் சொன்னார்.
நாலுகட்டு மாளிகையாம்
நடுவறையில் அங்கணமாம்.
சுத்துகட்டு மாளிகையாம்
சூழவொரு அங்கணமாம்.
வளமாக இப்படித்தான்
வாழ்ந்து வாரார் பொன் பெருமாள்.

வளமான வாழ்வு

பணத்திலும் பெரியவர் தான்.
சனத்திலும் பெரியவர் தான்.
பாலாலே குறைவுமில்லை.
பாக்கியத்தால் தாழ்வுமில்லை.
பொன்பெருமாள் தேவர்க்கும்
சங்கர வடிவு அம்மாளுக்கும்
மன்மதனும் ரதியும் போல்
மவுசாக[2] வாழ்ந்தார்கள்.
வாழ்ந்து வரும் நாளையிலே—

குழந்தையில்லா குறை

வாய்த்த சங்கர வடிவு அம்மாள்
"என் கணவா மன்னவரே!
எனக்கு வாய்த்த பிராணநாதா!
பொன்னிருந்து என்ன செய்ய
புத்திரனும் இல்லாமல்.
பணமிருந்து என்ன செய்ய
பாலகனும் இல்லாமல்.
மலடி மலடி யென்று
மண்ணிலுள்ளோர் ஏசலாச்சே.
இருசி[3] இருசியென்று
எல்லோரும் சொல்லலாச்சே.
காசுக்குப் பிள்ளை வாங்கி
கடைத்தெருவில் விட்டோமானால்
கடைதான் நிறைந்திடுமோ
கண்டசனம் ஒப்பிடுமோ.
பணத்துக்குப் பிள்ளை வாங்கி
பந்தலிலே விட்டோமானால்
பந்தல் நிறைந்திடுமோ
பார்த்த சனம் ஒப்பிடுமோ?
என் கணவா பொன் கணவா!
என்னுடைய பத்தாவே!
ஆண்மலடோ பெண் மலடோ
ஆராய்ந்து பார்க்கணுமே'',
முத்துப் போல கண்ணீரை
முகம் வடிய சோர விட்டாள்.
பவளம் போல கண்ணீரை
பக்கமெல்லாம் சோர விட்டாள்.

ஆறுதல் அளித்தல்

கணவனுமே அந்நேரம்
கண்ணீரை தான் துடைத்தார்.
"அஞ்சாதே மலையாதே
ஆதிசிவன் தானிருக்கான்''.
அன்னேரம் சோதிடரை
அருமையுடன் அழைத்து வந்தார்.

சோசியன் சொன்னது

சாந்தாலே தரை மெழுகி
சந்தணத்தால் கோலமிட்டார்[4]

---

1. மூன்றுதரம் என்பது மக்களின் நம்பிக்கை வழக்கு.
2. மவுசு — சீராக, சிறப்பாக.
3. இருசி — மலடி,
4. சந்தணக் கோலம் — மங்கலக்குறி.

கோலமிட்ட வாசலிலே
குலவாழை தூண் நிறுத்தி[1]
வித்தை வினாயகனை
விரைவாக முன்னே வைத்தார்.
பொன்னாலே விளக்கேற்றி
பூமலர்கள் தான் சாத்தி
நிறைநாழி நிறை மரக்கால்[2]
நேசமுடன் தான் படைத்தார்.
சோவிநல்ல தான் பரத்தி[3]
சொல்லலுற்றார் அந்நேரம்.
வண்ணமுள்ள சோசியனும்
வாய் துறந்து ஏது சொல்வார்.
''பிள்ளையது வேண்டு
மானால்
பெருந்தவசு செய்ய வேண்டும்.
குழந்தையது வேண்டுமானால்
கோவிலுக்கு மாதாந்தம்.[4]
மைந்தனுமே வேண்டுமானால்
மாதாந்தம் நடக்க வேண்டும்
சங்கரன் கோவிலுக்குச்
சந்தோசமாக நடக்க வேண்டும்.
இருபத்தொரு மாதாந்தம்
இன்பமுடன் நடக்க வேண்டும்.
மாதாந்தம் நடந்தீரானால்
மைந்தனுமே உமக்குண்டு.
ஆணுக்கு ஆணுமுண்டு
அடுக்களைக்குப் பெண்ணு
முண்டு,
என்று சொல்லி சோதிடரும்
ஏகலுற்றார் அந்நேரம்.

பிள்ளைக்காகப் பெருந்தவசு

சங்கரன் கோவிலுக்குத்
தானே நடக்கலுற்றார்.
நேர்ந்து தவமிருந்தார்.
நெய்விளக் கெரித்தார்.
மண்குமித்த இடங்
களெல்லாம்
பொன்குமித்து தவசிருந்தார்:
தூரவழி போவோர்க்குச்
சுமைதாங்கி[5] கட்டிவைத்தார்.
காதவழி போவார்க்கு
கல்கிணறு கட்டி வைத்தார்.
கல்கிணறு கட்டியல்லோ.
கைத்துலாவும் போட்டு
வைத்தார்

தானமும் தவமும்

கூனற் குருடருக்கும்
குறைக்கால் முடவருக்கும்
ஆண்டி பரதேசியர்க்கும்
அன்னமடம் கட்டிவைத்தார்.
இலையிலே சாதமுண்டால்
என்னதவம் என்று சொல்லி
தரையை நல்ல தாமொழுகி
சாதமுண்டார் இருபேரும்.
இந்தப்படி மாதாந்தம்
ஏகமுடன் நடக்கலுற்றார்:
இருபத்தொரு மாதாந்தம்
இன்பமுடன் நடக்கலுற்றார்.
மாதாந்தம் உயர்த்தி
விட்டார்[6]
மன்னவரும் தேவியரும்.

கேட்டது கிடைத்தது

அந்தமாசம் விலக்கமது
அவளுக்கும் வந்ததங்கே.
நன்றியுடன் குளிமறந்தாள்,
நாற்பது நாள் கர்ப்பமானாள்.
ஊரறிய ஒரு மாசம்
நாடறிய நாற்பது நாள்.

---

1. குலவாழை —குலையோடு உள்ளவாழை. மங்கலக்குறி.
2. நிறைநாழி நிறை மரக்கால் — நிறைவின் அறிகுறி.
3. சோவி பரத்துவது — கழங்கு பார்த்தல் போன்றது.
4. மாதாந்தம்—ஒவ்வொரு மாத இறுதி வெள்ளிக்கிழமை யிலும், முருகன் கோவிலுக்குச் செல்லுதல். தொடர்ந்து இருபத்தொரு தடவை செல்லவேண்டும் என்பது மக்கள் நம்பிக்கை
5. சுமைதாங்கி — கர்ப்பமுற்ற பெண்கள் இறந்து போனால் அவர்கள் நினைவாகவும் அமைப்பது உண்டு.
6. உயர்த்திவிட்டார் — முடித்து விட்டார்.

கருவளர்ந்த போது

மாதமிரண்டு ஆனபோது
மங்கையரும் ஏதுசொல்வார்?
மூன்றாவது மாசத்திலே
முகம் வெளுத்து மேனியானாள்.
நாலாவது மாசத்திலே
நளினமான மயக்கமுண்டாம்.
அஞ்சாவது மாசத்திலே
அங்கமெல்லாம் தங்க நிறம்.
ஆறாவது மாசத்திலே
அடிவயிறு பூரணமாம்.
ஏழாவது மாசத்திலே
எழுந்திறியா கிடையானாள்.
கஞ்சிகுடி மறந்தாள்
கண்ட பண்டம் தின்கலுற்றாள்.
மாங்காயும் பலாக்காயும்
மலப்புளியங் காயுடனே[1]
தேங்காயும் நெல்லிக்காயும்
தின்றாளே மங்கையரும்.
எட்டாவது மாத்தையிலே
சுட்டமண்ணை புட்டுத் தின்னாள்.
ஒன்பதாம் மாத்தையிலே
ஊரறிய பொங்கலுற்றார்.

மருத்துவச்சி வருகை

இன்பமுடன் நாள் கேட்டு
ஈத்துபுரைதான்[2] முடித்தார்.
வருத்தம் வர கண்டிருந்து
மருத்துவத்தைக் கூட்டி வந்தார்.
மருத்துவத்தைக் கண்டபோது
மங்கையரும் ஏது சொல்வார்.

சங்கரவடிவின் சந்தேகம்

"சரிந்த புகழ் மருத்துவமே
சாகாமல் பிழைப்பேனோ?
அனியாய பாடாச்சே
அறியாமல் தவசிருந்தேன்.
மணவாளர் எனக்கு வேணும்
மக்களினி வேண்டாமே.
கணவனே எனக்கு வேணும்
கைச்குழந்தை வேண்டாமே
கருவாய் ஜனிக்கையிலே[3]
கருமருந்தைத்[4] தின்றேனில்லை.
உருவாய் ஜனிக்கையிலே
உள்மருந்தைத்[5] தின்றேனில்லை.
பிள்ளையின் ஆசையின்பம்
போறாதோ இனிமேலும்."

வலியின் வருத்தங்கள்

சந்து வலிக்குதென்பாள்
சரீரமெல்லாம் நோகுதென்பாள்.
வயிறது நோகுதென்பாள்
வண்டதுபோல் உருளுது என்பாள்.
மயங்குகிறாள் தியங்குகிறாள்
மங்கை சங்கர வடிவம்மாள்.
தன்னுடைய கணவனைத்தான்
தானே மெல்ல அழைத்தாளே.

கணவனுக்குச் சொன்னது

"என் கணவா பிராண நாதா
என்னுடைய மணவாளா!—நான்
மாண்டுமடிந்தக் கால்
மனது கலங்காதிங்கோ.
செத்து மடிந்தேன் ஆனால்
சிந்தை கலங்காதிங்கோ.
நம்ம குல தேவதைக்குக்
கொடை கொடுக்க[6] நேர்ந்திடுங்கோ.
மாண்டு மடிந்தவர்க்கு
மாலைவைக்க நேர்ந்திருங்கோ.

---

1. புளியங்காய், நெல்லிக்காய் போன்றவை புளிப்புச் சுவையன. இவை கர்ப்பிணிகளால் பெரிதும் விரும்பப் படுவன.
2. குழந்தை பெறும் தாய்க்காகக் கட்டப்படும் ஓலையால் அமைந்த சிறுகுடில்.
3. ஜனித்தல் — உருவாதல்.

4, 5. கருவை அளிக்கக் கூடிய மருந்துகள்.

6. தெய்வத்துக்குக் கிராமங்களில் அளிக்கும் விழாவே கொடை. ஒரு நாளேனும் மூன்று நாளேனும் நடை பெறுவதுண்டு.

சாவேனோ பிழைப்பேனோ
சரிந்த புகழ் மருத்துவமே,
என் தலை விதிதான்
எப்படியோ
ஈசன் பகவானே''
கடவுளைத்தான் அன்னேரம்
கையெடுத்துத் தெண்டனிட்
டாள்.
முத்துப்போல் கண்ணீரை
முகம் வடிய சோர விட்டாள்.
பவளம் போல் கண்ணீரைப்
பக்கமெல்லாம் சோர விட்டாள்.

மருத்துவச்சியின் உதவி

அன்னேரம்[1] மருத்துவமும்
அருமையுடன் ஏது சொல்வாள்.
முக்காலி கொண்டு வந்து
முன்னாலே தான் போட்டாள்
ஈத்துக் கயிறு[2] கொண்டு வந்து
எதிரிலே தான் போட்டாள்.
முக்காலி மேலிருந்து
ஈத்துக் கயிறு தான் பிடித்தாள்.

பெண் பிறந்தபோது

பெருமையுடன் வயிருமிட்டு
பெண் குழந்தை பிறந்திடுமாம்.
கொப்புளறுத்து குலவையிட்டாள்
குளிப்பாட்டி சேனை போட்டி
தங்க நல்ல தொட்டிலிலே
தாலாட்டி ஓராட்டி[3]
ஓரிரண்டு வயதினிலே
ஊர்ந்து விளையாட
பிறந்த நல்ல குழந்தைக்குத்தான்
பேரிடவே வேணுமென்று
சோதிடரைத் தானழைத்தார்.

பெண்ணுக்குப் பெயரிடல்

சொல்லுகிறார் சோதிடரும்
பிள்ளை பிறந்த லக்கணத்தைப்[4]
பெருமையுடன் பார்க்கலுற்றார்.
வைகாசி மாத்தையிலே
வக்கிர உச்சத்திலே
ராட்சச வேளையிலே
நலமுடனே பிறந்திருக்கே.
வக்கூறனும் ராச்சதனும்
வகையுடனே சேர்ந்ததினால்,
வளத்தராக்கி என்று சொல்ல[5]
வகையுடனே பேர் கொடுத்தார்.

பிறந்தவேளை பொல்லாதது

''பிள்ளை பிறந்த நேரம்
பூமிக்கே ஆகாதே.
மகளாய் பிறந்த நேரம்
மாநிலத்துக்கு ஆகாதே.
தலைமகள் பிறந்த நேரம்
தகப்பனுக்கு ஆகாதே.
அருமை மகள் பிறந்த நேரம்
அப்பாவுக்கு ஆகாதே.
சொந்தமகள் பிறந்த நேரம்
சோத்தை[6] எல்லாம் தொலைத்
திடுவாள்.
ஆசைமகள் பிறந்க நேரம்
அரண்மனைக்கு ஆகாதே.
ஆனைகட்டும் சாவடிகள்
அய்யா வீட்டில் இருந்தால்,
பூனை போல் தானிருந்து
புலம்புமே மகள் கிரகம்.
குதிரைகட்டும் சாவடியில்
கூகை இருந்து கூவுமய்யா.
அரண்மனை வாசலிலே
ஆந்தை இருந்து தான் அலறும்.
வளத்தராக்கி என்றவர்க்கு
வயது ஏழு வந்த பின்னே,
ஏழு நல்ல வயதிலே தான்
இந்த ஊரை விட்டுப்
போகனுமே'',
இப்படியாய் சோதிடரும்
ஏகமுடன் சொல்லலுற்றார்.

---

1. அன்னேரம்—அந்த நேரம்.
2. ஈத்துக் கயிறு—குழந்தை பெறும்போது தாய் பற்றிக் கொள்ளும் கயிறு.
3. ஓராட்டி—தாலாட்டி.
4. லக்கணம் - நட்சத்திரம்.
5. பிறந்த நட்சத்திரத்தாலும் பெயரிடுவது வழக்கம். (வளத்த ராக்கி).
6. சோத்தை—சோற்றை.

மனைவியின் மனதைத் தேற்றுதல்

சோதிடரை அனுப்பி விட்டு
சொல்லுகிறார் பாண்டியரும்,
"அன்று எழுதினவன்
அழித்தெழுத போவதில்லை.
பின்னே எழுதினவன்
பேர்த்தெழுத[1] போறதில்லை.
ஏட்டில் எழுதினதை
எடுத்தெறியப் போறதில்லை.
தலையில் எழுதினது
தப்பாதே ஒரு நாளும்".
"பாண்டியர் மனந்தேறி
பத்தினியைத் தான் பார்த்து
'சோதிடர் சொன்னதெல்லாம்
சுத்தமென்று[2] எண்ணாதடி.
புத்தி கெட்ட சோதிடர்தான்
புலம்புவதை நம்பாதடி"

சங்கர வடிவின் சந்தோசம்

சங்கர வடிவம்மாள்
சந்தோசமா மனந்தேறி
பிள்ளையுட ஆசையாலே,
பெருமையுடன் வளர்த்து வாராள்.
மூன்று நல்ல வயதினிலே
மொட்டையிட்டு காதுகுத்தி[3]
வளர்த்து வரும் நாளையிலே

இரண்டாவது கர்ப்பத்தில்

வடிவு நல்ல அம்மாளும்,
ஈசன் கிருபையினால்
இரண்டாவது கர்ப்பமானாள்
நன்றியுடன் குளிமறந்தாள்
நாற்பது நாள் சென்றாளே.
அஞ்சாறு மாசத்திலே
அரை வயிறு பூரணமாம்.
பத்தாவது மாசத்திலே
பாலகி[4] பிறந்தாளே.

பேரிட்டு சீராட்டல்

கொப்புள்தான் அறுத்து
குளுப்பாட்டி சேனைபோட்டி
துய்யமுலைப் பால் ஊட்டி
தொட்டிலிலே போட்டாட்டி
இன்பமுடன் குழந்தைக்குத் தான்
என்னபேர் விட்டார்கள்.
சங்கரன் அருளினாலே
சடையுடன் பிறந்ததாலே
சடைச்சி என்று பேருமிட்டாள்[5]

வளர்ந்துவரும் நாளையிலே

வயது ரெண்டாச்சி
வாய்த்ததொரு பெண்கொடிக்கு
மூன்று நல்ல வயதினிலே
மொட்டையிட்டு காதுகுத்தி
வளத்து வரும் நாளையிலே
வாய்த்த சங்கர வடிவம்மாள்.

மூன்றாவது கர்ப்பம்

மூன்றாவது கர்ப்பமானாள்
முக்கண்ணன் கிருபையினால்.
ஊரறிய ஒரு மாசம்
நாடறிய நாற்பது நாள்.
மாதம் மூன்றாச்சி
மங்கை சங்கர வடிவுக்கு.
நான்காவது மாசத்திலே
நளின ஒரு மயக்கமாச்சே,
அஞ்சாவது மாசத்திலே
அங்கமெல்லாம் தங்க நிறம்.
ஆறாவது மாசத்திலே
அடிவயிறு பூரணமாம்.
கஞ்சிக்குடி தான்மறந்தாள்
கண்டபண்டம் திங்கலுற்றாள்.

---

1. பேர்த்தெழுத—பெயர்த்தெழுத.
2. சுத்தமென்று—உண்மையென்று.
3. மூன்று வயதானதும் குழந்தைகளுக்கு மொட்டையிட்டுக் காது குத்துவது வழக்கம். இது பெரும்பாலும் கோவிலில் நடைபெறும்.
4. பாலகி—பெண் குழந்தை.
5. உருவ அமைப்பாலும் பெயரிடுவது வழக்கம் (சடைச்சி)

ஏழாவது மாசத்திலே,
எழுந்திரிக்கக் கூடுதில்லை.
எட்டாவது மாத்தையிலே
கட்டை மண்ணைப் பிட்டுத்
தின்றாள்.
ஒன்பது பத்து ஆனபோது
ஊரறிய பொங்கலுற்றார்.

பிரசவ வேதனை பெரிது

வருத்தம் வரக் கண்டிருந்தும்
மருத்துவத்தைக் கூட்டி வந்தார்.
மருத்துவத்தைக் கண்டபோது
மயங்குகிறாள் மங்கையரும்
"சரிந்த புகழ் மருத்துவமே!
சாகாமல் பிழைப்பேனோ?
அனியாய பாடு தெரியாமல்
அறியாமல் தவசிருந்தேன்.
கருவா ஜனிக்கையிலே —
கருமருந்தைத் தின்றே
னில்லை.
உருவா ஜனிக்கையிலே—
உள் மருந்தைத் தின்றேனில்லை'
அங்கமது நோகுதென்பாள்
அடிவயிறு பிசையுதென்பாள்
வயிறதுதான் நோகுதென்பாள்
வண்டதுபோல் உருளுதென்பாள்
ரெண்டு பிள்ளைக்குத்
தாயானேன்
இப்படிக்கு பட்டதில்லை.
மூன்றாவது கர்ப்பத்தோட
முடிந்துவிடும் என்னுயிர்
தான்.
என்று சொல்லி மங்கையரும்
ஏங்கியே துயரமானாள்.

ஆதரவாய் சொன்னபோது

அந்த நேரம் மருத்துவமும்
ஆதரவாய் ஏது சொல்வார்.
"அம்மா மயங்காதே
ஆண் பிள்ளை தான் பிறக்கும்.
பிள்ளை பிறக்கும் நேரம்
பிரியமுடன் வந்ததம்மா.
மைந்தன் பிறக்கும் நேரம்
மகிமையுடன் வந்ததம்மா."
என்று சொல்ல மருத்துவமும்
ஏந்திழையாள் மனந்தேற்ற
லுற்றாள்.

ஆண் குழந்தை அழகாய் பிறந்தது

அன்றுசிறு வயறுதள்ளி
ஆண் குழந்தை பிறந்திடுமாம்
பெற்றெடுத்த குழந்தையைத்
தான்
பிரியமுடன் மருத்துவமும்
கொப்புளறுத்து குலவையிட்டு
குளுப்பாட்டி சேனை போட்டி
நாளொரு மேனியுமாய்
பொழுதொரு வண்ணமுமாய்
வளர்ந்து வரும் நாளையிலே

பிள்ளைக்குப் பேரிட்டார்

வாய்த்ததொரு பாலகனுக்குப்
பேரிடத்தான் வேணுமென்று
பிரியமுடன் நாள் பார்த்தார்.
ஆகாசத்தில் நின்றல்லவோ
அசரீரி வார்த்தை[1] சொல்லிடு
மாம்.
மெக்கியம் பெருமாள் என்று
மேன்மையுடன் பேருமிட்டாள்.
பேருமிட்ட பாலகனைப்
பெருமையுடன் வளர்க்கலுற்றார்.

பிள்ளை பிறந்தது பெற்றவனுக்குக் கேடு

வளந்துவரும் நாளையிலே
வகையுடனே பாண்டியருக்கு
பொன்னும்பெருமாள் தேவருக்கு
புகழ் குறைந்து வருகுதய்யா.
ஒருநாளைக்கொரு நாள்
உற்ற கஷ்டம் வருகுதய்யா.
கையிலே கால் காசுமில்லை
கடன் கொடுப்பார் யாருமில்லே.
ஆள் இருந்த மனை முகட்டில்
ஆந்தை இருந்து கூப்பிடுமாம்

1. அசரீரி வார்த்தை—விண்ணினின்றும் மறைவாக கேட்கும் 'ஒலி'.

பொன்னும் பெருமாள் தேவருக்குப்
புகழெல்லாம் குறைந்திடுமாம்.
மைந்தன் பிறந்த நேரம்
மனையைவிட்டு அகலனுமே.
பிள்ளையது பிறந்த நேரம்
பூமிவிட்டுப் போகனுமே.
அருமை மகன் பிறந்த நேரம்
அடுத்த ஊர் போகனுமே
சொந்த மகன் பிறந்த நேரம்
சோற்றுக்குப் பஞ்சமாச்சே.

நாடெல்லாம் பஞ்சம்

பஞ்சத்துக்குக் காரணம்
பாரில் மழை பெய்யவில்லை.
நாடு செழிக்கவில்லை
நல்ல மழை பெய்யவில்லை.
பஞ்ச நல்ல காலத்திலே
பகுதி பணம் கட்ட வேணும்:
இல்லாத வேளையிலே
இருசால் பணம் கட்ட வேணும்.
நாழி உருண்ட பஞ்சம்
நாயகனைத் தோற்ற பஞ்சம்
மரக்கால் உருண்ட பஞ்சம்
மன்னவனைத் தோற்ற பஞ்சம்
புட்டி உருண்ட பஞ்சம்
பொன் பொருளைத் தோற்ற பஞ்சம்
தாலிகளை விற்றல்லவோ
தவிடு வாங்கி தின்ற பஞ்சம்.

தேவரின் திகைப்பு

பொன்னும் பெருமாள் தேவர் தானே
புகழுடனே ஏது செய்தார்.
தன்னுடைய மனைவியைத் தான்
தானே அழைத்து ஏது சொல்வார்
நாளைக்கி காலையிலே
நாமள் இங்கே இருந்தோமானால்
அட்டைக் கிடங்கினிலே[1]
அருங்கிளியே இறக்கிடுவார்.
முதுகுமேல் கல்லேத்தி[2]
மூர்க்கமுடன் நிறுத்திடுவார்.
அட்டை பிடுங்கிடுமே
ஆயுளுக்கே மோசம் வரும்.

திகைப்பு திட்டமிட்டபோது

விடியவொரு சாமத்திலே
ஊரைவிட்டுப் போகனுமே
ஊரதிலே இருந்தோமானால்
ஓரழிவு வந்து சேரும்.
நாடதிலே இருந்தோமானால்
நாசகாலம் வந்து சேரும்.
அட்டக்குழியிலே தான்
ஆயிரம் பேரை இறக்கி வச்சேன்.
பகுதி கட்டாத பேர்களைத்தான்
பட்டினி போட்டதுண்டு[3].
இறுசால் கட்டாத பேர்களைத் தான்
ஏற்றி வைத்தேன் முதுகுக்கல்லை
அந்த நல்ல பாவமது
அனுபவிக்க வந்திருக்கே.
ஆனதினால் பெண்கொடியே
அத்தசாம நேரத்திலே
ஊரை விட்டுப் போகனுமே
சாம நல்ல வேளையிலே.

ஊரைவிட்டு ஓடல்

தட்டி எழுப்பினார் மனைவியைத் தான்
தட்டுமுட்டு[4] சாமான்களை
தானே சுமை கட்டிக்கொண்டு
கட்டுசோறு கட்டினார்கள்.
கைவிளக்கு ஏத்தி வைத்தார்.
பொன்னும் பெருமாள் தேவரவர்
புறப்படவே பயணம் வைத்தார்.

---

1. அட்டைக் கிடங்கு—அட்டைகள் நிறைந்த கிடங்கு, தண்டனை முறையிது.
2. முதுகின் மேல் கல்லேற்றுவதும் ஒரு தண்டனை.
3. பட்டினி போடுவதும் ஒரு தண்டனை.
4. தட்டுமுட்டு—தேவையான.

கைக்குழந்தை மேல் கவனமில்லை

சாமான்களைத் தலையில்
வைத்தார்.
தலைமகளைத் தான்நடத்தி
சீக்கிரத்தில் புறப்படச்
சொன்னார்.
சின்னமகளைக் கைப்பிடித்தார்.
காலவிதி வசத்தாலே
கைக்குழந்தை தான் மறந்து
சங்கர வடிவம்மாள்
தலைவாசல் வாராளே.

தடையான சகுனங்கள்

தலவாசல் வாரபோது
தட்டுதடா நடையதுதான்.
அப்போதும் அறியலியே
அவசரமாய்ப் புறப்பட்டார்.
முடுக்கதிலே[1] வாரபோது
முடப்பூனை குறுக்கிடுமாம்.
ஆந்தை வந்து அலறிடுமாம்.
அபசகுனம் ஆகிடுமாம்.
பாலகனைத் தொட்டிவிட்டு
பாவையுவள் போறதினால்
பட்டமரத்தில் பல்லியது
பலபலவென்று சொல்லிடுமாம்.
மண் கூவை தலை மேலே
மண்ணை வாரி இறைத்திடுமாம்.
கொண்டைதனில் உருமாலை
கொப்பு[2] பிடித்து இழுத்திடு
மாம்
கண்ட கண்ட சகுனமெல்லாம்
காலாலே தள்ளிவிட்டு

கோவிலைக் கும்பிடல்

ஊர்காக்கும் காளி கோவில்
உத்தமி முப்பிடாதி வாசலிலே
கையெடுத்து நமஸ்கரித்தார்
காளி கோயில் சுற்றிவந்தார்.
வெள்ளை வினாயகரை
வேண்டுமட்டும் நமஸ்கரித்தார்.

வேகமாய் வழிநடத்தல்

பாளையாத்தாங் கால்கடந்து
படர்ந்த நதி கரையதிலே
தாம்பரவர்ணி கரைகடந்து
தானே வாரார் நால்வருமாய்.
ராசகோபால சமுத்திரத்து[3]
நாடுமிட்டு வாரார்கள்.
தென்றலது செழித்தோங்கும்
சிறந்த சவுக்கை தோப்பும்[4]
விட்டு
வெள்ளைக்கரை[5] பாதைகூடி
வேகமுடன் வாரார்கள்.
சுத்தமல்லி[6] நாடும்விட்டு,
சுமைதாங்கி விலக்கு[7] மிட்டு,
கரிசல்குளம்[8] தான் கடந்து.
கவலையுடன் வாரார்கள்.
அதலிஊத்து[9] தான்கடந்து,
அன்னேரம் வாரபோது
கோழிக்கூவு நேரமாச்சே.
கொலுப்பிச்சி தோப்பும்[54] விட்டு
மானூர்[10] நாட்டிலே
மங்கையுடன் வாராரே.

மனதிலே மகன் எண்ணம்

மகனுடைய ஞாபகந்தான்
மனமதிலே தோன்றுதய்யா.
குழந்தையுடை ஞாபகத்தால்
கொண்டவனைத்தான் அழைத்
தாள்
'என் கணவா பிரர்ணநாதா
என் குழந்தையைத்தான் தாரு
மென்றாள்
பிள்ளைக்குத் தான் பால்
கொடுத்து
பிரியமுடன் போவோமென்றாள்

---

1. முடுக்கு—சந்து.
2. கொப்பு—கிளை.
3. ராசகோபால சமுத்திரம்.

4-10 ஊர்ப்பெயர்களும், இடப் பெயர்களும்.

பாலகனைத் தாருமென்று
பத்தினியும் கேட்டாளே.
பாலகன் என்ற சத்தம்
பத்தாவும் கேட்டாரே.

தந்தையின் திகைப்பு

''சங்கரவடிவு தேவியரே
சங்கடங்கள் வந்ததம்மா.
அத்தசாம நேரத்திலே
அவசரமா ஓடிவந்தோம்
பாலகனை மறந்து வந்தோம்
பத்தினியே', என்றழுதார்
'மறந்து விட்டோம' என்ற சொல்லை
மங்கையவள் காதில் கேட்டாள்.

தாயின் துயரம்

அடித்தாளே முகமதிலே
இடித்தாளே அடிவயிற்றில்
முத்துப்போல் கண்ணீரை
முகமெல்லாம் சோரவிட்டாள்.
பவளம்போல் கண்ணீரைப்
பக்கமெல்லாம் சோரவிட்டாள்
''இதுக்கோ தவசிருந்தேன்
இத்தனைக்கோ பேரெடுத்தேன்.
சங்கரன் கோவிலிலே
தவசிருந்து பெற்ற மகன்
கருமம செய்ய பெற்ற மகன்
கைவிட்டு வநதோமைய்யா.
தூங்குகிற பிள்ளையைத் தான்
தொட்டிலிலே போட்டு வந்தோம்.
மானூறு நாட்டிலே
மங்கையரும் நானிருப்பேன்
ஓட்டமும் நடையுமாக
ஓடிப்போய் பிராணநாதா!
தொட்டிலோடு பிள்ளையைத் தான்
தூக்கிக் கொண்டு வாருமைய்யா'
என்று சொல்லும் வேளையிலே—

விருப்பிருந்தும் விதியில்லை

''பாலகனை எடுக்கப் போனால்
பத்தா[1] வரப் போறதில்லை.
கைக்குழந்தை எடுக்கப்போனால்
கணவன் வரப் போறதில்லை
பிள்ளையது வேணுமென்றால்
பெற்று வளர்த்திடலாம்
சீக்கிரமாய் புறப்படு'', என்றான்
சீமான்பொன் பாண்டியனும்
அழுதகண்ணும் சிந்தையுமாய்
அன்னேரம் புறப்பட்டார்கள்.

உக்கிரன் கோட்டை வரல்

மானூரு விலக்கும்[2] விட்டு
மஞ்சவிளை தோப்பும்[3] விட்டு
ரஸ்தா நல்ல பாதைகூடி
நலமுடனே வாரார்கள்.
சாலை பாதை வழியாகத்
தான் நடந்து வாரார்கள்
உக்கிரன் கோட்டையிலே[4]
சங்கரபாண்டித் தேவருட
வளவதிலே வாரார்கள்
பொன்னும் பெருமாள் தேவர் தானே
புகழுடனே வாரார்கள்.

சங்கரன் கேட்டது

சங்கரபாண்டிய தேவரும்தானே
அங்கே வந்து ஏது சொல்வார்
''எங்கிருந்து இங்கே வந்தீர்?
எந்த ஊர் எந்த தேசம்?''
என்று சொல்லும் நேரத்திலே
ஏதுசொல்வார் பாண்டியரும்

பாண்டியனின் பதில்

தென்னாடு தேசத்திலே
சிறந்த தாம்பரவர்ணி அருகிலே
ராசகோபால சமுத்திரத்தில்
நலமுடனே ஆண்டு வந்தேன்.
வீரக்கரையாள ராசாவுக்கும்
வீரமார்த்தாண்ட பாண்டியர்க்கும்
தலையாரி வேலை பார்த்து வந்தேன்.
தானே அவர் இடமதிலே
அரண்மனைக்குத் தலையாரியாக
அண்ணாவே நானிருந்தேன்.

---

1. பத்தா—கணவன்.
2-4. ஊர்ப் பெயர்களும் இடப்பெயர்களும்.

என்னுடைய விதி வசத்தால்
இங்குவந்து சேர்ந்தேனய்யா''
என்று சொல்லும் வேளையிலே—

சங்கர பாண்டியனின் அன்பு

ஏற்ற சங்கர பாண்டியரும்
தன்னுடைய பத்தினியை
சாலாட்சி அம்மாளைத்
தானழைத்தார்
வந்த நல்ல பேர்களுக்கு
வகையுடனே உபசரித்தார்.
போசனங்கள் தான் கொடுத்து
புகழுடனே பேசலுற்றார்.
ஐந்தாறு நாளாக
அன்புடனே தானிருந்தார்.

அன்பான அடைக்கலமே

ஏழாவது நாளையிலே
இருப்பிடமும் தான் கொடுத்தார்
''ஏழு தலைமுறைக்கும்[1]
இங்கே தான் இருக்க வேண்டும்''
பொன்னும் பெருமாள் தேவரும்
பெண் கொடி சங்கர வடிவும்
வளத்தராக்கி பெண்கொடியும்
வாய்ப்பான சடைச்சியுமாய்
நாலு நல்ல பேர்களுமாய்
நலமுடனே ஆண்டு வந்தார்.

விடியுமந்த வேளையிலே

ராசகோபால சமுத்திரத்தில்
நடக்குதய்யா அதிசயங்கள்
விடிந்து ஒரு சாமமாச்சே
வெய்யோனும் உதயமாச்சே
கருங்காட்டு[2] ஊரதிலே
குடியிருந்து வாராளே
இருளி[3] என்ற வண்ணாத்தி
இக்கரைக்கு வாராளே.

வண்ணாத்தியின் வருகை

தாம்பரவர்னி கடக்கும் போது
தானே செருடன் வட்டமங்கே
கெங்கை[4] தாண்டி வாரபோது
செருடனைத் தான் கண்டாளே.
வண்ணாத்தி இருளிக்குத் தான்
வருகுதய்யா யோகமது
அந்தனர்கள் பூசை பண்ணும்
அரசடியும் படி கடந்து
பாளையங்கால் தனைக்கடந்து
பள்ளருட வீதிவிட்டு
சிவன் கோயில் பாதைகூடி
சீக்கிரத்தில் வாராளே[5]
நாகக் குடும்பனுட தோப்பும் விட்டு
நாமம் எழுதிவைத்த கிணறும்[6] விட்டு
காளிகோவில்தான் கடந்து
கட்டுடனே வாராளே,

பிள்ளையின் பேரழுகை

பொன்னும் பெருமாள் தேவர் வீட்டில்
பிள்ளைச் சத்தம் கேட்குதய்யா.
தொண்டைக்கட்டி அழுகுதய்யா
துவளுதே பிள்ளையது
அழுத சத்தம் காதில் கேட்டாள்
அன்புடைய வண்ணாத்தி
அம்மாவென்று சத்தம் போட்டாள்
அங்கேதான் ஒருவரில்லை
அய்யாவென்று சத்தம் போட்டாள்
அங்கேதான் ஒருவரில்லை.
கதவு தன்னைத் திறப்போமென்று
கையாலே தள்ளி பார்த்தாள்.
திறக்கத்தான் முடியவில்லை.
சீக்கிரத்தில் ஓடிவந்தார்.

மன்னனிடம் முறையீடு

ராச அரண்மனை வாசலிலே
நலமுடனே வந்து நின்றாள்.

---

1. ஏழு தலைமுறைகளையும் குறிப்பிட்டுச் சொல்வது வழக்கம்.
2. ஊர்ப்பெயர்.
3. இருளி—வண்ணாத்தியின் பெயர்.
4. கெங்கை—தண்ணீர்.
5. இடப்பெயர்.
6. கிணற்றுக்கல்லில் நாமம் எழுதியிருப்பது வைணவத் தொடர்பைக் காட்டும்.

''அய்யாவே ராச மன்னா
அடியாள் வார்த்தை சொல்லக் கேளும்.
பொன்னும் பெருமாள் தேவர் வீட்டில்
புள்ளை சத்தம் கேட்குதய்யா.
தலையாரி வீட திலே
தாள்போட்டு பூட்டியிருக்கே''

மன்னன் சொன்னது

ராச மன்னன் காதில் கேட்டு
நலமுடனே ஏது சொல்வான்,
''கம்மாளரைக்[1] கூட்டி வந்து
கதவு தன்னைத் திறந்திடுங்கோ
கதவு தன்னைத் திறந்திடுங்கோ
கைக்குழந்தை எடுத்திடுங்கோ
ஆரிரெண்டு வயதினிலே
அரண்மனையில் சேர்க்க வேண்டும்.''

குழந்தையை எடுத்தார்கள்

அப்படியே சேர்ப்பேனென்றாள்
அழகுபிள்ளை வண்ணாத்தி
பொன்னும் பெருமாள் தேவர் வீட்டில்
பூட்டைத் திறக்கலுற்றார்.
பூட்டை மெல்லத் திறந்தாரே
புள்ளையத்தான் எடுத்தாரே

வண்ணாத்தியின் மகிழ்ச்சி

மைந்தனைத்தான் எடுத்தாளே
மார்போட அணைத்தாளே.
குழந்தையைத் தான் எடுத்தாளே
கொங்கைப் பால் கொடுத்தாளே
கருங்காட்டு ஊருக்குத்தான்
கட்டழகி வந்தாளே.
பாண்டிய ராசா அந்நேரம்
பாற்பசுவை அனுப்பி வைத்தார்
பசுவினுட பால் கொடுத்து
பாலகனை வளத்து வாராள்,

சிறப்பாக வளர்த்து வாராள்

தன்னுடைய மகனோட
தான் வளத்து வாராளே
இரண்டு நல்ல பிள்ளைகளை
இன்பமுடன் வளத்து வாராள்.
ஒரு வயது இரு வயது
ஏற்றதொரு பாலகர்க்கு.
தரையிலே விட்டோமானால்
தண்டைக்கால் நோகுமென்று
பூமியிலே விட்டோமானால்
பொற்பாதம் நோகுமென்று
நாளொரு மேனியுமாய்
பொழுதொரு வண்ணமுமாய்
வளத்துவரு நாளையிலே.

பிள்ளைகளில் பேதமுண்டு

வாய்த்ததொரு பாலகனும்
வெள்ளாவித்துறை[2]யதிலே
விளையாடும் குழந்தைரெண்டும்
வண்ணாத்தி பெற்ற மகன்
வந்தவுடன் ஏது செய்வான்.
அழுக்குத் துணி எடுத்து
அடிப்பானே கல்லதிலே.
துண்டுகளை எடுத்து வந்து
துவைத்து மெல்ல உலற வைப்பான்
பாண்டியனார் பெற்ற மகன்
பட்சிகளை முறியடிப்பான்
கவண்[3] கட்டி வீசினாக்கால்
காக்கை வந்து தான் விழுமாம்.
பறந்து போற பட்சிகளைப்
பந்துபோல உருட்டுவானாம்.
அஞ்சு நல்ல வயதினிலே
அட்டாதுட்டி[4] பண்ணுவானாம்

பள்ளிக்கு அனுப்பல்

அந்நேரம் வண்ணாத்தி
ஆதரவாய் ஏது சொல்வாள்.

---

1 கம்மாளர் — ஆசாரி சாதியினர்.
2. வெள்ளாவித்துறை — அடுக்குத்துணிகளை வெளுக்கும் இடம்.
3. கவண்—பறவைகளை வீழ்த்தும் பொறி.
4. அட்டாதுட்டி—குறும்பு.

பாலகர்தான் இருவரையும்
பள்ளிக்கூடம் அனுப்பனுமே
சோதிடரை அழைத்தல்லவோ
சொல்லுகிறார் இருளியவள்
"வாருமையா சோதிடரே!
வார்த்தையொன்று சொல்லக்
கேளும்!
என்னுடைய பிள்ளைகளைப்
பள்ளிக்கூடம் அனுப்பவேண்டும்.
பள்ளிக்கூடம் அனுப்பவேண்டும்
பஞ்சாங்கம் பாருமென்"றாள்.

மூத்தவனின் சாதகம்

மூத்த மகன் சாதகத்தை
முன்னே பாத்து சொல்லு
கின்றார்,
"பள்ளிக்கூடம் போனாலும்
படிக்கத்தான் போறதில்லை.
மூத்தமகன் சாதகத்தில்
முட்டாளாய்த் தானிருப்பான்.
பன்னிரெண்டு வருசகாலம்
பள்ளிக்கூடம் போனாலும்
படிப்பு வரப் போறதில்லை,
பாலகி உன் மகன் தனக்கு
சடயோகமாகத்தான் இருப்பான்
தையலாளே உந்தன் மகன்."

இளையவனின் சாதகம்

இளையமகன் சாதகத்தை
இன்பமுடன் பாருமென்றாள்.
சின்னமகன் சாதகத்தைச்
சீக்கிரத்தில் பாருமென்றாள்.
"சின்னமகன் சொந்தமில்லை.
சீருலகில் புகழுடையான்.
ஒராறு வயது வரை
ஒருகுறையும் இல்லையம்மா
ஈராறு வயதுக்குள்ளே
எக்கலையும் கற்றுணர்வான்.
பாண்டியன் குலமதிலே
பாலகனும் பிறந்ததுண்டு
கம்பெடுத்துக் காவல் செய்வான்
கடவுளென்று மதிப்பார்கள்.
முடிதரியா மன்னனுக்கு
முழுதுமே அரசு செய்வான்.
அவனாலே உந்தனுக்கு
அருமையோகம் வருகுதம்மா.
பன்னிரெண்டு வயதினிலே
பாண்டிய ராசா உனையழைப்
பார்.
பாலகனை வளத்ததற்குப்
பரிசுனக்குத் தரப்போறார்.
நஞ்சை நிலம் மானியந்தான்[1]
நலமுடனே தரப்போறார்.
ராச யோகம் வந்திருக்கே
நலமுடனே பாலகர்க்கு".
இப்படியே சோதிடரும்
இன்பமுடன் சொன்னாரே.

பள்ளியிலே பாண்டியன் மகன்

சோதிடரை அனுப்பிவிட்டு
தானேயந்த இருளியவள்
மறுநாளைத் தினமதிலே
மக்களைத்தான் படிக்கவைத்தார்
பள்ளிக்கூடம் தன்னதிலே
பாலகர்கள் படித்து வாரார்.
அரிச்சுவடி எண் சுவடி
குழிப்பெருக்கம் கொன்றை
வேந்தன்
ஏழு நல்ல வயதினிலே
எழுத்தோலை வாசிப்பானாம்.
பசுக்கதையும் பாரதமும்
பதினெட்டு ராமாயணமும்
பன்னிரெண்டு வயதினிலே
பள்ளிவிட்டு வீடு வந்தான்

கற்ற வித்தைகள்

சிலம்பப் பள்ளிக் கூடமதில்
சேர்ந்து படித்து வாரான்
ஆணுக்கானா ஆணழகன்
அழகுமிக்கியம் பெருமாள் தேவர்
கூடுவிட்டு கூடு பாய்வான்
குறளிவித்தை தானுமுண்டு
மையுமுண்டு சிமிழுமுண்டு
மயக்கு வித்தை பாடமுண்டு
தூத்தும் நல்ல பொடியுமுண்டு
தூவுதற்கு மருந்துமுண்டு
வாடை நல்ல பொடியுமுண்டு
வளைப்பதற்கு மருந்துமுண்டு.
மூலையிலே இருக்கும் பெண்ணை

---

1. மானியம்—இனாமாக அளிப்பது.

முத்தத்திலே வரவழைப்பான்.
அடுக்களையில் இருக்கும்
பெண்ணை
அம்பலத்தில் வரவழைப்பான்.
ஏழறைக்குள் இருக்கும்
பெண்ணை
இழுப்பானே சந்தியிலே.
அம்மியூர மருந்து செய்வான்
ஐநூறு காதவளி
சுளவு[1] தட்டி பறக்க வைப்பான்
தொன்னூறு காதவளி.
உரலைப் பறக்க வைப்பான்
ஒன்பது காதவளி.
துள்ளியங்கே பாய்ந்தானானால்
தொன்னூறடி பாய்ந்திடுவான்.
எட்டியங்கே பாய்ந்தானானால்
எண்ணூறடி பாய்ந்திடுவான்.
சேராத பெண்களைத் தான்
சேர்த்து வைப்பான்
பாண்டியனும்
கூடாத பெண்களைத் தான்
கூட்டி மெள்ள வைத்திடுவான்.
வாழாத பெண்களைத் தான்
வாழும்படி சேர்த்து வைப்பார்.

ஆணழகன் அவனானான்

முன்னழகைக் கண்ட பேர்கள்
மோகிப்பார் ஆயிரம் பேர்.
பின்னழகைக் கண்ட பேர்கள்
பிரமித்து நின்றிடுவார்.
முன்னழகும் பின்னழகும்
முகத்தினுட திருவழகும்
அள்ளித் தெளித்ததுபோல்
அங்கமெல்லாம் தேமல்களும்
கோரியங்கே தெளித்ததுபோல்
குங்குமுகத் தேமல்களும்
வாரியங்கே தெளித்ததுபோல்
வைரமுத்துத் தேமல்களும்

வயது பன்னிரண்டு

பன்னிரெண்டு வயதாச்சே
பரந்த மனசாச்சே
அன்னேர வேளையிலே
அரசகுல பாண்டியரும்
வீரக்கரையாள ராசாவும்
வீரமார்த்தாண்ட ராசாவும்—
பொன்னும் பெருமாள் தேவருட
புதல்வனைத்தான் பார்க்க
வேண்டும்.

காவலன் கட்டளை

காவலாளைத் தானழைத்து
கட்டழகர் ஏது சொல்வார்,
''கருங்காட்டு ஊரதிலே
கன்னி இருளியவள் வீடதிலே
வண்ணாத்தி வீடதிலே
வளருகின்ற பாலகனை
மெக்கியம் பெருமாள் பாலகனை
மேன்மையுடன் கூட்டிவாரும்.

காவலாளர் சொன்னது

அன்னேரம் தூதுவர்கள்
அவசரமாய் ஓடிவாரார்.
கருங்காட்டு ஊரதிலே
காலாளும் வந்தல்லவோ
இருளியென்ற வண்ணாத்தியை
இன்பமுடன் தானழைத்தார்.
பொன்னும் பெருமாள் தேவருட
புகழ் பெரிய பாலகனை,
ராசமன்னர் அழைக்கச்
சொன்னார்.
நலமுடனே புறப்படென்றார்.

அரண்மனைக்குச் செல்ல அலங்காரம்

அன்னேரம் இருளியவள்
அழைத்தாளே இளவரசை.
''அழைக்கின்றார் ராசமன்னர்
அருமையுடன் வாராய்''என்றாள்
அன்னேரம் வேளையிலே
அழகு மெக்கும் பெருமாளவர்.
கச்சை வரிந்து கட்டி,
கருங்கச்சை சுங்கலிட்டு,
முன்புறத்துச் சுங்கலிலே
மோகினியாள் சக்கரமாம்.
பின்புறத்துச் சுங்கலிலே
பிரமதேவன் அச்சரமாம்
வலதுபுறம் சுங்கலிலே
வடமலையான் அச்சரமாம்.
இடதுபுறம் சுங்கலிலே

---

1. சுளவு—முறம்.

ஏமனுட சக்கரமாம்.
சந்திரகாந்தி பொட்டுக்களாம்
சர்வத்துப்பட்டு வல்ல வட்டாம்
தங்கநல்ல தளுகையிலே
தங்கப் பூவாம் வெள்ளிப்பூவாம்
புஷ்பவகை எடுத்தல்லவோ
புகழுடனே வாரார்கள்.

அரண்மனைக்கு வருகையில்

இருளியவள் பின்னுமாக
இளையமகன் முன்னுமாக
வண்ணாத்தி பின்னுமாக
வளத்தமகன் முன்னுமாக
கருங்காட்டு நகருமிட்டு
காளிகோவில் தான்கடந்து
வெள்ளாவித்துறை கடந்து
வேகமுடன் வாரார்கள்.
தாம்பரவர்ணி ஓரமாக
தானே அவசரமாய் வாரார்கள்.
விஷ்வநாதர் வாசல்வழி
வேகமாக வாரார்கள்.
தாம்பரவர்ணி நதிகடந்து
தானேபாளையங் காலுமிட்டு
சிவன்கோவில் தான்கடந்து
சீக்கிரமாய் வாரார்கள்.
பள்ளருட தாவளமும்
பட்டரையும் களஞ்சியமும்
நாகக் குடும்பனுட தோப்பும் விட்டு
நாமம் எழுதிவைத்த கிணறும் விட்டு
கனகக் குடும்பனுட வளவுமிட்டு
காளிகோயில் தான்கடந்து
துர்க்கை என்ற காளிகோவில்
சுற்றிவந்து கும்பிட்டார்கள்.
ராசனுடைய அரண்மனைக்கு
நலமுடனே வாரார்கள்.

சீரான வரவு

மெக்கிம் பெருமாள் பாலகனும்
மேகம் போலே வாராரே
அரண்மனைக்குப் பாலகனும்
ஆளிபோல வாராரையா.
சிங்கம் போல வாராரையா
சீரான பாண்டியனும்.

சிறப்பான வரவேற்பு

மண்டியிட்டு வணங்கி நின்றார்
மன்னன் பதில் வணக்கமிட்டார்
சிம்மாசனத்தில் இருந்த ராசா
திடுக்கிட்டு இறங்கி வந்து
கைகுலுக்கி அழைத்து வந்து
கமலாசனத்தில் அமர வைத்தார்.

அரண்மனையில் வேலை

அம்பது பொன் சம்பளமும்
அருமை பாலகனே தாரோமென்றார்.
அம்பது பொன் சம்பளமும்
அன்றாட செலவுநானே
அறுவது பொன் வெகுமதியும்[1]
அருமையாகத் தந்திடுவேன்
அரண்மனையில் இருக்க வேண்டும்.
அப்படியே சம்மதித்தான்
அழகு மெக்கிம் பெருமாளும்.

வளர்த்தவர்களுக்கு வேந்தன் பரிசு

இருளியென்ற பெண்ணவளை
ஏற்றராசா உடனழைத்து
அஞ்சு ஏக்கர் நிலமதுதான்
அவளுக்குச் சம்பளமாம்
அன்று எழுதி வைத்ததுதான்
இன்றுவரை துதிக்குதய்யா.
வாகை குளம்[2] தன்னதலே
வண்ணாத்தி போக்கு[3] என்றார்

பாண்டியனின் பராக்கிரமங்கள்

இப்படியாய் அரண்மனையில்
இருக்கின்ற வேளையிலே,
அடங்காத குதிரைகளை
அடக்கிவைப்பான் பாலகனும்.

---

1. வெகுமதி—பரிசு.
2. ஊர்ப்பெயர்.
3. வண்ணாத்தி போக்கு—நிலத்தின் பெயர்.

கட்டுக்கடங்கா குதிரைகளைக்
கலங்கா அடித்திடுவான்.
தீராத வழக்குகளைத்
தீர்த்து வைப்பார் பாண்டியனும்.

நாய் வளர்ப்பில் நாட்டம்

இப்படியாய் இருக்கும் போது
ஏது செய்வார் மெச்சும்
பெருமாள்
நாய் வளர்க்க வேணுமென்று
நலமுடனே பாண்டியரும்
ராஜபாளையம் ஊருக்குந்தான்
நலமுடனே எழுதலுற்றார்[1]
எண்ணி எட்டு நாளைக்குள்ளே
ரெண்டு நாய்கள் அனுப்ப
லுற்றார்
நாய்களைத் தான் வளர்க்க
லுற்றார்
நல்ல மெச்சும் பெருமாளும்.
வீமனென்றும் துஷ்டனென்றும்
வீரப்பேர் கொடுத்தாரய்யா.

பாண்டியனின் தோற்றம்

ஈட்டி சமுதாடும்
ஏற்றதொரு குத்துக் கம்பும்
மீசை முறுக்கழகும்
மெய்சேர்ந்த பொட்டழகும்
கம்பெடுத்து வெளியில் வந்தால்
கடவுளென்று வணங்குவார்கள்
வண்ணாத்தி மகனுக்கு
வந்ததய்யா கல்யாணம்
கருங்காட்டு ஊரதிலே
கன்னி இருளி வண்ணாத்தி
மகனுக்குக் கல்யாணம்
மங்களமாய்நடத்தலுற்றாள்.
தாம்பூலம் வாங்குதற்கு[2]
தானழைத்தார் பாண்டியரை
தாம்பூலம வாங்குதற்கு
தானும் வந்த பாண்டியரும்,

மணப்பெண்மீது மோகம்

வண்ணாரப்பெண்ணைத் தானும்
வகையுடனே பார்த்தாரய்யா.
வண்ணாரப் பெண்மேலே
வைத்தாரே மோகமது
கன்னியின் மேல் காதல்
கொண்டார்
கட்டழகர் மெச்சும்
பெருமாள்.

அம்மையிடம் சொன்ன ஆசை

அன்னேரம் பாண்டியரும்
அம்மையிடம் ஏது சொல்வார்
பன்னிரெண்டு வயதுவரை
பக்குவமாய் எனை வளத்தாய்
ராசாவின் இடமதிலே நல்ல
சேவகமும் வாங்கி தந்தாய்.
உரிமையுடன் வளத்ததினால்
உனக்குச் சம்பளமும்
தந்தாரம்மா.
என் வார்த்தை தட்டாமல்
எனக்குப் பதில் சொல்லுமம்மா—
உன்
மருமகளும் நானுமிங்கே
மருவி[3] விளையாடனுமே
மன்மதனும் ரதியும்போல்
மகிழ்ந்து விளையாடனுமே;
உன்னுடைய தயவதுதான்
உத்தமியே வேணுமம்மா.''

வண்ணாத்தி சொன்ன விளக்கம்

அன்னேரம் வண்ணாத்தியும்
அருமையுடன் ஏது சொல்வாள்,
''மருமகள் இடத்திலே தான்
மங்கையரும் நான்கேட்டு
சம்மதத்தால் ஆனக்கால்
சமர்த்துள்ள என் மகனே!
வெள்ளாவி துறையதிலே
வெள்ளை அரசு மரமதிலே
தெற்கே போற கொப்பதிலே
சிகப்புபட்டு போட்டிருப்பேன்.
மாட்டேனென்று சொல்லி
விட்டால்
மகனேயொன்று சொல்லக்கேளு.
வடக்கப் போற கொப்பதிலே

---

1. ராஜபாளையத்தில் நல்ல நாய்கள் உண்டு.
2. திருமண வீட்டில் உயர்ந்த பெரியவர்களுக்குத் தாம்பூலம் அளிப்பதுண்டு.
3. மருவி — கலந்து.

வாடப் போட்டிருப்பேன் வெள்ளைச் சீலை
வெள்ளைச் சீலை போட்டிருந்தால்
வேந்தே நீ வரவேண்டாம்,
சிவப்புச் சீலை போட்டிருந்தால்
சீக்கிரத்தில் வந்திடுங்கோ''
அன்னேரம் பாண்டியனை
அரண்மனைக்கு அனுப்பி வைத்தாள்.

மாமியும் மருமகளும்

மறுநாளைக் காலையிலே
மகனுமங்கே ஏது செய்வான்?
கழுதைகளைப் பத்திக் கொண்டு
கட்டுடனே புறப்பட்டான்.
உவர்[1] அள்ளி வாரேனென்று
உத்தமனும் போறானே
மாமியாரும் மருமகளும்
மகிமையுடன் தனித்திருந்தார்.

மாமியார் மெச்சியது

கோபால சமுத்திரத்தில்
கொற்றவாளி வம்மிசத்தில்
பாண்டியமார் வம்மிசத்தில்
பக்குவமாய் பிறந்த பிள்ளை.
தாயாரும் தகப்பனும்
தனியே போட்டுவிட்டு போய் விட்டார்.
பன்னிரெண்டு வயதுவரை
பாலகனை நான் வளத்தேன்.
பன்னிரெண்டாம் வயதினிலே
பாண்டிராசனிடம் ஒப்படைத்தேன்.
ஒன்பது ஏக்கர் நிலமதுதான்
சம்பளமாய் தந்தார்கள்.
உன்மேலே மனதாகி
உருகுகிறான் உன்னாலே
மையல் கொண்டு மயங்குகிறான்
மருமகளே என்ன செய்வேன்.
அஞ்சாறு நாளாச்சே
அன்னந் தண்ணி[2] இறக்கவில்லை.
உன்னாலேதான் பெண்ணரசே
உயிர் கொடுக்க வேணும் கண்ணே.
ஆகட்டுமென்று சொன்னால்
ஆயிரம் பொன்தான் கொடுப்பார்.
நாவதுதான் அசைத்தாயானால்
நாலாயிரம் பொன் தான் கொடுப்பார்''
என்று சொல்லும் வேளையிலே

மருமகளின் மறுமொழி

ஏதுசொல்வாள் மருமகளும்.
''என்ன வார்த்தை சொல்ல வந்தாய்
என்னுடைய அத்தையரே.
நம்முடைய சாதியிலே
நாம் தவறி நடந்தோமாணால்
சாதி விலக்கி வைப்பார்
தரக்குறைவாய் பேசிடுவார்.
நன்மை தீமைக்குச் சேரமாட்டார்
நம்மிடத்தில் சம்மந்தம் செய்ய மாட்டார்.''
என்று மருமகளும் சொன்ன போது—

மாமியாரின் மாற்றுமொழி

ஏது சொல்வாள் மாமியாரும்,
''அரசரைப் பகைத்தோமானால்
அறுப்பாரடி நம்தலையை.
பாண்டியரைப் பகைத்தோமானானால்
பழுதுவந்து சேருமடி.
ஊரார் உறன்முறையார்
ஒருவருமே வேண்டாம் கண்ணே.
அரசனுட உறவிருந்தால்
ஆயுள்வரை ஆளலாமே''
என்றுசொல்லும் வேளையிலே

மருமகளின் சம்மதம்

ஏதுசொல்வாள் மருமகளும்
'அப்படியே நல்லதென்றாள்''

---

1. உவர்,-துணி வெளுக்கப் பயன்படும் மண்ணாகும்.
2. அன்னந்தண்ணி உணவும் நீரும்.

அன்னேரம் பெண்கொடியாள்.
வெள்ளாவி துறையதிலே
வெள்ளை அரசமரம் தன்னதிலே
தெற்கப் போற கொப்பதிலே
சிவப்புப்பட்டு கட்டலுற்றார்.

பாண்டியன் பார்த்த அடையாளம்

கோபால சமுத்திரத்தில்
கொற்றவாழி வம்முசத்தில்
மெச்சும் பெருமாள் பாண்டியரும்
மேன்மையுடன் ஏதுசெய்தார்.

சாயங்கால நேரத்திலே

சந்தியா வந்தனம்[1] செய்ய வந்தார்.
வெள்ளாவி துறையைத் தானும்
வேந்தனுமே பாக்கலுற்றார்.
பார்த்ததொரு நேரத்திலே
பாண்டியர்க்கு மோகமாச்சே
கண்டாரே கொடியைத் தானும்
காதல் கொண்டார் பாண்டியரும்.
வண்ணாரப் பெண்மேலே
வைத்தாரே ஆசையல்லோ.

பள்ளி கொள்ள புறப்பட்டார்

மூந்தி கருக்கலிலே[2]
முதற்சாமவேளையிலே,
கச்சை வரிந்து கட்டி
கருங்கச்சை சுங்கலிட்டு,
முன்புறச் சுங்கலிலே
மோகினியாள் அச்சரமாம்.
பின்புற சுங்கலிலே
பிரமதேவன் அச்சரமாம்
இடதுபுற சுங்கலிலே
ஏமனுட அச்சரமாம்
வலதுபுற சுங்கலிலே
வடமலையான் அச்சரமாம்
சந்திரகாந்த பொட்டுகளாம்.
சருகை துப்பட்டா வல்ல வட்டாம்.
குத்துக்கம்பு வல்லயமாம்.
கொடுக்கரிவாள் தானெடுத்தார்.
பாசக் கயிறு கைபிடித்து
பாண்டியனாரும் பயணம் வைத்தார்.
நாய்களைத் தான் அழைத்துக் கொண்டு
நலமுடனே வாராரே

தெய்வங்களைத் தெரிசித்தல்

துர்க்கை என்ற காளி கோவில்
சுற்றி வந்து தெண்டனிட்டார்.
காச்சி நாயும் பூச்சி நாயும்
கட்டுடனே அழைத்துக்கொண்டு
பள்ளருட தாவளமும்
நெல்பட்டரைக் களஞ்சியமும்
நாகக் குடும்பனுட தோப்பும் விட்டு
நாமமிட்ட கிணறும் விட்டு
சிவன் கோவில் தான் கடந்து
சிறந்த பாளையங்கால் கடந்து

தாம்பிரவர்னி கால் கடந்து
தானே வாரார் பாண்டியரும்
விஸ்வநாதர் ஆலயமும்
வெள்ளாவித் துறையுமிட்டு
கருங்காட்டு நகரதிலே
கட்டழகர் வாராரே.

வண்ணாரப் பெண்ணின் வரவேற்பு

கண்டாரே பாண்டியரைக்
கட்டிலிட்டாள் மெத்தையிட்டாள்;
கட்டிலிட்டு மெத்தையிட்டு.
கனகமணி விளக்குமேத்தி
வெளுத்துவைத்த சேலைகளை
விரிததாளே மெத்தை மீது

கூடிக்களித்தனர் கலவியில்

வண்ணாரப் பெண்ணவளும்
வந்ததொரு பாண்டியனும்
மன்மதனும் ரதியும் போல்
மருவி விளையாடலானார்.
வேண்டுமட்டும் விளையாடி
வெற்றிலையும் தின்று துப்பி

---

1. சந்தியா வந்தனம்—மாலையில் நடக்கும் சூரிய வணக்கம்.
2. மூந்தி கருக்கல்.

விடியவொரு சாமத்திலே
வெண்கோழி சத்தம் கேட்டு
தன்னுடைய அரண்மனைக்கு
தானே வந்தார் பாண்டியனும்
அன்று முதல் பாண்டியனும்
அனுதினமும் போய் வருவார்
இப்படியே சில காலம்
இன்பமாய் நடக்குதய்யா.

பெற்றோர்களின் இறப்பு

வடநாடு தேசத்திலே
வாய்த்த உக்கிரங்கோட்டையிலே
சங்கரபாண்டியன் வளவதிலே
சந்தோசமாக ஆண்டு வந்தார்.
பொன்னும் பெருமாள் தேவரும்
சங்கர வடிவு அம்மாளும்
வளத்த ராக்கி பெண் கொடியும்
வகையுடனே இருக்கும்போது
தாயாரும் தகப்பனும்
தாளடைந்தார் சிவலோகம்.
மக்கள் இரு பேரும்
மயங்கியே இருந்தார்கள்.

விவகார வழக்கொன்று

இப்படியாய் இருக்கும்போது
ஏற்றதொரு நாடதிலே.
உக்கிரங் கோட்டையிலே
ஒரு விவகார வழக்கதுதான்
எட்டோட எட்டு நாளாய்
எடுத்து பேசினர் வழக்கைத் தானே.
விவகாரம் முடியவில்லே.
வேறுசோலிகளும்[1] நடக்கவில்லே.

ஒருவர் சொன்ன யோசனை

அதிலொரு பாண்டியரும்
அன்புடனே ஏது சொல்வார்.
தொன்னாடு தேசத்திலே
சிறந்த தாம்பரவரினி கரையதிலே
கோபால சமுத்திரத்தில்
கொற்றவாழி வம்முசத்தில்
அரண்மனைக்குத் தலையாரி
அதிகாரி கர்த்தாவாம்
அவரிடத்தில் போறோமானோல்
அன்னே முடிக்கலாமே விவகாரத்தை''

வழக்குக்காய் வழி நடந்தார்

அன்றைய தினம் கழித்து
அடுத்த நாள் காலையிலே
உக்கிரங் கோட்டைக்காரர்
ஊர் அடங்கலுமே பயணம் வைத்தார்.
கட்டமுது கட்டினார்கள்
கடுகெனவே வழி நடந்தார்.
தாம்பரவர்ணி கரையதிலே
ஸ்நானம் செய்தார் எல்லோரும்
கட்டுச்சாதம் அவிழ்த்து வைத்து
கட்டுடனே சாப்பிட்டார்கள்,

பெருமாளைப்பார்க்கும்போது

சாப்பிட்டு இளைப்பாறி
சந்தோசமாக எல்லோரும்
மெச்சும் பெருமாள் பாண்டியரை
மேன்மையுடன் பார்க்க வேண்டும்
என்று சொல்லி வார போது
மெச்சும் பெருமாளைக் கண்டார்கள்.
சங்கர பாண்டிய தேவருமே
சந்தோசமாக வணங்கி நின்றார்'
பதில் வணக்கம் செய்தாரய்யா
பாண்டியர் மெச்சும் பெருமாள்.

வரவினை விசாரித்தல்

''எந்த ஊரு எந்த தேசம்
என்ன செய்தி'' சொல்லு மென்றார்.
உக்கிரங் கோட்டை நகர்
உற்ற சங்கர பாண்டிய தேவர்
சொல்லுகிறார் பாண்டியரும்
சோதிக்கிளி வாய்திறந்து
மூங்கிலடித் துறைலேயே

---

1. சோலி—வேலை.

முடிக்க வேண்டும் விவகாரத்தை[1]
தாம்பிரவர்ணி கரையதிலே
சவுக்கையடி தோப்பதிலே
தோணித் துரையருகே
தொளாயிரம் பேர் கூடினார்கள்.

பெருமாளின் தோற்றம்

மெச்சும் பெருமாள் தேவரும்
மேன்மையுடன் வாராரே.
சாப்பிட்டு இளைப்பாறி
தாம்பூலம் போட்டுக் கொண்டு
குதிரையேறி வரும்போது
கூட்டி வாரார் நாய்களிரண்டை
சிங்கம்போல வாராரே
சீமான் அந்த பாண்டியரும்
விவகாரம் கேட்டு வாரார்
விசியங்களை அறிந்து வாரார்.

தீராதது தீர்ந்தது

தலைவருடைய வழக்கையெல்லாம்
தான் முடித்தார் பாண்டியரும்
தீராத விவகாரத்தைத்
தீர்த்தாராம் பாண்டியரும்.
உக்கிரங் கோட்டைக்குத் தான்
ஊரெல்லாம் புறப்பட்டார்கள்.

வந்து நின்ருள் வண்ணாத்தி

மூங்கிலடித் துறை கடந்து
முன்னே வாரார்கள் பாண்டியர்கள்.
வெள்ளாவித் துறையதிலே
வெளுத்து நின்ற வண்ணாத்தி
கூட்டத்தைக் கண்டாளே
குடிகேடு வந்திருக்கோ
ஓடிவாராளே வண்ணாத்தி
உத்தமர் சங்கர பாண்டியரிடம்
''உங்கள் விவகாரம் முடிந்ததுவோ
உத்தமரே சொல்லுமய்யா''

புகழ்பாடி போற்றினார்

''மறவருடைய விவகாரத்தை
மங்கையரே கேட்கலாமோ
உக்கிரங்கோட்டை விவகாரத்தை
ஒரு ஊரிலும் முடிக்கவில்லை.
முடியாத வழக்குத் தானே
முடிந்ததடி இந்த ஊரில்.
தீர்த்தபதி வம்முசத்தில்
சிங்கக் குட்டி முடித்ததடி.
பாண்டியமார் வம்முசத்தில்
பதினாயிரம் பேர் இருக்கமடி
மெச்சும் பெருமாளைப்போல்
மேன்மை பெற்றோர் ஒருவரில்லை.''
என்று சொல்லும் வேளையிலே
ஏது சொல்வாள் வண்ணாத்தி.

தொடக்க கதை சொன்னாள்

''அய்யாவே பாண்டியரே
அடியாள் வார்த்தை சொல்லக் கேளும்
இவருடைய தாய் தந்தையர்கள்
ஏற்ற பேர் சொல்லுகின்றேன்.
பொன்னும் பெருமாள் தேவரும்
பூவாள்[2] சங்கர வடிவு அம்மாளும்
வாழ்ந்து வரும் நாளையிலே
வந்ததய்யா பஞ்ச காலம்.
பஞ்ச நல்ல காலத்திலே
பகுதி கட்ட முடியாமல்
இந்த ஊரைவிட்டுப் பயணமானார்
மூத்த மகள் வளத்தராக்கியும்
இளைய மகள் சடைச்சியரும்
தட்டுமுட்டு சாமான்களை
தானே சுமை கட்டிக் கொண்டு
துவளும் குழந்தையைவிட்டுவிட்டு
துரிதமுடன[3] பயணம் வைத்தார்
மைந்தனைத் தொட்டிலில் போட்டு விட்டு

---

1. விவகாரம் - வழக்கு.
2 பூவாள்—பூவினைப் போன்ற சிறப்புக்குரியவள்.
3. துரிதமுடன்—வேகமுடன்.

மதிமறந்து போய்விட்டார்கள்.
காலையிலே எடுத்து வந்து
கண்மணியை நான் வளர்த்தேன்.
அஞ்சு நல்ல வயதிலேதான்
அறிவு பள்ளியிலே படிக்க வைத்தேன்.
ஏழுநல்ல வயதிலே தான்
எக்கலையும் படிக்க வைத்தேன்.
பன்னிரண்டு வயதிலேதான்
பாண்டியரிடம் ஒப்படைத்தேன்.
இவனுடைய தாய் தந்தையர்கள்
எந்தஊர் போனாரோ
எவ்விடத்தில் சென்றாரோ.

சங்கர பாண்டியனின் சந்தோசம்

என்று சொல்லும் வேளையிலே
ஏதுசொல்வார் தலைவருமே.
"இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே
இந்தஊர் வந்து சேர்வேன் பெண்ணே."
பாலும் பழமும் தான்கொடுத்தாள்
பாண்டியரும் பசியாறி தான் போனார்.

தமக்கைகளிடம் தெரிவித்தல்

வளத்தராக்கி சடைச்சியரை
வரவழைத்தார் இருபேரையும்
"உங்களுடை நாட்டுக்குத்தான்
ஒரு விவகாரம் கொண்டு போனோம்.
அந்த நல்ல விவகாரத்தை
அருமையாக முடித்தாரம்மா.
உன்னுடைய தம்பியென்று
ஊரெல்லாம் புகழுதம்மா.
அரசுகட்டி ஆளுகின்றார்
அருமையான தம்பி," என்றார்.

தம்பியைக் காணவரல்

மெச்சும் பெருமாள் பாண்டியரும்
மேன்மையுடன் ஆண்டுவாரார்.
அக்காளும் தங்கையரும்
அன்னேரம் பயணம் வைத்தனர்.
உக்கிரங் கோட்டை விட்டு
உத்தமனும் கூட்டிவாரார்.
மானூறு விலக்கும் விட்டு
மங்கையரைக் கூட்டிவாரார்
அரலி ஊத்து தான்கடந்து,
அந்தக் கருச குளம் பாதைகூடி
சுத்தமல்லி தான்கடந்து,
சுமைதாங்கி விலக்குமிட்டு
வெள்ளக்கரை பாதை கூடி
வேகமுடன் வாரார்கள்.
தாம்பிரவர்ணி தான்கடந்து
சந்தோசமாக வாரார்கள்
ராச கோபால சமுத்திரத்தில்
நலமுடனே வாரார்கள்.
மெச்சும் பெருமாள் பாண்டியனே
மேன்மையுடன் பாத்தாரய்யா.

சிங்கார பாண்டியன் சொன்னது

"உங்களுடைய தாய்தகப்பன்
ஊரைவிட்டு புறப்படையில்,
துவளும் குழந்தையிலே உன்னைத்
தொட்டிலிலே போட்டுவிட்டு,
பெண்மக்கள் இரண்டுபேரை
பிரியமுடன் அழைத்துக் கொண்டு,
என்னுடைய ஊரதிலே
ஏகமுடன் [1] தானிருந்தார்.
தாயாரும் தந்தையாரும்
தமக்கையரை தான் மறந்து,
மாண்டு மடிந்தார்கள்
மண்ணுலகை மறந்தார்கள்.
அக்காமார் இருபேரை
அருமையுடன் நான் வளத்தேன்.
இதுவரையும் பாதுகாத்தேன்,"
என்றுசொல்லி ஒப்படைத்தார்.

திருமண எண்ணம்

ஒப்படைத்த தமக்கையரை
உடன் அழைத்தார் வீடதற்கு

1. ஏகமுடன் — தனிமையுடன்.

ஆதியிலே உள்ள வீட்டில்
அன்புடனே ஆண்டு வாரார்.
வளத்தராக்கி பெண்ணுக்குத் தான்
வயது மெள்ள வந்ததய்யா.
மாப்பிள்ளை பார்க்கணுமே
மாங்கலியம் பூட்டணுமே
தாலிகட்ட மாப்பிள்ளைதான்
தான்பார்க்க வேணுமென்றும்
கலியாணம் நடத்தனுமே
கண்குளிரப் பாக்கனுமே.
என்று சொல்லி பாண்டியரும்
எண்ணுகின்ற வேளையிலே—

கொழுமடையில் பெண் கேட்டல்

கொழுமடை[1] ஊரதிலே
குடியிருக்கும் பாண்டியரில்
காளிமுத்துத் தேவரவர்
கட்டுடனே ஆண்டுவாரார்.
அவருடைய பாலகர்தான்
ஆரியப்பட்டத் தேவரவர்.
ஆரியப்பட்டத் தேவருக்கு
அந்த ராக்கிப் பெண்ணைக்
கேட்டார்கள்.

பெண்கொடுக்க நிபந்தனை

"அன்னேரம் பாண்டியரும்
ஆதரவாய் ஏது சொல்வார்.
கொளுமடை ஊருக்குத்தான்
பெண் கொடுக்க வேண்டுமானால்
அந்த நல்ல ஊரைவிட்டு
இந்த ஊருக்குத்தான் வர வேண்டும்.
கோபால சமுத்திரத்தில்
குடியிருக்க வேண்டு",மென்றார்.

நிச்சய தாம்பூலம்

அப்படியே சம்மதித்தார்
ஆரியப்பட்டத் தேவரவர்.
நிச்சயத் தாம்பூலம் செய்ய லுற்றார்
நின்றதொரு சனங்களெல்லாம்.

பஞ்சாங்கம் பார்த்தல்

பஞ்சாங்கப் புரோகிதரைப்
பார்த்தழைத்து வந்தார்கள்.
பொருத்தமது பார்க்கலுற்றார்
புகழ்பெரிய பாண்டியமார்.
இருபத்தொரு பொருத்தமது
ஏகமுடன் இருக்குதய்யா.

முகூர்த்தப் பட்டோலை

சித்திரை மாத்தையிலே
சிறந்த இருபதாம் தேதியிலே
முகூர்த்த பட்டோலை[2] எழுத லுற்றார்
முடிதரியா பாண்டியர்கள்.

முகூர்த்தக்கால் நடல்

சித்திரை மாத்தையிலே
சிறந்த இருபத்தோராம் தேதியிலே
நாள் கால்[3] நாட்டினார்கள்
நாள் செங்கல்[4] போடலுற்றார்.
முத்தைப் பிளந்தார்கள்
முகூர்த்தக் கால்[5] போட லுற்றார்.

பந்தல் அலங்கரித்தல்

நாணல் பிளந்தார்கள்
நாற்காதம் பந்தலிட்டார்.
பதினைந்து காதவழி
பவளத்தால் பந்தலிட்டார்

---

1. ஊர்ப்பெயர்.
2. முகூர்த்தப் பட்டோலை—முகூர்த்த நாளைக் குறிப்பிட்டு ஓலையில் எழுதுவது.
3. நாள் கால்—பந்தலுக்கான காலை நாட்டுதல்.
4. நாள் செங்கல்—மணமேடைக்கான செங்கல்லை வைத்தல்.
5. முகூர்த்தக்கால்—அரசு மரத்துக் கிளையோடு பூ, வெற்றிலை வைத்து கட்டி நடுதல்.

பந்தலிட்ட வாசலிலே
பார்வாழை தான் நிறுத்தி
சாந்தாலே தரைமெழுகி
சந்தணத்தால் கோலமிட்டு
கோலமிட்ட வாசலிலே
குலைவாழை தான்நிறுத்தி

மணப்பெண்ணை அழகு செய்தல்

வளத்த ராக்கிப் பெண்கொடியை
வகையுடனே ஏதுசெய்தார்.
சம்பங்கி எண்ணெகொண்டு
தலை தடவி சிக்கெடுத்தார்.
பீதாம்பர பட்டெடுத்துப்
பிரியமுடன் கட்டலானார்.
ஆபரண நகைகளெல்லாம்
அலங்கரித்தார் பெண்கொடிக்கு.

மணவறையில் மாங்கல்யம்

மாப்பிள்ளையும் பெண்ணையும் தான்
மணவறைக்கு அழைத்துவந்தார்.
ஊராரும் உரண் முறையாரும்
உற்றாரும் ஒன்று சேர்ந்தார்.
பஞ்சாங்க புரோகிதரும்
பார்த்து ஓமம் வளக்கலுற்றார்.
ஓமப்புகை எழும்ப
ஊரெல்லாம் குலவையிட்டார்.
வாத்தியங்கள் எல்லாமே
வகை வகையாய்த் தான் முழங்க.
மாணிக்கச் சங்கதுதான்
வலப்புறத்தில் நின்றூத[1]
மாங்கலியப் பெண்களெல்லாம்
வாழ்த்தியே குலவையிட்டார்.[2]

மாங்கலிய முடிச்சுகள்

ஆரியப்பட்ட பாண்டியரு
அந்நேரம் வேளையிலே
செப்புதன்னைத் தான் திறந்தார்
திருமாங்கலியம் கையிலெடுத் தார்.
பிரமமுடி விஷ்ணுமுடி
பீஷ்மமுடி மூன்றுமுடி[3]
பெண்கொடிக்கித் தான்முடித் தார்.

மணவறையைச் சுற்றல்

மாப்பிள்ளையும் பெண்கொடியும்
மணவறையைச் சுற்றிவந்தார்.
அம்மிமிதித்தார்கள்.
அருந்ததியைப் பார்த்தார்கள்.
ஆலாத்திப் பெண்களெல்லாம்
ஆவலுடன் எடுத்து வந்தார்.
வந்த சனங்களுக்கு
வழங்கலுற்றார் தாம்பூலம்.
சாப்பிட்டு இளைப்பாறி
தாம்பூலம் தரித்தார்கள்.

பட்டின பிரவேசம்

மறுநாளைத் தினமதிலே
மன்னவர்க்கும் தேவியர்க்கும்.
பட்டினபிரவேசம்[4] நடத்த லுற்றார்;
பாண்டியமார் எல்லோரும்.

எண்ணைச் சடங்கு

ஏழாநீர் கழிவதற்கு
எண்ணைச் சடங்கு[5] நடத்த லுற்றார்.
வந்திருந்த பாண்டியமார்
வரிசைகளைச் செய்யலுற்றார்.

இனிதாக முடிந்தது

அவரவர்கள் ஊர்களுக்கு
ஆதரவாய்ப் போகலுற்றார்.
ஆரியப்பட்டத் தேவரும்
அம்மை வளத்தராக்கியுந்தான்

---

1. சங்கு—திருமணத்துக்கு ஊதப்படும் சங்கு.
2. குலவை—நாவால் விடப்படும் குலவை ஒலி. (மங்கள முள்ளது).
3. மூன்று முடி—தாலிக் கயிற்றில் போடப்படும் முடிச்சுகள்.
4. பட்டின பிரவேசம்—மணமக்கள் ஊர்கோலம் செல்லுதல்.
5. எண்ணைச் சடங்கு—

மன்மதனும் ரதியும்போல்
மவுசாக ஆண்டுவந்தார்.
வாழ்ந்திருந்தார் சிலகாலம்
வர்ணநிறக் கிளி போல.
ஆரியப்பட்ட தேவர்தானே
அப்பாவூரை மறந்து விட்டார்.

சடைச்சிக்கும் சடங்கு

இப்படி இருக்கும்போது
ஏற்ற தங்கை சடைச்சியவள்
பதினாறு வயததிலே
பக்குவதியாய்[1] இருக்காள்.
சாஸ்திரம் பாத்தல்லவோ
சடங்கு கழித்தார்கள்.

பெண் கொடியின் பேரழகு

பெண்ணுக்குப் பெண்ணழகி
பேதைமயிலழகி.
தங்கத்தைச் சரிக்கிடலாம்[2]
தனிவண்டை ஒப்பிடலாம்
பொன்னை சரிக்கிடலாம்
பூமாதை ஒப்பிடலாம்.
பொன்னை ஒளிக்கியங்கே[3]
பூமியிலே கவிழ்த்ததுபோல்,
தங்கத்தைக் காச்சியல்லோ
தரையிலே கவிழ்த்தது போல்,
ஈயத்தைக் காச்சியல்லோ
இலையிலே கவிழ்த்ததுபோல்,

கறுப்பில்லா கட்டழகி

இலுமிச்சைப் பழத்துக்கானால்
இருண்ட கருப்புமுண்டு.
மாதுளம் பூவிலேயும்.
மையிருண்ட கருப்புமுண்டு.
சூரியனுக்கு ஆனாலும்
சுற்றிவர கருப்புமுண்டு.
சந்திரனுக்கு ஆனாலும்
சற்றே கருப்புமுண்டு.
சீதையாக்கு ஆனாலும்
சென்னைப்பக்கம்[4] கருப்பு
முண்டு.
துரோபதைக்கு ஆனாலும்
தோளுபக்கம் கருப்புமுண்டு.
வளத்தராக்கியுட தங்கைதானே
வான்மையுள சடைச்சியர்க்கு
தலைதான் கருப்பே ஒழிய
தானேஒரு கருப்புமில்லை.
புருவம் கருப்பொழிய
பின்னே ஒரு கருப்புமில்லை.
தன்னழகு போதுமைய்யா
தங்க நகை வேண்டாமே
தங்கை சடைச்சிக்குத்தான்
தங்க நகை பூட்டலுற்றார்.

தங்கையின் திருமணம்

ஆச்சிவூர்[5] நகரத்திலே
அரிராம. பாண்டியர்தான்.
அரிராம பாண்டியர்க்கு
அழகு சடைச்சியைத்தான்
மணமுடித்துக் கொடுத்தாரே
மன்னன் மெச்சும் பெருமாள்.

அரசனின் அழைப்பு

இப்படியாய் சிலகாலம்
இன்பமுடன் கழிகையிலே
வீரக்கரையாள ராசாவும்
வீரமார்த்தாண்ட பாண்டியனும்
மெச்சும் பெருமாள் பாண்டியரை
மேன்மையுடன் அழைத்தாரே.

காஞ்சியில் கடும்பஞ்சம்

"நாடான நாடதிலே
நல்ல வடநாடு தேசத்திலே
காஞ்சிபுரம் பட்டணத்தில்
கடுமையான பஞ்சமய்யா
பன்னிரண்டு வருடகாலம்'
பருவமழை பெய்யவில்லை

---

1. பக்குவதி—பூவைப் பருவம்.
2. சரிக்கிடலாம்—ஒப்பிடலாம்.
3. ஒளிக்கி—உருக்கி.
4. சென்னைப் பக்கம்—காதோரத்துக் கன்னம்.
5. ஊர்ப்பெயர்.

பருவமழை இல்லாமல்
பஞ்சம் வந்து சேர்ந்ததய்யா.
நாழி உருண்ட பஞ்சம்
நாயகனைத் தோற்றபஞ்சம்.
மரக்கால் உருண்ட பஞ்சம்
மன்னவனைத் தோற்ற பஞ்சம்.
பொட்டி உருண்டபஞ்சம்
புருசனைத் தோற்ற பஞ்சம்
மக்களைதான் விற்ற பஞ்சம்
மன்னவரை இழந்த பஞ்சம்.
தாலிகளை விற்றபஞ்சம்
சரட்டுக்கயிறு போட்ட பஞ்சம்.

கொள்ளையர்களாதல்

இப்படியாய் பஞ்சகாலம்
ஏதுசெய்வார் கள்ளநாட்டார்.
காஞ்சிபுரம் நாடதிலே
கசவருட பட்டணத்தில்
கள்ளநாட்டார் ஒன்று கூடி
களவுசெய்ய புறப்பட்டார்கள்.

தென்னாடே திருடர்களம்

''தென்னாடு போகனுமே
தீவட்டிக் கொள்ளைப் போடனுமே
கன்னக்கோல் ஆக்கனுமே
கையறுவாள் வல்லயமும்
குத்துக்கம்பு வல்லயமும்
கொடுக்கறுவாள் சமுதாடும்
பூட்டை மெள்ள முறிக்கனுமே
போய்களவு செய்யனுமே.
கன்னமது போட வேண்டும்
களவு செய்து திரும்பவேண்டும்''
பதிமூன்றுபேர் கள்ளநாட்டார்.
பக்குவமாய்ப் புறப்பட்டார்கள்.

தென்னாட்டுக்குத் திருட பயணம்

காஞ்சிபுரம் நாடுமிட்டு
சைவர் பட்டணம்[1] தான் கடந்து
வன்னிகரந்தை[2] தேவர்குளம்[3]
வன்னிக்குத்தி மறவரய்யா
களவுக்கு ராசாளி
கறுப்பண்ணத் தேவரவர்.
தேவர்குளம் நாடதிலே
சேகரமாய்[4] வீற்றிருந்தார்.
அன்றுபகல் கழிந்த பின்னே
அத்த ராத்திரி பயணம் வைத்தார்.

நெல்லையப்பரை வணங்கல்

அழகியபாண்டி புரமும்[5] விட்டு
அவசரமாய் வாரார்கள்,
மானூறு விலக்குமிட்டு
மற்றந்த கள்ளநாட்டார்
ராமையம்பட்டி[6] தான் கடந்து
நலமான கள்ள நாட்டார்
நெல்லையம்பலம்[7] நாடதிலே
நெல்லையப்பரை வணங்கிவிட்டு
குறுக்குத்துறை[8] தான் கடந்தார்
கொள்ளை போடும் கள்ள நாட்டார்.

வீரபத்திரர் வீடுவரல்

விளாகத்து விலக்கு[9] மிட்டு
வேகமுடன் வாரார்கள்.
தாம்பிரவண்ணி நதியுமிட்டு
தானே வாரார் கள்ளநாட்டார்.
முன்னீர் பாளையம்[10] ஊரதிலே
முந்திக் கருக்கலிலே வாரார்கள்.
துப்புவாதி[11] வீடதிலே
துரிதமுடன் வாரார்கள்.
அத்தசாம நேரத்திலே
அடைகதவு தட்டலுற்றார்.
வீரபத்திரத் தேவர்
வேகமுடன் எழுந்திருந்தார்.

1-3. ஊர்ப்பெயர்
4. சேகரமாய் – சிறப்பாய்.
5-10. ஊர்ப்பெயர்களும் இடப்பெயர்களும்.
11. துப்புவாதி—துப்பு சொல்கிறவன், ஒற்றன்.

வீரரின் கோபம்

"ஆரடா ஏ பயலே
அடைகதவு தட்டுறவன்?
பாளையப்பட்டு நானிருக்கப்
பயமில்லாமல் வந்ததென்ன?
ஊரும் பேரும் சொல்லா விட்டால்
உயிரை மெல்ல வாங்கிடுவேன்''
என்று சொல்லுற வேளையிலே

கறுப்பசாமியின் கூற்று

ஏதுசொல்வார் கள்ள நாட்டார்.
"களவுக்குத் தலைவன் அண்ணே
கறுப்புசாமி வந்தேன் அண்ணே.
காஞ்சிபுரம் கறுப்பனென்றால்
கடவுளுக்கும் அஞ்சமாட்டான்''

வந்தவரை வரவேற்றல்

கறுப்பசாமி என்றபோது
கதவை மெள்ள திறக்கலுற்றார்.
'வாரும் பிள்ளாய் தம்பி' என்றார்.
வந்தசேதி சொல்லு மென்றார்.
கறுப்பசாமி தேவர்தானே
கட்டுடனே[1] ஏதுசொல்வார்,
"பன்னிரெண்டு வருடகாலம்
பாரில் மழை பெய்ய வில்லை.
பஞ்சம் வந்து சேர்ந்ததினால்
பார்க்க வந்தோம் தென்னாடு
களவு செய்ய வந்தோமெ''ன்று
கட்டழகர் சொல்லலுற்றார்,

தேவர் சொன்ன துப்பு

வீரபத்திரத் தேவரவர்
வேகமுடன் ஏதுசொல்வார்
"களவு செய்ய இடமுமில்லே.
கன்னம் போட வழியுமில்லே.
இரும்பு ஊசி களவு போனால்
ஏற்ற தங்க ஊசி வாங்கிடுவேன்.
ஆனால் ஒரு துப்பதுதான்
அருமையுடன் சொல்லக்கேளும்.
கோபால சமுத்திரத்தில்
குடியிருக்கார் குடும்பக்கமார்.
நாகநல்ல குடும்பனென்றும்
கனக நல்ல குடும்பனென்றும்
பள்ளருட தாவளத்தில்
பணம் அதிகம் இருக்குதய்யா
ஏழுகிடாரத்[2] திரவியந்தான்
இருக்குதய்யா அங்கேதான்
ஆயக்காலில்[3] தொங்குதய்யா
அனுதினமும் கேட்டதுண்டு.
கோபால சமுத்திரம் போனாக்கால்
கொள்ளை போட்டு வரலாமே.
காவலில்லை கட்டுமில்லை
காவலுக்கோ மறவரில்லை.''
என்று சொல்லும் வேளையிலே
ஏது செய்தார் கள்ளநாட்டார்,

கோபால சமுத்திரம் அடைதல்

முன்னீர் பள்ளம் நாடுமிட்டு
பாளையங்கால் பாதை கூடி
தருவை[4] நல்ல நாடுமிட்டு
தருமராசா கோவில் விட்டு
பச்சையாறு விலக்கு[5] விட்டு
பாளையங்கால் கரைவழியே
கிளாக்குடையார் வாசல்[6] வழி
கிருபையுடன் கள்ளநாட்டார்
சீரரமைய்யர் வாசல்[7] வழி
சீக்கிரத்தில் வாரார்கள்.
பசுங்கிளி அய்யர் வாசல்[8] வழி
பறக்குளம்[9] தான்கடந்து
நாகக் குடும்பனுட வளவதிலே
நலமுடனே வாரார்கள்.

கன்னக் கோல் வைத்தல்

கனகக் குடும்பனுட வளவதிலே
கண்டார்கள் கட்டிடத்தை
கல்லறைத்தான் துளைக்கும்

---

1. கட்டுடனே — சிறப்புடனே
2. ஏழுகிடாரம் — பெருங்கலம்
3. ஆயக்கால் — முட்டுக்கட்டை

4-9. ஊர்ப்பெயர்களும் இடப்பெயர்களும்.

கன்னக்கோலை எடுத்தார்கள்.
செங்கல்லைத் துளைக்கும்
சிறு ஆக்கராவைத்தான் எடுத்
தார்.
அத்தசாம நேரத்திலே
ஆளரவம் இல்லா வேளையிலே
கன்னமது போடலுற்றார்
கதவுகளைத் தான் திறந்தார்.
கீழ்த்தாளை மேல்த்தாளை
கிருபையுடன்[1] துறக்கலுற்றார்
வெங்கலக் கதவுதன்னை
வேகமுடன் திறக்கலுற்றார்.
தங்க நல்ல களஞ்சியத்தைத்
தான் பார்த்தார் கள்ளநாட்டார்

கவனமுடன் கொள்ளையிடல்

எவ்விதத்தில் களவுசெய்வோம்
எப்படி நாம் கொண்டு
போவோம்.
வாடாத[2] மணிவிளக்கு
வலது பக்கம் எரியுதய்யா.
கள்ளருக்குத் தலைவன்தானே
கறுப்பசாமி தேவரவர் —
"கலங்காதிங்கோ மயங்கா
திங்கோ
காவலுக்கு ஒருவரில்லை" என
ஏழு கிடாரத் திரவியத்தை
ஏகமுடன் வாரலுற்றார்.
வயிரங்களும் முத்துக்களும்
வாரிவாரி கட்டலுற்றார்.

களிப்புடன் குலவையிடல்

கட்டிநல்ல சுமையாக்கி
கழுதைமேல் பொதியேத்தி
கழுதைகளைப் பத்திக் கொண்டு
கைத்தட்டிக் குலவையிட்டார்.[3]
நாகக்குடும்பனுட வளவுமிட்டு
நல்லசிவன் கோவில் விட்டு
பாளையங்கால் தான் கடந்து
பதின்மூன்று பேர் கள்ள
நாட்டார்
தாம்பிர வன்னி தன்னதிலே
தாகவிடை தான் தெளித்தார்
கருங்காட்டு ஊரதிலே
கடுமையான குலவையிட்டார்.

குலவை கேட்டல்

குலவைச் சத்தம் காதில்
கேட்டார்.
குழந்தை மெச்சும் பெருமாள்
பாண்டியனும்
வண்ணாத்தி வீடு விட்டு
வாராரே பாண்டியரும்.
காச்சிநாயும் பூச்சிநாயும்
கடுமையுட வருதய்யா.
கள்ளருட குலவை சத்தம்
காச்சி நாயும் கேட்டிடுமாம்.
வீமனென்ற நாயதுதான்
வேகமுடன் வருகுதய்யா.
துஷ்டனென்ற நாயதுதான்
துள்ளி ஓடி வருகுதய்யா.
நாயுடனே பின் தொடர்ந்தார்
நலமான பாண்டியரும்.

கறுப்பசாமியின் கலக்கம்

கள்ளருக்குத் தலைவன்தானே
கறுப்பசாமி ஏது சொல்வான்.
"குலவையிட்ட மோசத்திலே
குடிகேடு வந்ததய்யா
வீடு விட்டு வாரபோது
விடியவில்லை பல திசையும்.
கோட்டை விட்டு வார போது
தகை இருந்து அழுததுவோ.
என்ன மோசம் வந்திடுமோ
என்று சொன்னார் கறுப்பசாமி.

கள்ளருடன் கடுமையான சண்டை

கறுப்பசாமி சொல்லுமுன்னே
காலை பிடித்திடுமாம்
நாயதுதான்

---

1. கிருபை — கவனம், எச்சரிக்கை.
2. வாடாத — அணையாத, அசையாத
3. வெற்றிக்கு அறிகுறியாகக் குலவையிடல்

மெச்சும் பெருமாள்பாண்டியனும்
மேகம்போல் விரைந்து வாரார்.
தொட்டிநல்ல பாலத்திலே
துள்ளியோடி குதித்தாரய்யா.
சிங்கம்போல பாய்ந்தாரய்யா

சீமான் அந்த பாண்டியனும்
பூனைபோல் பதுங்கலுற்றார்
புலிபாய்ச்சல் பாயலுற்றார்.
பதிமூன்றுபேர் கள்ளர்களைப்
பாய்ந்து பாய்ந்து வெட்டலுற்றார்.

உற்றதொரு கள்ளர்களை
ஓடி ஓடி வெட்டலுற்றார்.
மெச்சும் பெருமாள் இடமதிலே
மின்னே[1] நிற்பார் ஒருவரில்லை.

பாண்டியனின் வெற்றி

சந்தோசப் பட்டாரே
சமர்த்துள்ள பாண்டியரும்
கழுதைமேல் பொதிகளையும்,
கட்டழகர் தள்ளிவிட்டார்.
ஆயுதத்தை அலம்பியங்கே[2]
அன்னேரம் ஏது சொல்வார்.
''குலவை சத்தம் எங்கே போச்சி
கூட்டமது எங்கே போச்சி''
என்று சொல்லி பாண்டியரும்
ஏகமுடன் வாராரே.

பள்ளர்களிடம் தெரிவித்தல்

தொட்டிபாலம் தான்கடந்து
துளசிமடம் தான் கடந்து
தாம்பிர வன்னி தான் கடந்து
தானே பாளையங்காலும் கடந்து
நாகக் குடும்பனுட வளவதிலே
நலமான பாண்டியரும்
பள்ளர்களை எழுப்பியல்லோ
பாண்டியரும் ஏது சொல்வார்.
''கனகக் குடும்பா நீ கேளு
களஞ்சியங்கள் எங்கே போச்சி
நாகக் குடும்பா உனது
நாட்டாண்மை எங்கே போச்சி
ஏழுகிடாரத் திரவியந்தான்
இருக்குதோ பாருமென்றார்.
பூமியிலே போட்டிருந்தால்
பூதங்கொண்டு போகுமென்று,
ஆயக்கால் போட்டுவைத்தாய்
அருமையான திரவியத்தை
வடநாட்டுக் கள்ளர் வந்து
வாரிக்கொண்டு போய் விட்டார்.
கருங்காட்டு ஊரதிலே
கண்டேனே கள்ளர்களை.
ஓடவிட்டு தலையறுத்தேன்
உங்கள் திரவியத்தை நான் காத்தேன்
கழுதையிலே பொதி ஏத்தி
கள்ளநாட்டார் கொண்டு போனார்.
பொதி பணத்தைக் குமித்திருக்கேன்
போய் வாரிக்கொண்டு வாங்க
அரண்மனைக்கு நான் போறேன்
அள்ளிவாடா பொன்னை,'' என்றார்.
அரண்மனையில் போய் படுத்தார்
அழகுப்பிள்ளை பாண்டியரும்.

தப்பிவிட்டான் ஒரு திருடன்

கருங்காட்டு ஊரதிலே
கள்ளருட படுகளத்தில்
பன்னிரெண்டு பேர்களை வெட்டும்போது
பாவி அதிலொருவன்
ஓடி ஓடி வெட்டும்போது
ஒளிந்திருந்தான் ஒருபாவி.
பாண்டியன்தான் போனபோது
பதறிகண்ணை முழித்தானே.
பதறி எழுந்தானே
பலதிசையும் பார்த்தானே.
தப்பிப் பிழைத்தேனென்று
தானோடி போறானே.

பள்ளர்கள் வந்தனர்

பள்ளர்கள் எல்லோரும்
பதறி ஓடி வாரார்கள்.

---

1. மின்னே — முன்னே
2. அலம்பி — கழுவி;

கருங்காட்டு ஊரதிலே,
கள்ளருட படுகளத்தில்
கால்துண்டா கிடக்கிறதும்
கை துண்டா கிடக்கிறதும்
தலை துண்டா கிடக்கிறதும்
தான் கண்டார் குடும்பக்க
மார்கள்.

கனக நல்ல குடும்பனுட
காலும் கையும் நடுங்குதய்யா
நாகக் குடும்பனுட
நாவு வறளுதய்யா.
திரவியத்தை வாரிக்கொண்டு
சீக்கிரமாய் வாரார்கள்.

பாண்டியர்க்குப் பரிசு

பள்ளருட தாவளத்தில்
பணத்தைக் கொண்டுசேர்த்
தார்கள்.
மறுநாளைக் காலையிலே
மன்னர் பாண்டியரைப் பார்க்க
வந்தார்.
தங்கநல்ல தளுகை[1]யத்தான்
தானெடுத்தார் கையதிலே.
தங்கப்பூவாம் வெள்ளிப்பூவாம்
தானெடுத்து வைத்தார்கள்,
பழவகைகள் எல்லாம்
பரத்தி வைத்தார் தளுகையிலே.
மல்லிகை முல்லைகளுடன்
மலர்ந்த இருவாச்சியும்
இலுமிச்சம் பழமும் கொண்டு

இன்பமுள்ள குடும்பக்கமார்கள்
ஆயிரம் பொன் ஒரு முடிப்பு
அவசரமாய் எடுத்து வைத்தார்.
ராசாவைக் காணோமென்று
நலமுடனே வந்தார்கள்.

அரண்மனையுள் நுழைதல்

அரண்மனை தன்னருகே
ஆசார வாசலிலே
கூட்டமிட்டுத் தானிருந்தார்
குடும்பக்கமார் எல்லோரும்.
வீரக்கரையாள ராசாவும்
வீரமார்த்தாண்ட ராசாவும்
மெச்சும் பெருமாள்பாண்டியரும்
மேகம் போல் வந்திருந்தார்.
மூவர்களும் இருக்கும்போது
முன்னே வந்தார் குடும்பக்கமார்.
கையெடுத்து நமஸ்கரித்தார்
கனகமணி ராசாக்கள்.

நன்றிக்கடன் நவிலல்

வந்தசேதி சொல்லுமென்றார்
வகையுடனே பாண்டியரும்
நாக நல்ல குடும்பனவன்
நலமுடனே ஏது சொல்வான்?
"வடநாட்டுக் கள்ள நாட்டார்
வந்து கொள்ளைப் போட்
டார்கள்.
திரவியத்தை வாரியல்லோ
தீவிரமாகப் பொதிகள்
வைத்தார்.
கழுதைமேல் பொதிகள் ஏத்தி
கருங்காடு போகையிலே,
கள்ளர்களை அடித்துக் கொன்று
கழுதை பொதிகளைக் கீழே
தள்ளி
எங்களிடம் வந்து சொன்ன
எசமானைப் பார்க்க வந்தோம்,"
தங்க தளுகை கீழே வைத்து
தலைகுனிந்து வணங்கி நின்றார்.

மன்னர்களின் கோபம்

வீரமார்த்தாண்ட பாண்டியர்க்கு
வீசை துடிக்குதய்யா.
கண்களிலே பொறிபறக்க
கடுங் கோபத்தோட தானழைத்
தார்.

'மெச்சும் பெருமாளுட
மேன்மையது போச்சுதய்யா.
அண்ணன் தம்பிபோல நாமும்

அரண்மனையில் ஆண்டுவந்
தோம்.

கூடி இருந்ததென்ன.
கூட்டுசோறு உண்டதென்ன?
பெறற நல்ல பிள்ளைபோல
பிரியமுடன் வைத்திருந்தேன்,
இன்றுமுதல் என்னுடைய
இடத்திற்கே ஆகாதே.

---

1. தளுகை — தட்டு, தாம்பாளம்,

கொலையாளி கூடத்தானும்
கூட்டுறவு வைத்திருந்தோம்.
அரண்மனையில் இதுவரைக்கும்
அன்பாக உண்டதினால்,
வேணுமென்ற வெகுமதியை
வேண்டுமட்டும் கேட்டிடுவாய் ''
என்று சொல்லும் வேளையிலே
ஏதுசொல்வார் பாண்டியரும்

கேட்டது கிடைத்தது

' உம்பளமும்[1] சம்பளமும்
ஒன்றுமேதான் வேண்டாமே.
திசைகாவல் வேணுமென்றார்''
செல்லப்பிள்ளை பாண்டியரும்.
''அப்படியே தந்தேன்'' என்றார்
அழகுத் துரைப் பாண்டியரும்.

செப்புப்பட்டயம் எழுதுதல்

மெச்சும் பெருமாள் பாண்டியரும்
மேன்மையுடன் ஏதுசொல்வார்.
ஆயிரம் வருசத்துக்கு
அழியாமல் இருக்க வேண்டும்.
பிள்ளை பிள்ளை தலை முறைக்கும்
பேர் சொல்ல வேணுமென்றார்.
செம்பு நல்ல பட்டயத்தில்
திசை எழுதித் தரவேண்டும்
கம்மாளரை அழைத்து வந்து
கட்டுடனே எழுதலுற்றார்.

எல்லைகளும் குறித்தல்

நாலு திசைகளையும்
நலமுடனே எழுதலுற்றார்.
மானாட்டான்[2] சாலைக்குத் தான்
மகிமையுடன் வடக்கே அய்யா.
பச்சையாற்றுக்கு மேற்கேதான்
பக்குவமாய் எழுதலுற்றார்.
பத்தமடையாபிள்ளை பாலத் துக்கும்[3]
பச்சமுடன் கிழக்கே
தவணகோவிலுக்குத்[4] தெற்கே தான்
தயவுடனே எழுதலுற்றார்,
சுலுசு பாலத்திற்கு[5] தெற்கே தான்
துரிதமுடன் எழுதலுற்ருர்
கருங்காட்டுக்குத் தெற்கேதர்ன்
கட்டழகர் எழுதலுற்றார்.
''கல்லும் காவேரி உள்ளமட்டும்
காவல் காத்து வருவாய்'', என்றார்.

கட்டழகன் காவல்வேலை

சந்தணம் தாம்பூலம் கொடுத் தல்லவோ
தான் கொடுத்தார் பட்டயத்தை
செப்புபட்டயம் வாங்கியல்லோ
சேகரமாகப் பாண்டியனும்
அன்றுமுதல் காவல்களை
அனுதினமும் காத்து வாரார்.
காவலுக்கோ கம்பெடுப்பார்
காச்சிநாயும் பூச்சி நாயும்.
கல்லெறிய கவணெடுப்பார்
கைதனிலே பாச்சக்கயிறும்.
ஈட்டிசமுதாடும்,
ஏற்றதொரு வல்லயமும்,
முந்திகருக்கலிலே
முதச் சாம வேளையிலே
காவலுக்குப் பயணம் வைத்தார்
கட்டழகர் பாண்டியரும்.

மகசூல் கட்டும் முறை

காவல் காக்கும் வேளையிலே
கஷ்டம் வந்து சேர்ந்ததய்யா.
மாசம் ஒருதடவை
மகசூல் பிரிக்க வேண்டும்
அந்தந்த மாத்தைப்[6] பணம்

---

1. உம்பளம் — மானியநிலம்
2-5. ஊர்ப்பெயர்களும் இடப்பெயர்களும்
6. மாத்தை — மாதம்

அனுப்பனுமே அம்பைக்குத்தான்
மாசம் ஒரு தலையாரி
மாசூல் பணம் கொண்டுபோனும்.
ஆருடைய முறையது தான்
அன்னேரம் வருகுதய்யா.
பாண்டியச முறையதுதான்
பகவானே வந்ததய்யா
மெச்சும் பெருமாள் முறையதிலே
மிராசுதாரும் தானழைத்தார்,

பயணத்துக்கு ஏற்பாடு

கண்ணுவலி வந்ததய்யா
கட்டழகர் பாண்டியர்க்கு.
அன்னேரம் பாண்டியரும்
அக்காமாரைத் தானழைத்தார்.
''அம்பாச முத்திரந்தான்
போகனுமே
அருமை அக்கா நீ கேளு.
சீக்கிரத்தில் இருபேரும்
செய்திடுங்கோ சமையலது.
கட்டமுது கட்டிடுங்கோ
கட்டழகு தம்பியர்க்கு.
அடிச்சமையல் செய்தாள்
உருத்துள்ள[1] தம்பியர்க்கு.''

உண்டு இளைப்பாறல்

தலைவாழை இலை விரித்து
தண்ணீரதுதான் தெளித்தாள்.
சாதம்கறி தான் படைத்தார்
தம்பியர்க்கு அன்னேரம்.
சாப்பிட்டு இளைப்பாறி
தாம்பூலம் தான் போட்டு,

அம்பைக்குப் புறப்படல்

கச்சை வரிந்து கட்டி,
கருங்கச்சை சுங்கலிட்டு,
பாச்ச கயிறு எடுத்தார்.
பருவயிர தடி எடுத்தார்.
ஈட்டி சமுதாடுகளும்
எடுத்தாரய்யா கைகளிலே.
குத்துக் கம்பு வல்லயமும்
கொடுக்கரிவாள் தானெடுத்தார்.
நாய்களைத்தான் அழைத்துக்
கொண்டு
நலமுடைய பாண்டியரும்
இஸ்திபணம் கொண்டு போக
கிருபையுடன் பயணம் வைத்
தார்.

அக்காமார்களிடம் வழி யனுப்பல்

அக்காமார் இருபேரை
அன்புடனே தானழைத்து,
''கட்டுசாதம் தானெடுத்து
கையதிலே தந்திடுங்கோ.
கண்ணுவலி உபத்திரமும்[2]
கண்முழிக்கக் கூடுதில்லை.

சகோதரிகள் கண்ட சகுனங்கள்

வளத்தராக்கி வந்ததல்லவோ
வழிச்சகுணம் பார்க்கலுற்றாள்.
புறப்படும்போது இறப்பிடுமாம்.
பின்னங்கால் தட்டிடுமாம்.
முடுக்கதிலே வாரபோது
முடப்பூனை குறுக்கிடுமாம்.
தலவாசல் தாண்டும் போது
தட்டிடுமாம் வாசநடை.
தலைவாசல் தட்டினதை
தமக்கையரும் கண்டாரே.

தமக்கை தடுத்தல்

''தலைவாசல் தட்டுதடா
தம்பியரே என்பிறவி.
வாசல்படி தட்டினாக்கால்
வாணாளுக்கே சேதம் என்பார்.
பூனை குறுக்கிட்டால்
பொல்லாத சகுணமென்பார்.
நான் கண்ட கனவதுதான்
நம் தம்பியர்க்கு ஆகாதும்பா.
சண்டாளி கண்ட கனா
சங்கடமா தெரியுதப்பா,
என்னமோசம் வந்திடுமோ
ஏகவேண்டாம் தம்பியரே.

1. உருத்துள்ள — அக்கரையுள்ள.
2: உபத்திரவம் — துன்பம்.

ஆகாத சகுனமப்பா
அருமை தம்பி போகவேண்டாம்.''

தம்பியின் தேற்றுதல்

என்று சொல்லும் வேளையிலே
ஏது சொல்வார் பாண்டியரும்
''என்புத்தி கேட்டவர்கள் கோடியுண்டு
பெண்புத்தி கேட்டுப் பிழைப்பதுண்டோ?
அஞ்சவேண்டாம் மலை[1]யவேண்டாம்
அக்காமாரே பயம் வேண்டாம்.
அம்பாசமுத்திரந்தான்
அருமையுடன் போய் வாரேன்,''
என்று சொல்லி வழியனுப்பி
ஏகமுடன் பயணம் வைத்தார்.

தடைமீறிய பயணம்

காகம் வந்து கத்திடுமாம்
கறும்பூனை குறுக்கிடுமாம்
கண்ட கண்ட சகுணமெல்லாம்
காலாலே தள்ளிவிட்டு
காளிகா தேவியரைக்
கையெடுத்து வணங்கிக் கொண்டு
முப்பிடாதி அம்மாளை.
முடிவணங்கி தெண்டனிட்டார்.
பாளையங்கால் பாதைகூடி
பரு நடையாகத்தான் நடந்தார்.

பெரும் பயணம் போகின்றார்

வீமனென்ற நாயதுதான்
வேகமுடன் நடக்குதய்யா.
துட்டனென்ற நாயதுதான்
துள்ளி நடக்குதய்யா.
கீழச்சேவல்[2] பாலம் விட்டு
கிளுவடித்துறை[3] கடந்து
தேசமாணிக்கம் விலக்கும்[4] விட்டு
சிவந்தி பாலம்[5] தான் கடந்து
சேரன் மகாதேவியிலே[6]
அப்பன் கோவில்[7] தான்கடந்து
வீரகம்பதியு[8]மிட்டு
வெள்ளாங்குழி நாடும்[9]விட்டு
அம்பா சமுத்திரம் வந்தல்லவோ
ஆணழகர் பாண்டியரும்

உணவு உண்ணல்

கட்டமுது சாப்பிட்டரே
கட்டழகர் பாண்டியரும்.
மிச்சமுள்ள சாதமெல்லாம்
முன்னே நின்ற நாய்களுக்கு
நாய்களுக்கு விருந்து வைத்தார்
நலமான பாண்டியரும்.

பணம் செலுத்துதல்

பணம் கட்டும் ஆபீசிலே
பணத்தை மெல்ல கட்டலுற்றார்
செலுத்தின பணத்துக்குத்தான்
சீட்டெழுதி தான் கொடுத்தார்.
சீட்டை வாங்கி வெளியில் வந்தார்
செல்லப்பிள்ளை பாண்டியனும்

திரும்புகிற வழியில்

கண்ணுவலி வேதனையால்
கவலைப்பட்டு வாராரே.
சோலையபுரம்[10] கடந்து,
துளசி மடம்[11] விலக்கும் விட்டு,
ஊர்க்காடு[12] தான் கடந்து,
உற்றமாஞ்சோலை[13] தனைக் கடந்து,
வெள்ளாங்குழி விலக்குமிட்டு;
விரகம்பதி கடந்து
பாட்டாளியார் வீதிவிட்டு,
பாவோடும் தெரு கடந்து,
சேரன்மகா தேவி விட்டு,
செல்லப் பிள்ளை பாண்டியனும்
கண்ணாரெண்டும் வேதனையால்
கண்முழிக்க முடியாமல்,

---

1. மலைதல் — பிரமித்தல்,

2-13. ஊர்ப் பெயர்களும் இடப்பெயர்களும்.

கவிழ்ந்ததலை நிமிராமல்
கட்டழகர் வாராரையா

பாலத்தில் தங்கல்

அப்பன் கோவில் பாதைகூடி,
ஆத்தாங்கரை விலக்கு[1]மிட்டு,
கரிசூழ்ந்த மங்கலமும்[2]
கட்டுடனே தான் கடந்து'
பாளையங்கால் தன்னதிலே
பத்த மடையாபிள்ளை பாலத்திலே
பாலத்திலே வாரபோது,
படுசாம நேரமாச்சே
பாலத்திலே உட்கார்ந்தார்.
பாண்டியரும் நாயுமாக.
கவிழ்ந்ததலை நிமிராமல்
கவலை கொண்டு இருக்கும் போது,
கரிசூழ்ந்த மங்கலத்தில்

கள்ளர்களின் வருகை

கன்னமிட்ட கொள்ளை நாட்டார்
வன்னிக்கறந்தை தேவர்குளம்
வன்னிக்குத்தி நாட்டார்கள்
களவு செய்து வாரரர்கள்.
கள்ளர்களும் அந்நேரம்.
கள்ளர்களைக் கண்டதய்யா
கட்டழகர் நாய்களிரண்டும்
கள்ளரைத்தான் துரத்துதய்யா
கடும்பாய்ச்சல் பாயுதய்யா.
கள்ளர்கள் அன்னேரம்
கண்டார்கள் நாய்களைத்தான்.
அதிலேயொரு கள்ளநாட்டான்
அடையாளம் கண்டானே.

கள்ளன் சொன்னது

கண்டதொரு கள்ள நாட்டான்
கவனமுடன் ஏது சொல்வான்,
"வாருங்க வோய்[3] அண்ணர்களே
வார்த்தையொன்று சொல்லக் கேளும்
முந்தினக் களவதிலே
மோசம் செய்த நாய்களது.
விட்டுவிட்டால் மோசமண்ணே.
வினைகள் வந்து சேருமண்ணே.
நாய்கள் கூட வந்தவர்தான்
நலமான பாண்டியர்தான்
இந்தவேளை விட்டு விட்டால்
இறக்கிறது நிச்சயந்தான்."
என்று சொல்லி கள்ளநாட்டார்
ஏழுபேரும் ஒன்றாய் கூடி
இப்படியாய் பேசும் போது,

பாண்டியரின் முன்னெச்சரிக்கை

ஏற்றதொரு பாண்டியர்க்கு
'நாய்கள் குலைப்பதென்ன
நாமள் தலை கவிழ்ந்திருப்பதென்ன,
என்று சொல்லி பாண்டியரும்
இரு கண்களைத்தான் துடைத்தார்.
கச்சை வரிந்து கட்டி
கருங்கச்சை சுங்கலிட்டார்.
எடுத்து வைக்கும் கால்களுக்கு
எருக்கலம்பூ சல்லடமாம்.
மண்டியிடும் கால்களுக்கு
மாதுளம்பூ சல்லடமாம்.
தட்டி வரிந்து கட்டி
தாமரைப்பூ சுங்கலிட்டார்.
எடுத்தாரே ஆயுதத்தை
எங்கள் மெச்சும் பெருமாளும்
பாச்சக் கயிறு ஒரு கையிலே
பட்டாவாள் ஒரு கையிலே

வாக்கு வாதங்கள்

'ஆரடா பயலேயென்று
அதட்டியே கேட்கும் போது,
அந்தசத்தம் காதில் கேட்டார்
அரும்பாவி கள்ள நாட்டார்.
"ஆரடா கேட்கிறவன்

1-2. ஊர்ப்பெயர்களும் இடப்பெயர்களும்.
3. வோய் என விளிப்பது நெல்லைமாவட்ட வழக்கு.

அஞ்சாமல் எங்கள் முன்னே.
வடநாட்டு கள்ளரப்பா
வார்த்தை ரெம்ப பேச வேண்டாம்.''
அந்த வார்த்தை காதில் கேட்டார்
அழகு மெச்சும் பெருமாளும்
நாய்களைத்தான் அழைத்து
நலமுடனே ஏவலுற்றார்.

போரில் வெற்றி

ஓடுகின்ற கள்ளர்தானே
ஒருமுகமாய் ஒன்றுகூடி
வந்ததொரு பாண்டியனை
வளைத்தார்கள் கள்ளநாட்டார்.
மெச்சும் பெருமாள் பாண்டியர்க்கும்
மோசம் செய்யும் கள்ளருக்கும்
சாமமான சாமத்திலே
சண்டைக்களம் ஆகுதய்யா.
ஆறுபேர் கள்ளர்களை
அருமை பாண்டியரும் கொன்று விட்டார்.

தப்பிய திருடன்

அதிலேயொரு கள்ள நாட்டார்
அந்தப் படுகளத்தில் படுத்துக் கொண்டான்.
எல்லோரும் மாண்டாரெனஏற்றதொரு பாண்டியனும்
கச்சை கழத்தி[1] வைத்தார்
கண்களையும தான் துடைத்தார்.
மருத மரம் மூடருகே.
மன்னவரும் சாஞ்சிருந்தார்.[2]
சாஞ்சிருந்த நேரத்திலே
தனிப்பாவி கள்ள நாட்டான்
ஆறுபேர் மாண்டுபோனார்
அரும்பாவி இருக்கலாமா?
சவத்தை உருட்டித் தள்ளிவிட்டு
சண்டாள கள்ளநாட்டான்
உருண்டு உருண்டு வாரானே
உற்றபிள்ளை கள்ள நாட்டான்.

குத்துப்பட்டார் பாண்டியர்

மருதமர மூடதிலே
மன்னரது குத்துக் கம்பாம்.
குத்துக்கம்பைக் கையிலெடுப்பான்
குடிகெடுத்த கள்ளநாட்டான்.
மன்னனுடைய விலாவதிலே
மாபாவி குத்தி விட்டான்.

பழி வாங்கல்

குத்தின குத்தை வாங்கிக் கொண்டு
குத்துக் கம்பைக் கையில் வாங்கி
வாங்கின குத்துக் கம்பால்
வடநாட்டு கள்ளனையும் குத்தி விட்டான்
கள்ளநாட்டான் மாண்டானே.
கைலாசம் சேர்ந்தானே.
மெச்சும் பெருமாள் பாண்டியர்க்கு
மேல்மூச்சு வாங்குதய்யா.
குத்துபட்ட இடத்திலேதான்
குடலு கீழே விழுந்திடுமாம்.
குடல் விழுந்த இடத்திலேதான்
குப்புறத்தான் விழுந்தாரே.

நன்றிமிக்க நாய்கள்

மன்னனுட படுகளத்தை
மற்ற நாய்களெரண்டும் கண்டதய்யா.
குத்து விழுந்ததென்ன
குடல்வீழே சாய்ந்ததென்ன
பாண்டியர் படுகளத்தில்
படுத்துப் புரளுதய்யா.
வீடுகொண்டு சேர்க்கவேண்டும்
விழுந்தகதை சொல்லவேண்டும்.
என்று சொல்லி நாய்கள் ரெண்டும்
இழுத்ததய்யா மன்னவனை.

---

1. கழத்தி — கழற்றி
2. சாஞ்சி — சாய்ந்து

அறிவுடைய செயல்கள்

பாளையங்கால் தண்ணியிலே
பாண்டியனைத் தள்ளிவிட்டு
அக்கரையில் ஒரு நாயும்
இக்கரையில் ஒரு நாயும்
பாத்துக்கொண்டு வருகுதய்யா[1]
பாண்டியன் கட்டையத்தான்.
மாதேரு முக்கதிலே
மகாதேவர் அய்யனார் வாசலிலே
மன்னரைக் கரைசேர்த்து
மன்னனது நாய்கள் ரெண்டும்
சாத்தாவின் வாசலிலே
சரீரத்தைப் போட்டுவிட்டு
மாண்டு மடிந்தவரை
மகிமையுடன் காத்திடுமாம்

சேதி சொன்ன சிறப்பு

துஷ்டன் என்ற நாயதுதான்
துரிதமுடன் வருகுதய்யா.
அக்காமார் வாசலிலே
அழுதுஊளை போட்டிடுமாம்.
நாயுடைய சத்தங்கேட்டு
நலமுடனே தானெழுந்து
மெச்சும் பெருமாள் வந்தா
னென்று
மேன்மையுடன் பெண்கள்
ரெண்டும்,
நாயதற்குச் சாப்பாடு
நாயகியாள் கொண்டுவந்தார்.
வைத்தாளே சாப்பாடு, வாய்
வைக்கவில்லை நாயதுதான்
காலேவந்து கட்டிடுமாம்
கதறிசத்தம் போட்டிடுமாம்.
சத்தம் போட்ட சமயத்திலே
தானறிந்தாள் பெண்கொடியும்.

தமக்கையரின் தவிப்பு

எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணுகிறாள் பெண்கொடியும்
நம்முடைய தம்பியரை
நாம் இன்னும் வரக் காணவில்லே.
என்பிறப்பானேக்[2] காணோ
மென்று
ஏங்குதாளே ரெண்டு பேரும்.
எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணுதாளே சிந்தையிலே.
என்றவளும் எண்ணும்போது
ஏற்றதொரு நாயதுதான்,
கையைப் பிடித்திடுமாம்
கண்மணியை இழுத்திடுமாம்.
மடிச் சேலை பிடித்திடுமாம்
மங்கையரை இழுத்திடுமாம்
பார்த்தாளே பெண்கொடியாள்
பதறி எழுந்தாளே.

தம்பியைத் தேடிவரல்

கதவுதன்னைந் தாள்பூட்டி
கட்டழகி பயணம் வைத்தாள்.
நாயதுதான் முன்னாலே
நல்ல பெண் கொடியும்
பின்னாலே.
வெள்ளைப் பிள்ளையார் வாசல்
வழி
வேகமுடன் வாரபோது,
வீமனென்ற நாயதுதான்
விம்மி ஊளைப் போட்டிடுமாம்.
எட்டிஎட்டி வழிநடந்தாள்.
என்பிறவியென்று
துடித்துவரார்.

கண்டதும் கதறல்

தம்பியுட படுகளத்தைக்
தமக்கையரும் கண்டாரே.
மெச்சும் பெருமாள் தம்பியென்று
மேல்விழுந்து தானழுதாள்.
முத்துபோல் கண்ணீரை-
முகமெல்லாம் சோரவிட்டாள்.
பவளம்போல் கண்ணீரைப்
பக்கமெல்லாம் சோரவிட்டாள்.
அடித்தாளே தலேமேலே
அறைந்தாளே அடிவயிற்றில்.
குடலோடு தான்புரண்டு
கூக்குரலும் போட்டாளே.

4. கட்டை — உடல்,

5, என்பிறப்பானே — என்னுடன் பிறந்தேனே.

விடியக்காலம் நேரமாச்சே
வெள்ளையது[1] உதயமாச்சே.

அரண்மனைக்குச் சேதிசொல்லல்

இங்கிருந்தால் மோசமென்று
எழுந்தாளே பெண் கொடியும்.
அரண்மனைக்குச் சேதிசொல்ல
அக்காளும் தங்கையரும்,
வளத்த நாய்கள் காத்திருக்க
வாராரே அரண்மனைக்கு,
அழுதகுரலோசை
அரண்மனைக்கு எட்டிடுமாம்;
மந்திரியை வரவழைத்து
மகாராசா ஏது சொல்வார்.

வேந்தனது விசாரனை

"ஆசார வாசலிலே இன்று
அழுத ஓசை கேட்குதப்பா.
அழகுபிள்ளை மந்திரியே
அறிந்துகொண்டு வாரு"
மென்றார்.
மந்திரியும் வந்தல்லவோ
மங்கையரைக் கண்டாரே.
"பெண்ணே பெண்ணரசே !
பேடை மயிலழகியாரே !
அழுது இங்கு வந்ததென்ன
அருங்கிளியே சொல்லுமென்
றார்."

வளத்தராக்கியின் வாய்மொழி

வளத்தராக்கி பெண்கொடியும்
வாய்திறந்து ஏது சொல்வாள்.
"வாருமய்யா மந்திரியே
வார்த்தையொன்று சொல்லக்
கேளும்
என்னுடைய தம்பியர்க்கு
எமன் எங்கிருந்து வந்தானோ.
தீராத துயரமது
தீவினையாய் வந்திருக்கே.
ஆறாத் துயரமது
ஆற்ற முடியலியே.
கண்ணுவலி வேதனையால்
கவலைகொண்டு இருக்கும்போது
இருசால் பணம் பிரித்து
என்பிறப்பான் கொண்டு
போனான்.
பணம்செலுத்தி வாரபோது
பாசமுள்ள தம்பி பட்டுவிட்டான்
மெச்சும் பெருமான் என்பிறப்
பான்
மேலுலகம் சென்றானே.
மாதேரு முக்கதிலே
மகாதேவன் வாசலிலே
நாய்கள் ரெண்டும் காத்திருக்கு
நலமான தம்பியரை.
அக்கமில்லை பக்கமில்லை
ஆதரிப்பார் யாருமில்லை.
சந்தனக் குலமரத்தைச்
சாய்த்துவிட்டு வந்தோமய்யா.
குலைவாழைக் கண்போல
குவலயத்தில் சாய்ந்துவிட்டோம்.
என்பிறப்பான் தம்பியரை
எககாலம் காணப்போறோம்
காணக் கிடைக்காத
கண்மணியைக் காண்பதெப்போ?
குத்தும் விழுந்திருக்கே
குடலும் சரிந்திருக்கே,
அரண்மனைக்குச் சேதி சொல்ல
அவசரமாய் வந்தோமைய்யா."

மந்திரியார் மொழிந்தது

மந்திரிதான் காதில் கேட்டு
மகாராசர் முன்னே வந்தார்.
"ராசாவே ராசமன்னா.
ராசமுடி பாண்டியனே.
மெச்சும் பெருமாள் பாண்டிய
னும்.
மேன்மைபெற்ற பாலகனும்
இறுசால் பணம்பிரித்து
இன்பமுடன் கொண்டல்லவோ
பணம் செலுத்தி வாரபோது
பாலகனும் பட்டுவிட்டான்.
பட்டு விழுந்தானே
பாரமுடி சாய்த்தானே.
குத்து விழுந்திருக்காம்
குடலு சரிந்திருக்காம்
படுகளத்தைச் சொல்வதற்குப்
பத்தினிகள் வந்திருக்கார்."

1. வெள்ளை — விடியல் வெளுப்பு.

அரசனின் ஆதரவுமொழி

அரசன் இவ்வார்த்தைகேட்டு
அவசரமாய் வந்தல்லவோ,
"அஞ்சவேண்டாம் பெண்ணரசே
ஆதரிப்பேன் உங்களைத்தான்
கவலைப்பட்டு என்ன செய்ய
கட்டழகிப் பெண் கொடியே
தம்பியுட காரியத்தைத்
தமக்கையரே முடித்து வாரும்"
"ராசாவே ராசாகோவே
ராசமுடி பாண்டியரே.
அரண்மனை நெருப்பது[1] தான்
அடியாளுக்கு வேணுமென்று"
அக்கா தங்கை இருபேரும்
அன்புடனே சொன்னபோது,
"பெண்களுடன் சென்
றல்லவோ
பெருமாள் பாண்டியர்க்கு
காரியத்தை முடித்துவாரும்
கட்டழகா மந்திரியே!" என்றார்.

ஈமத்துக்குச் செல்லுதல்

சாமான்களைச் சேகரித்தார்
சமர்த்தனை எரிப்பதற்கு
சந்தனக் கட்டை கொண்டு
சடைச்சியரும் வாராளே.
வளத்தராக்கி பெண்கொடியும்
வாய்திறந்து அழுதுவாராள்.
வெட்டிவேரும் பன்னீரும்
வேந்தனுக்குக் கொண்டு வாரார்.
மாதேரு முக்கதிலே
மந்திரியும் பெண்கொடியும்
சந்தனக் கட்டை வெட்டி
சதுரமாய்ப் பிளந்தடுக்கினார்கள்
குங்குமக் கட்டை வெட்டி
குறுக்கே பிளந்தடுக்கினார்கள்,

இறுதிக்கடன்

உடலைக் கிடத்திடவே
உடன்பிறந்தானைப்
பார்த்தாளே.
வரப்போ தலையாணி[2]
வாமடையோ பஞ்சுமெத்தை
கழுவிக்குளுப்பாட்டி தம்பியரைக்
கட்டையிலே தூக்கி வைத்து
சந்தனமும் பன்னீரும்
சாந்தாகப் பூசலுற்றார்
காட்டில் எருவெடுத்து
கன்னியர்கள் தீமூட்டி,
ஈரஎருவெடுத்து
இருபுறமும் தீ மூட்டி,

நன்றிமிக்க நாய்கள்

காச்சி நாயும் பூச்சிநாயும்
கதறுதே அன்னேரம்
மூட்டத்தைச் சுத்துதய்யா
முன்னே வந்து வணங்குதய்யா
சாத்தாவை வணங்குதய்யா,
சாம்பசிவனை வணங்குதய்யா.
மூன்றுதரம் சுத்தி வந்து
முக்கால் அடிவணங்கி
நாலுதரம் சுத்தி வந்து
நாதனை வணங்குதய்யா
ஐந்துதரம் சுத்தி வந்து
அரண்பாதம் வணங்குதய்யா.
ஏழுதரம் சுத்திவந்து
ஏறுதய்யா கட்டையிலே
மண்டியிட்டு படுக்குதய்யா
பாண்டியன் உடலோடு
பூச்சிநாயும் காச்சி நாயும்
புடிச்சி எரியுதங்கே.
பாண்டியரும் நாய்களுமே
பஸ்பமானார் அந்நேரம்

இறைநிலை சேரல்

மெச்சும் பெருமாள் பாண்டியரும்
மேன்மையுள்ள நாய்கள்
ரெண்டும்
வெந்து தணிந்தார்கள்
வீரசொர்க்கம் சேர்ந்தார்கள்[3]
மாண்டு மடிந்தார்கள்
மன்னர் வைகுந்தம் சேர்ந்தார்
கள்
தெய்வப் பிறப்பாகச்
சிருஷ்டித்தார் பகவானும்.

1. அரண்மனை நெருப்பு-அரசுமரியாதையுடன் செய்யும் இறுதிக் கடன்.
2. தலையாணி-தலையணை.
3. வீர சொர்க்கம்-வீரர்கள் அடையும் தெய்வ உலகு.

சிறப்புப் பெயர் அகராதி

அதலிஊத்து 680, 1463.
அப்பன் கோவில் 2157, 2160.
அம்பாசமுத்திரம் 2072, 2134, 2160.
அம்பை 2059.
அரண்பாதம் 2511.
அரிச்சுவடி 944.
அரிராம பாண்டியர் 1649, 1650.
அருந்ததி 1583.
அழகிய பாண்டிபுரம் 1706.
ஆச்சிஷர் 1648.
ஆத்தாங்கரை விலக்கு 2191.
ஆதிசிவன் 253.
ஆரியப் பட்டத்தேவர் 1510, 1511, 1522, 15 3, 1600, 1606.
இருளி 792, 798, 939, 1009, 1018, 1024, 1046, 1093, 1128.
உக்கிரங் கோட்டை 743, 1308, 1321, 1339, 1359, 1383, 1397, 1459.
ஊர்க்காடு 2178.
எண்சுவடி 944.
எமன் 2409.
ஏமன் 1260.
கசவர் பட்டணம் 1681, 1697.
கணபதி 48, 53.
கயிலை 15, 18, 45.
கரிசூழ்ந்த மங்கலம் 2192, 2202.
கருங்காடு 790, 850, 1008, 1016, 1050, 1127, 1284, 1828, 1900, 1912, 1977, 2034.
கள்ளநாட்டார் 1679, 1682, 1694, 1709, 1711, 1715, 1719, 1735, 1783, 1805, 1825, 1905, 1972, 2214, 2216, 2251, 2263, 2270, 2283, 2285, 2289, 2297.
கறுப்பண்ணத்தேவர் 1701.
கறுப்புசாமி 1737, 1740, 1744, 1811, 1845, 1853, 1854.
கனகக் குடும்பன்வளவு 1066, 1790, 1888, 1932.
காஞ்சிபுரம் 1662, 1680, 1696, 1738.
காவேரி 2036.
காளிகாதேவி 2142.
காளிகோவில் 190, 660, 663, 808, 1051, 1067, 1271.
காளிமுத்துத்தேவர் 1507.
கிளாக்குடையார் வாசல் 1782.
கிளுவடித்துறை 2153.
கீழச்வேல் பாலம் 2152.
குழிப்பெருக்கம் 945.
குறுக்குத்துறை 1714.
கைலாசம் 20, 2297.
கொலுப் பிச்சிதொப்பு 683.
கொளுமடை 1505, 1515
கொறறவாளி வம்சம் 1187, 1123, 1332.
கொன்றைவேந்தன் 945.
கோபால சமுத்திரம் 1186, 1237, 1331, 1519, 1570.
சக்கர நகரம் 180, 182.
சங்கர பாண்டித் தேவர் 744, 748, 767, 1309, 1353, 1360, 1392,
சங்கர வடிவம்மாள் 219, 223, 365 460, 490, 496, 640, 698, 781, 1312.
சங்கரன் 482
சங்கரன் கோவில் 276, 286, 714.
சடைச்சி 483, 783, 1422, 1446, 1609, 1639, 1646, 1651, 2477,
சந்திரன் 1632.
சவுக்கைத் தோப்பு 673, 1366.
சாத்தா 2324, 2504.
சாம்பசிவ மூர்த்தி 47.
சாம்பசிவன் 2505.
சாலாட்சி அம்மாள் 769.
சித்திரைமாதம் 1531, 1535.
சிவந்தி பாலம் 2155.
சிவன்கோவில் 188, 804, 1060, 1279, 1823.
சிவனார் 23, 25, 27, 40.
சீதை, 1634.
சீராமையர் வாசல் 1784.
சுமைதாங்கி 677, 1466.
சுத்தமல்லி 676, 1465.
சுலுபாலம் 2032.
சுவேதமகாரிசி 22, 68, 74, 100, 110, 114, 178.
சுவேதமகாரிசி வனம் 60, 148.
சுவேதரிசி 11.
சூரியன் 1630.
சேரன் மகாதேவி 2156.
சொக்கலிங்க நாதர் 140.

சோலையபுரம் 2176.
தருமராசா கோவில் 1779
தருவை 1778.
தவன கோவில் 2030
தாம்பரவர்னி 33, 34, 50, 70, 96, 146, 669, 755, 794, 1054, 1058, 1281, 1330, 1343, 1365, 1469, 1718, 1826, 1882.
தீர்த்தப திவம்முசம் 1401.
துர்க்கை 162, 1058, 1271.
துரோபதை 1636.
துளசிமாடம் 1881, 2177.
துஷ்டன் 1119, 1840, 2150, 2328.
தேசமாணிக்கம் விலக்கு 2154.
தேவர்குளம் 1698, 1702, 2206.
தொட்டிபாலம் 1880.
நாசக்குடும்பன் 806, 1064, 1277, 1788, 1822, 1884, 1890, 1934, 1970.
நெல்லையம்பலம் 1712.
நெல்லையப்பர் 1713.
பச்சையாறு 1780, 2026.
பசுக்கதை 948.
பசுங்கிளி அய்யர் வாசல் 1786
பத்தமடையாப்பிள்ளைப் பாலம் 2028, 2195.
பரமசிவம் 16.
பறக்குளம் 1787.
பாட்டாளியார் வீதி 2182.
பாண்டிய நாடு 31, 32.
பாண்டியமார் 0, 90, 98.
பாண்டியர் 129, 196, 454, 562, 753, 920.
பார்வதி 16.
பாரதம் 948.
பாளையங்கால் 802, 1059, 1280, 1781, 1824, 1883, 2146, 2190, 2314.
பாளையாத்தாங்கால் 666.
பிரமதேவன் 1258.
பெருமாள் 955.
பெருமாள் பாண்டியன் 2471.
பொன்பாண்டியன் 734.
பொன் பெருமாள் தேவர் 201, 213, 218, 563, 571, 597, 632, 746, 780, 810, 828, 842, 1004, 1020, 1311, 1413.
மகாதேவர் 21.
மகாதேவர் அய்யனார் 2321, 2433.
மஞ்சவிளை தோப்பு 378.
மதுரை 103, 127.
மதுரைப் பட்டணம் 128.
மன்மதன் 220, 1153, 1295, 1602.
மாஞ்சோலை 2179.
மாதேருமுக்கு 2320, 2432, 2482.
மானாட்டான் சாலை 2024.
மானூர் 684, 737, 1461, 1708.
மீனாட்சி அம்பிகை 141.
முக்கண்ணன் 492.
முப்பிடாதி அம்மாள் 152, 661, 2144.
முன்னீர் பள்ளம் 1776.
முன்னீர் பாளையம் 1720.
மூங்கில் வனம் 51, 104,
மூங்கிலடி தீர்த்தம் 71.
மூங்கிலடித்துறை 1385.
மெச்சும் பெருமாள் 557, 1012, 1029, 1072, 1092, 1110. 1118, 1140, 1239, 1349, 1352, 1356, 1369, 1405, 1455, 1473, 1653, 1658, 1831, 1856, 1868, 1962, 1988, 2021, 2066, 2245, 2257, 2256, 2298, 2334, 2372, 2420, 2444, 2521.
மோகினியாள் 1256.
ரதி 220, 1153, 1295, 1602.
ராசகோபால சமுத்திரம் 670, 756, 786, 1471.
ராமாயணம் 949.
ராமாலட்சுமணா களஞ்சியம் 132.
ராமையம்பட்டி 1710.
ராஜபாளையம் 1113.
வடமலையான் 1262.
வளத்தராக்கி 416, 438, 482, 1313, 1421, 1446, 1455, 1512, 1551, 1601, 1638, 2104, 2404, 2478.
வன்னிக்கரந்தை 1698, 2206.
வாழ்மதுரை 79.
வித்தை வினாயகன் 260.
விளாகத்து விலக்கு 1716.
வினாயகர் 75, 113.
விஸ்வநாதர் வாசல் 1056, 1283.

வீமன் 1119, 1838, 2148, 2366.
வீரக்கரைசாள ராசா 86, 176, 758, 1002, 1656, 1960.
வீரகம்பதி 2158, 2181.
வீரபத்திரத்தேவர் 1726, 1752.
வீரமார்த்தாண்டராசா 87, 171, 559, 1003, 1657, 1961, 1984.
வெள்ளாங்குழி நாடு 2159, 2180.
வெள்ளைக்கணபதி 43, 77.
வெள்ளைக்கரை 674, 1476.
வெள்ளைப் பிள்ளையார் வாசல் 2364.
வெள்ளை வினாயகர் 54, 101, 664.
வைகுந்தம் 2525.

மயிலேறி பாடிய
மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை
(வில்லுப்பாடல்)

ஆய்வுரை

கதை கிடைத்த வரலாறு

ஒரு நாள் மாலை நேரத்தில் நானும், என் தங்கையின் கணவர், மைத்துணர் பெருமாள் பாண்டியனும் எனது வீட்டின் மாடியில் அமர்ந்துகொண்டு பலவற்றைப் பேசும்போது வில்லுப் பாடல்களைப்பற்றியும் பேசினோம். அவருக்குப் பிறந்த ஊர் கோபால சமுத்திரம். பொருநை நதிக்கரையில், பொங்கி வரும் புதுவெள்ளத்தை எத்தனையோ தலைமுறைகளாகப் பார்த்துப் பார்த்து, பரவச நிலையில் மோனதவம் செய்வது போன்று அமர்ந்திருக்கும் அவ்வூர். ''உங்க ஊர்ல என்னென்ன வில்லுக்கதைகளெல்லாம் பாடுறுங்க'' என்று அவரிடம் விசாரித்தேன். அவர் என்னிடம் அப்பொழுதுதான் மெச்சும் பெருமாள் பாண்டியன் கதையைப் பற்றியும் சொன்னார். அக்கதை, எனக்கு மிகவும் பிடித்திருந்தது. பாட்டு வடிவத்தில் இக்கதை எங்கு கிடைக்கும், யாரிடம் கிடைக்கும் என்று ஆவலால் கேட்டபோது அவர் என்னைத் தன் ஊர்க்கு அழைத்தார்; சென்றேன்.

பிறகு நானும் அவரும் அங்கிருந்து திருநெல்வேலிக்குச் சென்றோம். வில்லுப் புலவர் மயிலேறி அவர்களைத் தேடி தாம்பிரபரணிக் கரையோரம் அலைந்து, இறுதியில் கண்டு பிடித்தோம். அந்த நாள் என்னால் என்றும் மறக்கமுடியாத நாள். அந்தப் புலவர் எங்களைத் தமது பேச்சு வன்மையால் மிகவும் கவர்ந்து விட்டார், ஆர்வத்தோடு பல குறிப்புகளை விளக்கினார். இறுதியில், ''மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை''யைப் பற்றிக் கேட்டபோது மிகவும் மகிழ்ச்சியோடு தான் எழுதி வைத்திருந்த இருநூறு

பக்க நோட்டினைத் தந்தார். அந்த நதிக்கரையில் ஆர்வமிக்க ஒரு சீடனைப் போல் அன்று நான் நடந்துகொண்டேன். ஒரு குருவினைப் போல் அவர் அந்த ஏட்டினைத் தந்தபோது, எனக்கு எல்லாமும் பெற்றது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது அந்தக் கதைதான் இன்று உங்கள் கைகளில் தவழ்கின்றது.

கதை நடந்த வரலாறு

இக்கதை என்று நடந்தது என்று ஆய்வது மிகவும் சிக்கலாக அமைகின்றது. காரணம் வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் தெளிவாக இதில் இல்லை. இக்கதை, கோபால சமுத்திரம் என்ற சக்கர நகரம் தோன்றுவதினின்றும் தொடங்குகின்றது. அவ்வூர் தோன்றி ஏறக்குறைய500ஆண்டுகள் ஆகியிருக்கலாம் என்று அவ்வூர்ப் பெரியவர் ஒருவர் சொன்னார்.

இக்கதையில் இரண்டு பாண்டிய மன்னர்கள் வருகின்றனர். அவர்களின் பெயர்கள் முறையே, வீரக்கரையாளா ராசா என்றும், வீரமார்த்தாண்ட ராசா என்றும் உள்ளன. பாண்டியர்களின் வரலாற்றில் ஏனோ இவ்விரு பெயர்களும் இடம் பெறவில்லை. இவர்கள், மதுரையினின்றும் தென்னாட்டைச் சுற்றி பார்க்க வந்த போது, சுவேத மகாரிசி வனத்தில் அந்த முனிவரைக் கண்டு, அவரது அருளால், அங்கு ஆட்சியை நிறுவினர் என்ற குறிப்பு தென்படுவதால், எனக்கு ஒன்று தோன்றுகிறது. என்னவென்றால், ஒரு வேளை பாண்டியர்களின் ஆட்சி மதுரையில் நலிவுற்று, தென் பாண்டியில் தங்களது ஆட்சியை நிறுவிய வரலாறுதான் இவ்வாறு பேசப்படுகின்றதோ என்று ஐயுறுகின்றேன். அவ்வாறு இருக்குமென்றால், அக்காலமும் ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன்னர் தானே.

இக்கதை, கைலாயத்தில் ஆரம்பித்து, கோபால சமுத்திரத்திற்கு வந்து, இடையில் கருங்காடு, உக்கிரன் கோட்டை, அம்பா சமுத்திரம், காஞ்சிபுரம் என்ற ஊர்களுக்குப் போய், இறுதியில் கோபால சமுத்திரத்திலேயே முடிவு பெறுகின்றது.

இக்கதையில், இரண்டு பஞ்சங்கள் குறிக்கப்படுகின்றன. ஒன்று, பொன்பெருமாள் தேவரை, ஊரைவிட்டு ஓட்டி உக்கிரங் கோட்டையில் தங்க வைக்கின்றது. மற்றொன்று, பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு வந்து, காஞ்சிபுரத்து மறவர்களைக் கொள்ளைக்காரர்களாக்கியுள்ளது. இவ்வாறு அடுத்தடுத்து வந்த பஞ்சங்களின் காலம் எதுவென்றும் கணிக்க, வரலாற்றில் சான்றுகள் இல்லை. இவ்வாறு பஞ்சத்தைப்பற்றி பாடுவதைக் கதைப் பாடல்

மரபு என்று ஒதுக்கிவிட இயலாது: ஏனென்றால், இது வெறும் கற்பனை காவியம் அல்ல: நடந்த முடிந்த ஒரு வீரனின் வாழ்க்கைக் கதை —வரலாற்றுக் கதை.

இக்கதையில் கூறப்படும் இடங்களும், ஊர்களும் இன்றும் உள்ளன. வண்ணாத்தியின் பேரில் வெகுமானமாக அளிக்கப்பட்ட நிலம் இன்றும் 'வண்ணாத்திப் போக்கு' என்றே அழைக்கப்படுகின்றது. தண்டனைக்காக அன்று வெட்டப்பட்ட அட்டைக் கிடங்கு இன்றும் தூர்ந்து போனாலும், அதே பேரில் வழங்கப்படுகின்றது. சிவன் கோவிலும், பிள்ளையார் கோவிலும், முப்பிடாதி அம்மன் கோவிலும், நாமம் இட்ட கிணறும் இன்றும் நம் கண்களுக்குக் காட்சி தருகின்றன. கோட்டை அழிந்துபோன இடம் இன்று மேடிட்டு மண்மூடிக்கிடக் கின்றது. மெச்சும் பெருமாள் பாண்டியரின் பரம்பரையினர் இன்றும் இவ்வூரில் வசிக்கின்றனர். இவர்களால் வணங்கப்படும் தெய்வமாக இன்றும் இப் பாண்டியன் சிலை வடிவில் காட்சி தருகின்றார். போக்காளசாமி என்றும் இவரை அழைக்கின்றனர்.

கதையின் வரலாறு

சுவேத மகாரிசி என்பவர் சுகமாக வாழ்ந்து வரும்போது, அவருக்குச் சுவையான ஒரு ஆசை எழுந்தது. அதாவது, "கைலாயம் செல்லவேண்டும்; கடவுளைப் பார்க்கவேண்டும்; தலைமை ரிசியாக விளங்கவேண்டுமென்ற வரமும் வாங்க வேண்டும்" என்ற ஆசையால் கைலாயம் சென்றார்; சிவபிரானைக்கண்டார். வரம் கேட்டார். சிவனும் தாம்பரவர்ணிக் கரையில் தவமிருந்தால் வரம் கிடைக்கும் என்றார். எனவே, வெள்ளை விநாயகரையும் அழைத்துக் கொண்டு முனிவர் புறப்பட்டுவந்தார்.

பொருநைக் கரைக்கு வந்த முனிவர், வனமொன்றில் தவமிருந்தார். நாடு வலம் வந்த மதுரை மன்னர்களை விநாயகப் பெருமானது உதவியுடன் கண்டார். அவ்வனத்திலே சக்கர நகரம் என்று ஒரு நாடு அமைத்து அரசாளவேண்டும் என்று முனிவரும் வேண்ட மன்னர்களும் ஒப்பினர்.

மெச்சும் பெருமாளின் பண்புகள்

இக்கதையில் மெச்சும் பெருமாளின் பாத்திரம்தான் சிறந்து விளங்குகின்றது. அவன்தான் கதைத் தலைவன். அவனது குணச் சிறப்புகள் எண்ணி மகிழ்வதற்குரியது. கதைத் தலைவனுக்குரிய அத்தனைச் சிறப்புகளும் இவனிடம் மொத்தமாக உள்ளன.

பாண்டிய மன்னர்கள் அந்த வனத்தில் நகரமைத்தனர்-அரண் மனை கட்டினர்; குடும்பக்கமார்களைக் குடியேற்றினர்; பொன்னும் பெருமாள் பாண்டியரைத் தலையாரியாக நியமித்தனர்; கோவில் அமைத்தனர்; குறைவின்றி ஆட்சி செய்தனர்.

இவ்வாறு நிறைவுடன் வாழ்ந்து வரும் போது, தலையாரி பாண்டியனுக்கு ஒரு தணியாத குறையுண்டு. அதுதான் குழந்தை யில்லையே என்ற ஏக்கம். சோதிடரைக் கேட்டபோது, 'சங்கரன் கோவிலுக்கு, இருபத்தொரு மாதர்ந்தம் இன்பமுடன் நடவுங்கள், கேட்டது கிடைக்கும் என்றார். சங்கரன் அருளினால் பாண்டியன் மனைவி சங்கர வடிவம்மாள் இரு பெண் குழந்தைகளையும் ஒரு ஆண் குழந்தையையும் பெற்றெடுத்தாள். அவர்களுக்கு முறையே வளத்தராக்கி, சடைச்சி, மெச்சு பெருமாள் என்று பெயரும் இட்டனர்.

மூத்த மகள் பிறந்த நேரமும், மகன் பிறந்த வேளையும் சரி யில்லை. அவர்களின் கிரகப்படி பெற்றவர்கள் ஊரைவிட்டு ஓட வேண்டும் என்ற நிலை,பஞ்சம்வேறு வந்தது. பகுதிப் பணம் கட்ட முடியாத அச்சம் வேறு, அவர்களை ஓர் நாள் இரவு சாம நேரத்தில் ஊரை விட்டே ஓடச் சொன்னது. ஊரை விட்டு ஓடியவர்கள் மறந்துபோய் தமது அருமையான ஆண்குழந்தையை விட்டுவிட்டுச் செல்கின்றனர். இடை வழியில் மகனை விட்டுச் சென்ற எண்ணம் தோன்றினாலும், வேறு வழியில்லாமல் மனதைக் கல்லாக்கிக் கொண்டு உக்கிரன் கோட்டை போய் சேர்ந்தனர். அங்கே, அவர் களுக்குச் சங்கரபாண்டியத் தேவரும் அவரது மனைவியார் சாலாட்சி அம்மையாரும் அடைக்கலம் கொடுக்கின்றனர்.

மறுநாள் அழுக்கெடுக்க வந்து வண்ணாத்தி இருளி, கோபால சமுத்திரத்தில் குழந்தையைக் கண்டெடுக்கிறுள். அரசனின் ஆதர வால் அவளே அக் குழந்தையைத் தன் குழத்தையோடு வளர்த்து வருகிறுள். மெச்சும் பெருமாள் தனது 12 வயதுக்குள் படிக்க வேண்டிய அனைத்தையும் படித்து'முடித்து ஆணழகனாய் விளங்கு கின்முன். ஆற்றல்மிக்க வீரனாகவும் விளங்குகின்றுன்.

பாண்டியமன்னர்கள் பெருமாளை அழைத்து அவனை அரண் மனையில் சேர்த்துக் கொண்டு அறுபது பொன் சம்பளம் தருகிறார் கள். அவனை வளர்த்த வண்ணாத்திக்கு அஞ்சு ஏக்கர் நிலத்தை மானியமாகத் தருகிறார்கள். எல்லாவித வசதிகளோடும் மெச்சும் பெருமாள் இன்பமுடன் அரண்மனையில் வசிக்கிறுன். ராசபாளை யத்திலிருந்தும் இரு நாய்களை வரவழைத்துக் கொண்டு நன்ருக காவலும் செய்கின்ருன்.

வண்ணாத்தியின் 'மகனது திருமணத்துக்கு வந்த மெச்சும் பெருமாள் மணப்பெண் மீது காதல் கொள்கிறான். இருளியிடம் போய் எப்படியாவது அப்பெண்ணோடு கூடியிருக்க ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகிறான். வண்ணாத்தியும் வேண்டிய வழி முறைகளையும், வசதிகளையும் செய்து தருகிறாள். மன்மதனும் ரதியும் போல் மெச்சும் பெருமாளும் இருளியின் மருமகளும் மருவி விளையாடுகின்றனர். இக்கதை தொடர்கிறது.

உக்கிரங் கோட்டையில் பொன்னும் பெருமாள் தேவரும் அவரது மனைவியும் மாண்டுவிட, இரு பெண்களையும் சங்கர பாண்டியத்தேவரே பாதுகாத்து வருகின்றார். அவ்வூரில் தீராத வழக்கொன்று. அதை மெச்சும் பெருமாள் தீர்த்து வைக்கிறான் வழக்குக்கு வந்த சங்கரபாண்டியன் வண்ணாத்தியைச் சந்தித்த போது அவள் மெச்சும் பெருமாளின் பழைய கதையைச் சொல்லி ஒரு சிக்கலையும் தீர்த்து விடுகிறாள். மனமகிழ்ந்த சங்கரபாண்டியன் இருபெண்களையும் கொண்டு வந்து மெச்சும் பெருமாளிடம் ஒப்படைத்துவிடுகிறார். தம்பி தன் தமக்கைகளோடு ஒருபுதுவாழ்வைத் தொடங்குகிறான்.

பருவம் அடைந்த இரு தமக்கைகளையும் பொருத்தமான இருவர்க்குத் திருமணம் செய்துவைக்கின்றான். என்றாலும் அவர்களையும் தன்னோடு, தன் வீட்டோடு வைத்துக் கொண்டு இனிதான வாழ்வை இடையூறின்றி கழித்து வருகின்றான்.

மீண்டும் ஒரு பஞ்சம் ஆரம்பமாகிறது.காஞ்சிபுரத்து மறவர்கள் கொள்ளையடிக்கத் திட்டமிடுகின்றனர். தென்னாடுதான் அவர்களுக்குத் திருட்டுக்களம் ஆகின்றது. கறுப்புசாமியின் தலைமையில் பதிமூன்று பேர் அடங்கிய ஒரு கொள்ளைக் கூட்டம் தென்னாடு அடைகின்றது. முன்னீர் பாளையத்தில் வீரபத்திரத் தேவர் கொடுத்த துப்பின்படி அவர்கள், கோபால சமுத்திரத்தில் பள்ளிருட தாவளத்தில் கொள்ளையிடுகின்றனர்-குலவையிடுகின்றனர்! குலவைச் சத்தம் கேட்ட மெச்சும் பெருமாள், கொள்ளையர்களைக் கொன்றுகுவித்து ஏழு கிடாரத்திரவியத்தையும் மீட்டுவிடுகிறான். ஒருகொள்ளையன் மட்டும் தப்புகிறான் செய்தியை அறிந்த குடும்பக்கமார்கள் மகிழ்ச்சியுடன் மெச்சும் பெருமாளைப் போற்றுகின்றனர். பரிசளிக்கின்றனர்.

பாண்டிய மன்னர்கள் இந்தச் செய்தியைக் கேட்ட போது மெச்சும் பெருமாள் மீது கோபம் கொள்ளுகின்றனர். அவனை அரண்மனையினின்றும் விலக்கி வைக்கின்றனர். என்றாலும் அவனது வேண்டுகோளுக்கிணங்கக் காவல் உரிமையை அவனுக்கு

மட்டுமே பட்டயமெழுதிக் கொடுக்கின்றனர் மெச்சும் பெருமாளின் காவலில் நாடு செழிக்கிறது.

இருசால் பணத்தை அம்பாசமுத்திரத்தில் கொண்டு போய் கட்டுவது வழக்கம். மெச்சும் பெருமாளுக்குப் பணம் கட்டும் முறை வருகின்றது. கண்ணுவலியின் தொந்தரவு இருந்தபோதிலும் கடமையுணர்வுடன் அம்பா சமுத்திரம் போய் பணத்தைக் கட்டிவிடுகிறான்.

திரும்பும் வழியில் திருடர் கூட்டம் மீண்டும் குறுக்கிடுகிறது. எல்லாலாரையும் கொன்று விட்டோம் என்ற நிறைவில்—நினைவில் இருக்கும் போது தப்பிய ஒருவன் மட்டும் ஒளிந்து வந்து வேலால் விலாவைத் துளைத்து விட்டான். வீழ்ந்த வீரனின் நாய்கள் அவனை அவனது சடலத்தை- பாளையங்கால் தண்ணியிலே இழுத்து வந்து மாதேரு முக்கிலே கிடத்துகின்றன. ஒரு நாய் ஓடிப்போய், அவனது தமக்கையரை அழைத்து வர, அக்காமார்கள் அழுது புலம்புகின்றனர் அரசனது உதவியால், அரண்மனை நெருப்பு மூலம் அவனை எரித்து விடுகின்றனர். நாய்களும் அவனோடு தீயில் குதித்து சாம்பலாக மூவரும் வீர சொர்க்கம் அடைகின்றனர்.

இவனைச் சிறந்த அழகன், ஆற்றல்மிக்க வீரன், கல்விமான், கடமை தவறாதவன், பாசமிக்க சகோதரன், பண்பு மிக்க சான்றோன் என்று பலவாறு குறிக்கலாம். இவனிடம் உள்ள ஒரே ஒரு குறை — பெரியகுறை பிறன்மனை நயத்தல்தான். இது இவனது புகழுக்கு ஒரு களங்கம். அச்சமுதாய அமைப்பில் இது ஏற்றுக் கொள்ளலாம் — என்று காரணம் காட்டினாலும் இது நிலவின் கறை, நீரின் நுரை, நிலைத்த வடு என்பது மட்டும் உண்மை.

> "முன்னழகைக் கண்டவர்கள் மோகிப்பார் ஆயிரம்பேர்
> பின்னழகைக் கண்டவர்கள் பிரமித்து நின்றிடுவார்.
> அள்ளித் தெளித்தது போல் அங்கமெல்லாம் தேமல்களும்"
>
> (986—963)

இவனைச் சிறந்த அழகன் என்று சித்தரிக்கின்றது.

> "கூடுவிட்டு கூடுபாய்வான் குறளிவித்தை தானுமுண்டு
> மையுமுண்டு சிமிழுமுண்டு மயக்குவித்தை பாடமுண்டு
> மூலையிலே இருக்கும் பெண்ணை முத்தத்திலே வர வழைப்பான்
> அடுக்களையில் இருக்கும் பெண்ணை அம்பலத்தில் வரவழைப்பான்

சுளவு தட்டிப் பறக்க வைப்பான் தொண்ணூறு காதவளி
உரலைப் பறக்க வைப்பான் ஒன்பது காதவளி'' (956—975)

என்ற செய்திகள் இவன் கற்ற வித்தைகளைக் காட்டுவன.

'' தலைவருடைய வழக்கையெல்லாம் தான் முடித்தார் பாண்டியரும்
தீராத விவகாரத்தைத் தீர்த்தாராம் பாண்டியரும்.''

என்ற அடிகள் இவனது நீதிவழங்கும் நேர்மையைக் காட்டுகின்றது. உக்கிரன் கோட்டையில் தீர்க்கப்படாமல் திண்டாடிய — திக்குமுக்காடிய விவகாரம் மெச்சும் பெருமாளால் ஒரே நாளில் தீர்த்து வைக்கப்பட்டது.

தமக்கையர்களின் மீது இவனுக்குப் பாச உணர்வு அதிகம். எனவே, மிகுந்த கவனமுடன் இருவருக்கும் மணமுடித்து வைக்கின்றான். கொளுமடை ஊருக்குப் பெண் கொடுக்க வேண்டுமெனில் மாப்பிள்ளை கோபால சமுத்திரத்தில் வந்து வாழ வேண்டும் என்று நிபந்தனை போடுகிறான். ஊர்மெச்ச, உறவு மெச்ச தமக்கையர்களின் திருமணத்தைத் தடபுடலாக நடத்துகிறான்.

கள்ள நாட்டாரின் குலவைச் சத்தம் கேட்டதும் தன் நாய்களோடு விரைந்து செல்கிறான் மெச்சும் பெருமாள்.

''சிங்கம் போல பாய்ந்தாரம்மா சீமான் அந்த பாண்டியனும்
பூனை போல் பதுங்கலுற்றார் புலிப்பாய்ச்சல் பாயலுற்றார்
பதிமூன்று பேர் கள்ளர்களைப் பாய்ந்து வெட்டலுற்றார்.
உற்றதொரு கள்ளர்களை ஓடி ஓடி வெட்டலுற்றார்.''

என்று புலவர், பெருமாளின் வீரச்செயலை வருணனை செய்கின்றார்.

கடமையுணர்விலும் பெருமாள் பாண்டியன் சிறந்து விளங்குகின்றான். கண்ணுவலியின் தொந்தரவையும் தாங்கிக் கொண்டு அம்பைக்குப் பகுதிப் பணம் கட்டுவதற்குப் போகின்றான். புறப்படும் போது சில தீய சகுனங்கள் தோன்றுகின்றன. தமக்கையர் தடுக்கின்றனர்.

'' என்புத்தி கேட்டவர்கள் கோடியுண்டு
பெண்புத்தி கேட்டுப் பிழைப்பதுண்டோ?'' (2130—31)

என்று மறுத்து, மீறிச் செல்லுகின்றான்;

சிறந்த பக்திமானாகவும் விளங்குகின்றான். அம்பைக்குப் புறப்படுவதற்கு முன்னால் தெய்வங்களை வணங்கி விட்டே செல்லுகின்றான்.

" காளிகா தேவியரைக் கையெடுத்து வணங்கிக் கொண்டு
முப்பிடாதி அம்மாளை முடிவணங்கித் தெண்டனிட்டார்"
(2142—45)

என்று இவனது பக்தியைக் காட்டுகின்றார் புலவர். பிறன்மனை நயக்க வண்ணாத்தி வீட்டுக்குச் செல்லும் போது கூட

" துர்க்கை என்ற காளிகோவில் சுற்றிவந்து தெண்
டனிட்டார்." (1271—72)

என்று குறிப்பிடுகின்றார்.

பெருமாள் பாண்டியனிடம் உள்ள பெரிய பலவீனம் வண்ணாத்திப் பெண்மீது ஆசைகொண்டது — அடைய முற்பட்டது — அடைந்து கொண்டது.

" மருமகளும் நானுமிங்கே மருவி விளையாடனுமே
மன்மதனும் ரதியும் போல் மகிழ்ந்து விளையாடனுமே"
(1151—54)

என்று தன் ஆசையை, வளர்த்த வண்ணாத்தியிடமே கூறுகிறான். அவளும் தக்க ஏற்பாடுகளைச் செய்கின்றாள்.

" வேண்டுமட்டும் விளையாடி வெற்றிலையும் தின்று துப்பி
விடியவொரு சாமத்திலே வெண்கோழி சத்தம்கேட்டு"

தனது அரண்மனைக்குப் புறப்படுகின்றார். இக்கதை அனுதினமும் தொடர்கின்றது. கதையின் படி கள்ளநாட்டாரிடம் இருந்து ஏழுகிடாரத்திரவியங்களை மீட்பது வரை மெச்சும் பெருமாள் வண்ணாத்தி வீட்டுக்குப் போய் வருகிறார்.

இவ்வாறு மெச்சும்பெருமாள், கதைத் தலைவனுக்குரிய அனைத்து குணச்சிறப்புகளையும் பெற்று விளங்குகின்றான்.

வரலாற்று விளக்கங்கள்

இக்கதையினின்றும் வரலாற்றுக்கு உதவக் கூடிய சில செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகிறது.

1. வீரக்க்ரையாள ராசாவும் வீரமார்த்தாண்ட ராசாவும் மதுரையினின்றும் புறப்பட்டு வந்து சுவேத மகாரிசியின் உதவி

யுடன் மூங்கில் வனத்தில் நகரமைத்தனர். அந்த நகரமே சக்கர நகரமென்றும், பின்னர் ராசகோபால சமுத்திரம் என்றும், இன்று கோபால சமுத்திரம் என்றும் மருவியுள்ளது.

2. நகர் காவலுக்கு மறவர் இனத்தைச் சார்ந்தவர்களே நியமிக்கப் பட்டனர். அவர்கள்தான் காவல் மறவர்களாகவும், தலையாரிகளாகவும் மன்னர்களின் அரவணைப்பில் இருந்தனர். இக்கதையில் பொன்னும் பெருமாள் தேவர் தலையாரி பதவியையும், பெருமாள் பாண்டியன் காவல் உரிமை பட்டயத்தையும் பெறுகின்றனர்.

3. பஞ்சகாலத்தில் கள்ளநாட்டார் கொள்ளையிடுவதற்காக தென்னாடு முழுவதும் அலைந்தனர் என்ற செய்தியையும் அறிந்து கொள்ளுகின்றோம். ஆகவே, கொள்ளைக் காரர்களாக இருந்ததும் மறவர் இனம்தான். காவல்காரர்களாக இருந்ததும் மறவர் இனம் தான். இது ஒரு வரலாற்று வேடிக்கை.

4. தண்டனைகள் எவ்வெவ்வாறு அளிக்கப்பட்டன என்ற செய்தியையும் இக்கதை நமக்கு விளக்குகின்றது. பகுதிப்பணம் கட்டாதவர்களை அட்டைக்கிடங்கில் இறக்குவதுண்டு. ஒரு கிடங்கு தோண்டி, உள்ளே அட்டைகளை நிரப்பிவிடுவர். இவ் வட்டைகள் மனிதர்களின் இரத்தத்தை உறிஞ்சுவதற்குத் தயாராக இருக்கும். இதை,

> " அட்டைக் கிடங்கினிலே அருங்கிளியே இறக்கிடுவார்
> அட்டை பிடுங்கிடுமே ஆயுளுக்கே மோசம் வரும் (603—8)

என்று விளக்குகின்றார். குனிய வைத்து முதுகின் மேல் கல்லினை ஏற்றுவதும், பட்டினி போடுவதும் உண்டு.

> "முதுகின் மேல் கல்லேத்தி மூர்க்கமுடன் நிறுத்திடுவார்"
> (603-6)
>
> "பகுதி கட்டாத பேர்களைத்தான் பட்டினி
> போட்டதுண்டு (617-18

என்று இவ்வாறு தண்டனைகள் கூறப்படுகின்றன.

5. மானியம் அளித்தலையும் இக் கதையால் அறிந்து கொள்ளுகின்றோம். ஒருவரது உதவியை மெச்சியோ, செயலைப் பாராட்டியோ இம்மானியங்கள் அளிக்கப்படுவதுண்டு, வெகுமதியினின்றும் வேறுபட்டது இது.

"நஞ்சை நிலம் மானியம்தான் நலமுடனே தரப்போறார்" (930-31)

என்று சோதிடர் சொல்லவும், மன்னன் அவளுக்கு 5 ஏக்கர் நிலத்தை மானியமாக அளிக்கின்றார்.

6. ஓர் உரிமையைப் பட்டயம் எழுதிக் கொடுக்கும் வழக்கத்தையும் இக்கதையால் அறிந்து கொள்ளுகின்றோம். மெச்சும் பெருமாள் தனது காவல் உரிமையைப் பட்டயமாக எழுதிக் கேட்கிறான், பாண்டிய மன்னரிடம்.

" ஆயிரம் வருசத்துக்கு அழியாமல் இருக்க வேண்டும்
பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் பேர் சொல்ல வேணு
மென்றார்
செம்பு நல்ல பட்டயத்தில் திசை எழுதித் தரவேண்டும்"
(2014—19)

என்று வேண்டியபோது, மன்னனும் கம்மாளரை அழைத்து வந்து கட்டுடனே எழுதிக்கொடுத்தார் என்று அறிகின்றோம்.

7. மரியாதைக்குரியவர்கள் இறந்து விட்டால் அவருக்கு ராச மரியாதை உண்டு. இறப்புச் சடங்குக்குத் தீ மூட்ட அரண்மனைத் தீ கிடைக்கும். இக்கதையில் பெருமாளின் தமக்கையர் மன்னனிடம் தீ கேட்கின்றனர்.

"அரண்மனை நெருப்பதுதான், அடியாளுக்கு வேண்டுமென்று' (2466-67) தமக்கையர் கேட்டபோது மன்னனும் மனமுவந்து செய்கிறான் இதுபோல் முத்துப்பட்டன். இறந்ததும் அவனதுமனைவியர் சிங்கம்பட்டி ஜமீன்தாரிடம் போய் தீ கேட்கின்றனர்.

8. கோபால சமுத்திரத்தில் பிரிக்கப்படும் இறுசால்பணத்தை அம்பா சமுத்திரத்தில் கொண்டு போய் கட்டி வந்தனர் என்ற செய்தியையும் இக்கதையால் அறிய முடிகின்றது. பணம் கட்ட ஆபீசும், பணம் கட்டியதற்கான சீட்டும் இருந்தது என்றும் அறிகிறோம்.

இவ்வாறு வரலாற்றுக்கு உதவும் பல்வேறு செய்திகளை இக்கதை நமக்கு இயம்புகிறது.

சமுதாயச் செய்திகள்

சமுதாயச் செய்திகளில் மக்களின் பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும் அடங்கி விடுகின்றன. மக்களிடம் கொண்ட இத்தகைய பழக்கங்களை இது போன்ற கதைப்பாடல்கள் விவரிப்பது வழக்கம். இக்கதையிலும் சில சமுதாயச் செய்திகள் சித்தரிக்கப்படுகின்றன.

1. சோதிடர்கள் மக்கள் வாழ்வில் பெரும்பங்கை வகுத்திருக்கின்றனர். சங்கரவடிவம்மாள் பொன்னும் பெருமாள் தேவர் குழந்தையில்லை என்று சொன்னதும் சோசியரை வரவழைக்கின்றார். அவரிடம் காரணம் கேட்ட போது அவர் பிள்ளையது வேண்டுமானால் பெருந்தவசு செய்ய வேண்டும், (270-71) என்று கூறுகிறார் குழந்தையும் பிறக்கிறது அதற்கு பேரிடவேண்டுமென்று எண்ணிய போது மீண்டும் சோதிடரை வரவழைக்கின்றனர்வளத்த ராக்கி என்று பெயரிடுகின்றனர் "பிள்ளை பிறந்தநேரம் பூமிக்கே ஆகாதே (4.5-20) ஏழு நல்ல வயதிலேதான் இந்த ஊரை விட்டுப் போகனுமே "(440 41) என்று சொன்னார். அவ்வாறே நடந்தது. மெச்சும் பெருமாளை வண்ணாத்திஎடுத்து வளர்க்கிறாள்அவனைப் பள்ளிக் கூடம் அனுப்ப வேண்டும் என்று ஆசைபடும் போது சோதிடரை அழைத்துக் கேட்கிறாள் 'மூத்தமகன் சாதகத்தில்' முட்டாளாய்த் தானிருப்பான்'' (90903) என்று மூத்தமகனுக்கும் கம்பெடுத்து காவல் செய்வான் கடவுள் என்று மதிப்பார்கள் என்று இளைய மகனுக்கும் சோதிடர் சாதகம் பார்த்துக் கூறுகிறார். அவ்வாறே நடக்கின்றது இவ்வாறு சோதிடர்களின் மீது அதிக நம்பிக்கை வைப்பதைப் பார்க்கிறோம்.

2. குழந்தைப் பேற்றுக்குத் தானமும், தவமும் மாதாந்தமும் பயன்படும் என்று நம்பினர். பொன்னும் பெருமாள் தேவரும் அவரது மனைவியும் சங்கரன் கோவிலுக்கு மாதாந்தம் நடந்தனர், 'தூரவழி போவார்க்குச் சுமை தாங்கி கட்டி வைத்தார் காதவழி போவார்க்குக் கல்கிணறு கட்டி வைத்தார்.'. (292-95) ஆண்டிபரதேசியர்க்கும் அன்னமடம் கட்டி வைத்தார்'', இலையிலே சாத முண்டாஸ் என்ன தவம் என்று சொல்லி தரையை நல்லதா மொழுகி சாதமுண்டார் இருபேரும் (300-305).

3. மக்களிடம் உள்ள தெய்வ நம்பிக்கையையும் இக்கதை தமக்கு தெளிவாக்குகின்றது சுவேதமகாரிசி கைலாயம் சென்று சிவபெருமானை வணங்கிவரம் கேட்கிறார் பெருந்தவசு செய்வதற்காகப் பிள்ளையாரையும் தன்னோடு மூங்கில்வனத்துக்கு அழைத்து வருகிறார்- வழிபடுகிறார் சக்கர நகரத்தை நிர்மாணம் செய்து கோட்டை கட்டும் போது ஒரு சிவன் கோயிலையும் மதுரைப் பாண்டியர்கள் கட்டுகின்றனர். குடும்பக்கமார்கள்வந்து குடியேறிய போது காளி கோவில் ஒன்று கட்டி அதற்கு முப்பிடாதி அம்மன் என்று பெயரிடுகின்றனர்.

4. கிராம தெய்வங்களுக்குக் கொடைகொடுக்கும் வழக்கம் இன்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் சிறப்பாக விளங்குகின்றது

இக்கதையில் சங்கரவடிவம்மாள் பிரசவ வேதனையால் துடிக்கும் போது "நம்ம குலதேவதைக்குக் கொடைகொடுக்க நேர்ந்தி டுங்கோ (374-75) என்று வேண்டுகின்றார். இவ்வாறு நேர்ந்து கொள்வதால் பலன் கிட்டும் என்பதும் மக்கள் நம்பிக்கை.

5. மாண்டவர்களுக்கு அவர்களின் நினைவாக மாலை வைப்பது ஒரு வழக்கம். இவ்வாறு மாலை வைப்பதால் மாண்டவர் களின் ஆவி மகிழ்ச்சியுறும் தான் வேண்டுவதை நிச்சயம் தந்து உதவும் என்றும் நம்புகிறார்கள். சங்கரவடிவம்மாள் தன்னுடைய பிரசவ வேதனையின் போது "மாண்டு மடிந்தவர்க்கு மாலை வைக்க நேர்ந்திடுங்கோ" (376-77) என்று வேண்டுகிறாள்-

6. தலையெழுத்தின் மீதும் அதன் விதி மேலும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர் "என் தலை விதிதான் எப்படியோ ஈசன் பகவானே" ("380-81) என்று சங்கரவடிவம்மாள் துயருறு கின்றாள் 'தலையில் எழுதினது, தப்பாதே ஒரு நாளும்' (952-53) என்று பொன்னும் பெருமாள் ஆறுதல் கூறுகின்றார்.

7. சகுனங்கள் மீது மக்கள் பெரும் நம்பிக்கை கொண்டிருந் தனர் சகுனங்களில் நல்ல சகுனம், தீயசகுனம் என்று இரு வகை உண்டு.

1. தலைவாசல் வார போது, தட்டுதடா நடையதுதான் (642-43)

2. முடுக்கத்திலே வாரபோது முடப்பூனைக் குறுக்கிடுமாம் (646-47)

3. ஆந்தை வந்து அலறிடுமாம் அபசகுனம் ஆகிடுமாம். (643-49)

4, சண்டாளி கண்ட கனா சங்கடமாய் தெரியுதப்பா(2122-23) ஆகியவை தீய சகுனங்கள் எனக் கருதப்படும். கெங்கைதாண்டி வாரபோது கெருடனைத்தான் கண்டாளே (796-97) என்று சொல்வது நற்சகுனம்.

8. சமுதாயத்தில் அடைக்கலம் கொடுக்கும் வழக்கமும் இருந் திருக்கிறது. பிழைக்கப்போன பொன்னும் பெருமாள் தேவருக்குச் சங்கர பாண்டியன் அடைக்கலம் அளிக்கிறார்.

9, கோழி கூவும் நேரம் (482), விடிந்து ஒருசாமம் (988), அத்த சாமம்(624)என்று நேரங்களைக் குறிப்பிட்டு வந்தனர் என்பதையும் அறிகிறோம்.

10. பள்ளிக் கூடத்திலே அரிச்சுவடி, எண்சுவடி, குழிப் பெருக்கம், கொன்றைவேந்தன், பசுக்கதை, பாரதம், பதினெட்டு ராமாயணம் போன்றவற்றைச் சொல்லிக் கொடுத்தனர் என அறி கிறோம்.

11. சிலம்பப் பள்ளி இருந்தது என்பதையும், வேறு பல வித்தைகளும் பயிற்றுவிக்கப்பட்டன என்பதையும் அறிந்துகொள் கிறோம். கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை, குறளி வித்தை, மயக்கும் வித்தை, அம்மியூரும் வித்தை, உரலைப் பறக்க வைக்கும் வித்தை, போன்று பல்வேறு வகை வித்தைகளைப் பெருமாள் பாண்டியன் பயின்றார்.

12. ஆடை அலங்காரங்கள் எவ்வாறு அமைந்திருந்தன என்ப தையும் இக்கதை நமக்கு விளக்குகின்றது. மெச்சும் பெருமாள் பாண்டியன் அரண்மனைக்குப் போகும்போது,

> "கச்சை வரிந்து கட்டி, கருங்கச்சை சுங்கலிட்டு
> முன்புறத்துச் சுங்கலிலே மோகினியாள் சக்கரமாம்
> பின்புறத்துச் சுங்கலிலே பிரமதேவன் அச்சரமாம்
> வடதுபுறம் சுங்கலிலே வடமலையான் அச்சரமாம்
> இடதுபுறம் சுங்கலிலே ஏமனுட சக்கரமாம்
> சந்திரகாந்தி பொட்டுகளாம், சர்வத்துப்பட்டு
> வல்லவட்டாம்" (1030—1041)

என்று அவரது ஆடை அலங்காரங்கள் வருணனை செய்யப்படு கின்றது.

இவ்வாறு சமுதாயச் செய்திகள் பல, இக்கதை மூலம் நமக்கு அறிய வருகின்றன.

இலக்கிய மரபுகள்

நாட்டுப்புற இலக்கியங்களுள் கதைப் பாடலும் ஒன்று. கதைப் பாடல்களுள் வில்லுப் பாடலும் ஒன்று. இதற்கென்று ஒரு இலக் கிய மரபுண்டு. இவ்விலக்கிய மரபின்படியே "மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை" என்ற வில்லுப் பாடலும் அமைந்துள்ளது.

1. நாட்டு வளம் பாடுவது இக் கதையிலும் உண்டு. தென்னாட் டைப்பற்றி வருணனை செய்யும்போது,

> "நாட்டிலேயும் நல்ல நாடு, நாவலர்கள் புகழும் நாடு,
> சிறுகதலி பழுக்கும் நாடு, செந்நெல் கன்னல் விளையும் நாடு,
> தேங்காய் அமிர்தம் சோலை சூழும், தென்னாடு
> தேசத்திலே" (1—7)

என்று பாடி மகிழ்கின்றார்.

2. கதைப் பாடல்களில் சில, கைலாயத்தினின்றும் கதையைத் தொடங்குவது வழக்கம். கதையின் தலைவன் தெய்வ அருளால் பிறந்தவன் தெய்வமாகப் போகிறவன் என்பதைக் காட்டவே இவ்வுத்தியைக் கையாள்கின்றனர். இக்கதையில் சக்கர நகரம் அமைப்பதும், வரம் பெறுவதும் சிவ பெருமான் அருளால்தான்.

"மாங்காய் அமிர்தம் சோலை சூழும், மாணிக்க வட
கயிலையிலே
பரமசிவனும் பார்வதியும், பார்த்து வரம் வாங்க
வேணும்" (14—17)

என்ற எண்ணமே ரிசியை கைலாயம் செல்லத் தூண்டுகின்றது.

3. இயற்கை இறந்த நிகழ்ச்சிகளும் கதைப் பாடல்களில் இடம் பெறுவதுண்டு. இதுவொரு சமுதாயக் கதைப் பாடல் என்றாலும் கூட இதில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் பல உள்ளன. ரிசி கைலாயம் செல்வதும், அங்கு அம்மையப்பனைக் காணுவதும், அவர்களோடு பேசுவதும், வெள்ளைப் பிள்ளையாரைத் தன்னோடு அழைத்து வருவதும், அவரோடு உரையாடுவதும் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளே: பொன்னும் பெருமாள் தேவர் தனது பாலகனுக்குப் பெயரிடவேண்டுமென்று எண்ணியபோது அசரீரி வார்த்தையான "மெச்சும் பெருமாள்" என்று மேன்மையுடன் சொன்னதாக வருவதும் இயற்கை இறந்த நிகழ்ச்சியே. சீவகனுக்குப் பெயரிடும் போதும் ஒரு தெய்வம் இவ்வாறே கூறியது ஒப்பிடத் தக்கது.

4. கதைப் பாடல்களில் கோட்டை கட்டுவது நிச்சயம் பேசப் படுவதுண்டு. இக்கதையிலும் பாண்டியர்கள் சக்கர நகரத்தை அமைத்து அதில் கோட்டை கட்டுகின்றனர்.

"சுத்துகட்டு மாளிகையாம், சூழவொரு அங்கணமாம்,
கோட்டைகளும் கொத்தளமும், கோபுரமும் துறவிகளும்,
ஆசார வாசல்களும், அதிகார மேடைகளும்
ஆனைக்கட்டும் சாவடியாம், அசுவம் கட்டும் கொட்டகையாம்
குதிரைக்கட்டும் சாவடியும், கொட்டார வாசல்களும்.
துர்க்கை என்னும் காளி கோவில், துரிதமாகக் கட்டி
வைத்தார்," (152—163)

கட்டபொம்மன் கதைப் பாட்டிலும்: ஐவர் ராசாக்கள் கதையிலும் கோட்டை கட்டுவது இதுபோன்று அமைக்கப்படுகின்றது,

5, பிள்ளையில்லாமல் இருப்பது, இறைவனை வேண்டுவது, தானமும் தவமும் செய்வது, பிறகு கருவுறுவது, கருவின் பத்துமாத

வளர்ச்சி. பிள்ளைப்பேறு, சடங்கு போன்ற நிகழ்ச்சிகள் எல்லா கதைப் பாடல்களிலும் ஏறக்குறைய காணமுடிகின்றது, காரணம் அவர்களின் நோக்கம் கதைத் தலைவனின் பிறப்பும் சிறப்புக்குரியது என்பதை காட்ட விரும்புவதே.

6, ஒரே அடிகள் மீண்டும் மீண்டும் வருவது உண்டு. இக் கதைப் பாடலில்,

''முத்துபோல் கண்ணீரை, முகமெங்கும் சோரவிட்டாள்.
பவளம்போல் கண்ணீரை' பக்கமெல்லாம் சோரவிட்டாள்.''
(246—9)

என்ற கூற்று நான்கு இடங்களில் வருகின்றது. அது முறையே (384—7) (708—11) (2374—7) ஆகிய அடிகளாகும்.

7. சில அடிகளில் ஒரே பொருள் அடுத்தடுத்து வெவ்வேறு வார்த்தைகளில் வலியுறுத்தப்படுவதுண்டு.

''கருவா ஜனிக்கையிலே, கருமருந்தைத் தின்றேனில்லை,
உருவா ஜனிக்கையிலே, உள் மருந்தைத் தின்றேனில்லை''
(519—22)

என்று ஒரே கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

8. ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு ஒருவர் செல்லும் போது இடையிலுள்ள ஊர்களின் இடங்களின் பெயர்களையெல் லாம் சொல்வதும் மரபு. பெருமாள் பாண்டியன் அம்பாசமுத் திரம் செல்லும்போது,

''கீழ்ச் சேவல் பாலம் விட்டு, இளுவடித்துறை கடந்து,
தேசமாணிக்கும் விலக்கும் விட்டு, சிவந்தி பாலம் தான்கடந்து
சேரன் மகாதேவியிலே, அப்பன் கோவில்தான் கடந்து,
வீரகம் பதியும் விட்டு, வெள்ளாங்குழி நாடும் விட்டு
அம்பா சமுத்திரம் வந்தல்லவா.''

என்று இவரது வழிப் பயணம் வருணிக்கப்படுகின்றது.

9. கதைப் பாடல்களில் வினாக்கள் தொடங்கு முன்னால் விடை சொல்லும் முன்னால்,

''எங்கிருந்து இங்கு வந்தீர்
எந்த ஊர் எந்த தேசம்?'' (750—51)

"வாருமையா சோதிடரே
வார்த்தையொன்று சொல்லக் கேளும் (892—93)

என இவ்வாறு கூறுவது மரபு.

10. வாக்கிய அமைப்பைக் கதைப் பாடல்களில் கூர்ந்து நோக்கும்போது சில தனித் தன்மைகள் புலனாகின்றன.

"என்று சொல்லும் நேரத்திலே, ஏது சொல்வார்
பாண்டியரும் (152—53)

என்று லாவகத் தொனியில் வாக்கியங்கள் அமைவதுண்டு. 'தான்' என்ற சொல் தேவையில்லாமல் பொருளுக்காக அல்லாமல் ஓசைக்காக, இசைக்காக வருவதுண்டு. "பந்தலிட்ட வாசலிலே, பார வாழைதான் நிறுத்தி" (1545—46) என்ற அடிகளில் 'தான்' என்பது இசைக்காகவே வருகின்றது. இதுபோன்று 'நல்ல' என்ற சொல்லும் இவ்வாறு வருவதுண்டு, "பஞ்ச நல்ல காலத்திலே', (585) என்ற அடியில் நல்ல என்பது இசைக்காக வந்ததே.

11. கதையை முடிக்கும்போது சுபமாக முடிப்பது வழக்கம். இக்கதையில் பெருமாள் பாண்டியன் மாண்டு சோகமாக முடிந்தாலும்,

"மாண்டு மடிந்தார்கள். வைகுந்தம் சேர்ந்தார்கள்
தெய்வப் பிறப்பாகச் சிருஷ்டித்தார் பகவானும்" (2524— 27

என்று சிறப்பாக முடிகின்றது.

முன்னுரையின் முடிவில்

என் கையில், இக்கதைப் பாடல் காகித ஏட்டின் வடிவிலேயே கிடைத்தது. அதை அப்படியே படி செய்து கொண்டேன். சிறு தலைப்புகள் மட்டுமே நான் செய்தது. மற்றவை எல்லாம் மயிலேறி அவர்கள் பாடிய படியே அமைந்திருக்கின்றன. எவ்வித மாற்றங்களும் இல்லை.

சத்தியார்த்தி அவர்கள் ஒரு முறை கூறும்போது. "நம் இந்தியாவில் 40 கோடி மக்களுக்குமேல் வாழ்கிறோம். இதில் இருபது கோடிக்கு மேல் கிராமத்து மக்களே. ஆளுக்கு ஒரு பாடல் சேகரித்தால் போதும். அழிந்துபோகும் நாட்டுப்புற இலக்கியத்தை அழியாமல் காத்து விடலாம்," என்று குறிப்பிட்டார். மாபெரும் புலவர்கள் கூட சாதிக்க முடியாத சிலவற்றை இந்த நாடோடிக் கவிஞர்கள் சாதித்து விடுகிறார்கள். அவர்களில் சாதனைகள் மண்ணில் மறையாமல் மனதில் நிலைக்க வேண்டும் என்பது என் ஆசை மட்டுமல்ல ஆர்வமுள்ள என் ஆராய்ச்சியும், கூட. எனவேதான் திருநெல்வேலி மாவட்டத்துள்ள பல ஊர்களுக்கும் சென்

றேன். பல்வேறு வகையானபாடல்களைச்சேகரித்தேன். அப்போது தான் நான் 'மெச்சும் பெருமாள் பாண்டியனையும்' சந்தித்தேன்.

இக்கதைப் பாடலை மகிழ்ச்சியுடன் தந்த புலவர் மயிலேறி அவர்களுக்கும் அவர் தருவதற்காக எனக்குச் சிபாரிசு செய்து தந்த என்னருமை மைத்துனர் பெருமாள் பாண்டியன் அவர்களுக்கும் நான் பெரிதும் நன்றி பாராட்டுகிறேன். என் ஆய்வுத் தீ எரிய இவர்கள் அன்பு நெய் ஊற்றுவதை என்னால் என்றும் மறக்க இயலாது.

இக்கதைப் பாடலோடு இன்னும் சில கதைப் பாடல்களையும் தந்து விட்டு புலவர் மயிலேறி அவர்கள் என்னிடம் சொன்னது இன்றும் என் நெஞ்சில் ஒலிக்கின்றது. அவர் சொன்னார்; ''என்னி டம்எவ்வளவோ இருந்தன.எல்லாம் அழிந்து விட்டன. இருப்பதோ கொஞ்சம். இவைகளும் அழிவதற்கு முன்னால் யாரிடமாவது தர ஆசைப்பட்டேன். என்னோடு இவைகளும் அழிவதற்கு முன்னால் இதை இவ்வுலகம் அறியச் செய்யுங்கள்'' என்றார். நானும் ஒப்புகி கொண்டேன். என்னால் முடியுமா? என்று நான் அச்சப்பட்ட போது, என்னுடைய பேராசிரியர், என் ஆராய்ச்சியின் மேற் பார்வையாளர், என் பயணத்தில் வழித்தடம், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர், டாக்டர் ந சஞ்சீவி அவர்களின் நினைவு எனக்கு துணிவைத் தந்தது.

''ஈனமுத்துப் பாண்டியன் கதை'' என்ற வில்லுப்பாடல் இலக்கியத்தை, மூன்றாவது தமிழாய்வில் வெளியிட்டு ஆதரவு தந்த என் பேராசிரியர், இக்கதைப் பாடலையும் வெளியிட்டு எனக்கு என் ஆய்வுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்திருக்கிறார். அவருக்கு வெறும் நன்றிகளை மட்டும் உதிர்ப்பதைவிட அவரது மாணவன் என்று சொல்லிக் கொள்வதிலேயே மகிழ்வும் மன நிறைவும் கொள்கிறேன்.

சென்னை—5. சு. சண்முக சுந்தரம்

காலிங்கராயன் கைபீது[1]

தாராபுரம் துக்குடி பொள்ளாச்சி தாலுக்கா ஊற்றுக்குழி பாளையக்காரர் காலிங்கராயக் கவுண்டன் என்னப்பட்டவருடைய வமிசாவளி முதலான கைபீது என்னவென்றால் :—

பூர்வீகம்

பூர்வத்தில் சோழ தேசத்தில் தொண்டை மண்டலத்து வேளாளரென்று பேர் பிரசித்திப்பட்ட நற்குடி நாற்பத் தெண்ணாயிரம் பசுங்குடி பன்னீராயிரம் ஆக அரவதுனாயிர கோத்திரக்காரர்களில் பிற்காலும் ரிஷபகிரிச் சோளராசா மகளை மோரைச் சரிந்த சேரராஜா பாணிகிரகணம் பண்ணிக் கொண்ட படியினாலே சோளராசாவின் மகள் தனக்கு சீதனம் தன் தகப்பனாரைக் கேட்டுக் கொண்ட படியினாலே அந்தச் சமயத்தில் நற்குடி நாற்பத்தெண்ணாயிரம் குடியில் எண்ணாயிரம் குடி சீதனம் கொடுத்தபடியினாலே அப்போ வரப்பட்ட வேளாள னுக்கு தென் திசை நோக்கி வந்தபடியினாலே தென் திசை வேளாளர் என்று பேர்வரப் பட்டது.

கொங்கில் குடியேற்றம்

சேர தேசத்துக்கு வரப்பட்ட வேளாளருக்கு சேரனுக்கு கொங்கரென்றும் பேர் இருக்கிற படியினாலே கொங்கு வேளாள ரென்றும் கொங்கு இருபத்துனாலு நாடு என்றும் ஏற்படுத்தி யிருக்கும் நாளையில் அக் காலத்தில் என் வமிசத்தனான காலிங்க கவுண்டன் என்கிறவன் பூந்துரை நாட்டுக்கு காணியாளனாய் மேல் கரை முப்பத்து ரெண்டு கிராமத்துக்குச் சேர்ந்த வெள்ளோடு குடியிருப்பு காரனுக்குத் தம்முடைய இஷ்ட தெய்வமான சர்வேஸ்

1. இதன் பிரதி தமிழக அரசின் பழஞ்சுவடி நூலகத்தில் உள்ளது. இது அங்கு பிரதி செய்யப்பெற்றது.

வர பாடகவல்லி நாய்ச்சியார் தேவஸ்தானம் சீர்னோத்தாரணம் [1] பண்ணிக் கொண்டு இருந்தான்.

அணை கட்டக் காரணம்

பூந்துறை நாட்டுக்கு நாட்டானாய் வெள்ளோட்டுக் குடியிருப்புக்காரனாய் இருக்கும் நாளையில் கங்கை குலம் சாத்தந்த கோத்திரம் காலிங்க கவுண்டன் என்கிற தன்னுடைய குமாரனுக்கு கலியாணம் பண்ண வேணுமென்று நினைத்து மாமன் மச்சுனனான பண்ண குலத்தாளி வீட்டிலே பெண் கேட்டு கலியாணம் செய்யத் தக்கதாக யோசித்து பெண் சம்மதமாகி அந்த ராத்திரி சாப்பிடுகிறதுக்கு சமையல் பண்ணுகிறவன் வந்து இவர்களுக்குச் சமையல் பண்ணுகிறதுக்கு எந்த அரிசி போடுகிறது? என்று கேள்க்க, அவாள் கம்பு விளைகிற சீர்மையிலே இருக்கிற பேர்களுக்கு எந்த அரிசி என்று தெரியப் போகிறது. பழ அரிசி தானே போடு போவென்று சொல்ல அது சேதி ஷை காலிங்க கவுண்டன் கேட்டு அவாள் வீட்டிலே சாப்பிடாதபடிக்கு இருந்து நெல்லு விளையும் படியாக நீர் பாங்கு உண்டு பண்ணிக் கொண்டு உங்கள் வீட்டுப் பெண் கொண்டு சாப்பிடுகிரோமென்று சபதம் கோரிக் கொண்டு வந்து தன் ஊரிலே வந்து சேர்ந்து மனதிலே தனக்குத் தோணியிருக்கும் நாளையில் இவர் இஷ்டமான சர்வேசுரரை தன்னுடைய [2] அபீஷ்டம் சித்தியாக வேணுமென்று நினைச்சு இருக்கும் வேளையில் இராத்திரி சொப்பனத்திலே ஒரு விருத்த பிராமண ரூபமாய் வந்து இந்த சர்ப்பம் போகிற வழியாக வாய்க்கால் வெட்டி வைக்கச் சொல்லி காரணமாக சொப்பனமாச்சுது. அந்த சொப்பனமான உடனே கண் விழித்துப் பார்க்குமிடத்தில் ஒரு சர்ப்பம் பிரதிக்ஷசமாக இருந்து தான் கண்டு இருக்கப்பட்ட சொப்பனத்தைக் கண்டு அறிய வேண்டுமென்று நினைச்சு வீடு கட்கு வெளியிலே வந்த சமயத்தில் சர்ப்பம் இவனைக் கண்டு முன்னே நடந்தது. அந்தச் சர்ப்பத்தைத் தொடர்ந்து போய் இந்த வழியாகப் போகுதென்று அடையாளங்கள் போட்டுக் கொண்டு வருகிறபோது கொடுமுடி க்ஷேத்திரத்தில் சர்ப்பம் நின்றது.

வாய்க்கால்

அந்தச் சர்ப்பம் போன போக்கிலே வாய்க்காலும் வெட்டி வைக்க வேணுமென்று நினைத்து பவானி ஆற்றிலே குறுக்க

---

1. சிர்னோத்தாரணம்—திருப்பணி
2. அபீஷ்டம்-எண்ணம்

அணை கட்டி வைக்க வேணுமென்கிறதாக நினைத்திருந்த சமயத்திலே பவானிக் கூடல் ஸ்தானத்துக்கு மேல் புறத்தில் பவானி ஆத்துலே சர்ப்பம் குறுக்கே படுத்துக் கொண்டது. அந்த இடத்திலே அணை கட்டி வைக்க வேணுமென்று பவானி கூடலுக்கு வடக்கே வூராச்சி மலையும் [1] தடமும் சுத்தக் கிரயத்துக்கு வாங்கி அணை கட்டுகிற சமயத்திலே வெள்ளை வேட்டுவன் என்கிற பாளையக்காரன் அணை கட்டுகிற எல்லை தன்னதென்று சண்டை பண்ணினமையாலே வெள்ளை வேட்டுவரை ஜெயிச்சு அணையும் கட்டி வெகு திரவவியங்கள் செலவளிச்சு சர்ப்பம் போயிருந்த அடையாளங்களைப் பிடிச்சு வாய்க்கால் வெட்டி கொடுமுடி வரைக்கும் வாய்க்கால் வெட்டி வைச்சு பவானி அணை முதல் கொடுமுடி ஸ்தானத்துக்கு அத்துவரைக்கும் முக்காத வழி தூரத்துக்கு சர்ப்பம் போன போக்கிலே வாய்க்கால் வெட்டின ஏழுகாத வழி நடை கோணக் கோணலாக வாக்கியால் வெட்டி வச்சான்.

பெயர்க் காரணம்

அந்த சர்ப்பம் போன போக்கிலே வாக்கியால் வெட்டி வச்சு பவானி ஆற்றிலே சர்ப்பம் படுத்துயிருந்த யிடத்திலே அணையும் கட்டி விச்சபடியினாலே காலிங்கக் கவுண்டன் என்றும் பேர் வரப்பட்டுப் பிரசித்திப்பட்டவனாய் இருக்கும் நாளையில் முன்னாலே சபதம் கோரியிருக்கப்பட்ட பண்ணை குலத்திலே தன் பிள்ளைக்குக் கலியாணம் செய்து கொண்டு அம்ச புருஷனாய் தெய்வ கடாட்சத்துனாலே சம்பத்து னாம தேயமான காலிங்கன் என்கிற நாமதேயமும் வேளாள சாதியானபடியினாலே கவுண்டர் என்கிற நாமதேயமும் ரெண்டு நாமதேயமும் சேர்ந்து காலிங்கக் கவுண்டன் என்கிற பேர் பிரசித்திப்பவனாய் தான் கட்டி வச்ச அணைக்குக் காலிங்கக் கவுண்டன் அணையென்றும் காலிங்கக் கவுண்டன் வாக்கியாவென்றும் தான் உண்டு பண்ணின நீர்ப் பாங்கு நிலத்தில் விளையப்பட்ட காலிங்க நெல்லு யென்று விளையப் பண்ணி சம்பந்த பாந்தியங்களும் செய்து கொண்டு யிருந்தான்.

நாவிதனுக்கு மானியம்

இப்படி வாக்கியால் வெட்டி அணைகட்டி பிள்ளைக்குக் கலியாணம் பண்ணுகுற வரைக்கும் சபதம் கோரி தீட்சை வளர்த்துக் கொண்டு யிருக்கும் சமயத்தில் தெய்வ கடாட்சத்தினாலே

1. வூராச்சிமலை—ஊராட்சிக் கோட்டை மலை.

மனோபீஷ்டம் நிறைவேறியிருக்கும் சமயத்தில் ஒரு நாள் ஆயாசத்துடனே நித்திரை பண்ணிக் கொண்டுயிருக்கும் சமயத்திலே ஒரு நாசுவன் தீட்லை மயிரை வாங்கிப் போட்டு நிலைக் கண்ணாடியை எதிரே வச்சு வணக்கத்துடனே நின்று கொண்டுயிருந்தான். நித்திரை தெளிஞ்சு நிலைக் கண்ணாடி பார்த்தவுடனே ஆயுஷ்காரமாய் இருந்த படியினாலே சந்தோஷம் வந்து நாசுவனைப் பார்த்து உனக்கு என்ன வேணுமென்று கேட்டான். அந்த நாசுவன் என் பேர் விளங்கி இருக்கும்படியாக பண்ண வேணுமென்று மனுவு கேட்டுக் கொண்டான். தாம் கட்டி வச்ச அணையோரம் தாம் இருக்கப்பட்ட காலிங்கன் பாளையத்துக்கு தென்புறம் நாசுவன் பேராலே ஊரு உண்டு பண்ணி நாசுவன் பாளையம் என்றும் பேர் விளங்கப் பண்ணி அந்த நாசுவனுக்கு அந்த பாளையம் சர்வமானியமாகக் கொடுத்தார்.[1]

இப்படிக்கு காலிங்கராய கவுண்டர் என்கிறபேர் பிரசித்திப் பட்டவராய் வெள்ளோட்டுக் குடியிருப்புக்காரராய் பூந்துறை நாட்டுக்கு நாட்டாதிபத்தியத்தாய் உண்டு பண்ணின அணைவாக்கியால் பரிபாலனம் பண்ணிக்கொண்டு பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் காலிங்கக் கவுண்டன் என்கிற நாமதேயம் உண்டானவர்களாய் இருந்தார்கள்.

தெய்வமானான்

பவானிக் கூடலிலே காலிங்கராயன் என்கிறவன் அணை கட்டி வச்சு பேர் பிரசித்தி பண்ணினது கலியுகாப்தம் 2000.[2] காலிங்க கவுண்டன் கட்டி இருக்கப்பட்ட அணையிலே ஷை கவுண்டனையும் சர்ப்பத்தையும் சிலாபிரதிமை ரூபமாக கல்வெட்டி வச்சு சிலா சாசனமும் எழுதியிருக்கிறது. அந்த அணை போட்டு இருக்கப்பட்ட இடத்தில் குடிகள் பரம்பரையாய் வருஷப் பிரதியும் உற்சவம் பண்ணிக்கொண்டு வருகிறது. வருஷப் பிரதியும் காலிங்கக் கவுண்டன் பிரதிமைக்கு பூசை நைய்வேத்யம் பண்ணிக்கொண்டு வந்தால் வெள்ளம் வந்து வெள்ளாண்மை விளைஞ்சு கொண்டு வருகிறது. இப்படி ஈஸ்வரர் அனுக்கிரகத்தினாலே மூர்த்திகரம் உண்டாகியிருக்கிறது,

---

1. இன்றும் அணையை அடுத்துள்ள ஊர் மேட்டு நாவிதன் பாளையம், அணை நாவிதன் பாளையம் என்ற பெயரால் வழங்குகிறது.

2. காலம் தவறு.

ஈஸ்வர அனுக்கிரகத்துனாலே காலிங்க கவுண்டன் என்கிற அம்சை புருஷன் வம்ச பரம்பரையிலே காலிங்க கவுண்டன் என்று பேர் வச்சுக்கொண்டு வருகிறது.

ஆமைலை போன காரணம்

இப்படிக் காலிங்கக் கவுண்டன் என்கிற பேர் பிரசித்திப்பட்டவர்களாய் பலாட்டியனாய் வெள்ளோட்டு பூந்துறை நாட்டாதிபத்தியம் ஆண்டுகொண்டு வரும் நாளையிலே கொங்கு இருபத்து நாலு நாட்டுக்கும் பட்டக்காரர்களாய் இருக்கப்பட்டவர்கள் சரி இருப்பும் சரி மரியாதிகளும் கொடுக்கப்படாது என்று சொன்னதினாலேயும் பூர்வத்திலே சேரமான் பெருமாள் சாத்தந்த கோத்திரக்காரர்களுக்கு காவிடிக்கை நாட்டு பிறவும் பண்ணிக்கொடுத்து இருக்கிறபடியினாலேயும் ராயட்டுப்பட்டக்காரர்கள் சரி மரியாதி நடக்க மாட்டாதென்று சொல்லிக்கொண்டபடியினாலே வெள்ளோடுவிட்டு மனவெறுப்பினாலே ஆனைமலை சருவுலே தங்கள் காணியாட்சியான காவிடிக்கா நாடு காடுகொண்டு வனமாய் இருந்த ஸ்தலத்தில் தங்கள் பசுமாடுகளை விட்டுயிருந்து மாடுகளை சம்ரட்சணை பண்ணுகிறதுக்காக தங்கள் ஜனங்கள் இருந்தபடியினாலே காவிடிக்கா நாட்டு வனத்து வந்து மாடுகளையும் பார்த்து மாடுகளுக்கு சம்ரட்சணைக்காகப் பட்டிகளும்போடுவிச்சு அஞ்சாறு சாலைகளும் கட்டிவிச்சு கொங்கு இருபத்து நாலு நாட்டுக்கும் பாளையப் பட்டுகளுக்கும் இவர்களுக்கெல்லாம் அதிக மரியாதைகள் உண்டு பண்ணிக்கொள்ளவேணுமென்று நினைச்சு ராய சமஸ்தானத்துக்குப் போனார்.

ராயர் பேட்டி

ராய சமஸ்தானத்தில் காத்துக்கொண்டிருக்கும் நாளையில் பண்ணிரண்டு வருஷம் வரைக்கும் ராயரவர்கள் பேட்டியில்லாமல் கையிலே கொண்டு போன திரவியங்கள் எல்லாம் செலவழிந்து போய் கஷ்டப்பட்டுக்கொண்டு அதிவிசனத்தை அடைந்தவனாய் தன்னுடைய இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தனை செய்துகொண்டு மன வயிரத்தை அடைஞ்சவனாய் பெனுகொண்டைப் பட்டணத்துக்கு வெளியிலே தென்புறம் காளி கோவிலிலே போய் உசெத்திரமாகப் படுத்துக்கொண்டு இருந்தார்.

சுத்த உபவாசத்துடனே காளி கோவிலிலே இருக்கப்பட்ட காலிங்கக் கவுண்டன் சொப்பனத்திலே பன்னிரண்டா நாள் இராத்திரி ராயர் குமாரனுக்கு சித்தப் பிரம்மை பிடிச்சு அது நிவாரணம் இல்லாமல் இருக்கிறபடியினாலே என்னுடைய சன்னிய

தானத்திலே இருக்கப்பட்ட விபூதியைக் கையிலே கொண்டுபோய் அந்தச் சித்தப் பிரமையாய் இருக்கப்பட்டவன் பேரில் போட்டால் சித்தப் பிரமை தீர்ந்து ராச குமாரனாக அரண்மனை போய்ச் சேர்ந்து யிருப்பான். ராயரவர்கள் உன்பேரிலே சந்தோஷமாய் உன் மனோ பீஷ்டம் சித்தியாகும் என்று சொப்பனமாச்சுது.

அந்தச் சொப்பனத்தைக் கண்டவுடனே பனிரெண்டு நாள் பட்டினி இருக்கப்பட்டவன் விபூதி யெடுத்துக்கொண்டு பெனு கொண்ட பட்டணத்துக்கு வந்து இது சொப்பனத்து சோதனை பார்த்துக்கொண்டு வருகுற சமயத்தில் ராசகுமாரன் பட்டணத்து வீதிகளிலே சித்த பிரமை பிடிச்சு தன்னப்போலே திரிகிற குறிப் பைக்கண்டு பிடிச்சு ராசகுமாரன் பேரிலே காளியை நினைச்சு விபூதி போட்டான்.

அந்த விபூதி தூளி ராசகுமாரன் பேரிலே விழுந்தவுடனே சித்த பிரமை தெளிஞ்சவனாய் ராஜ சின்னங்களுடனே அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான்.

அக்காலத்து நரபதி சிம்ஹஸ்னாதிபதியான பெனுகொண்டை விசய நகரம் ஆளப்பட்ட தேவராயர் அவர்கள் தம்முடைய குமார னானவனுக்குச் சித்தப் பிரமை விடுதலை பண்ணினவனைத் தரு விக்கச் சொல்லி மந்திரி பிரதானிகளுக்கு உத்தரவு செய்தபடியி னாலே அந்த சமயத்தில் தரிவிச்சு ராயர் அவர்கள் ரொம்பவும் சந்தோஷத்தினாலே காலிங்கக் கவுண்டனைப் பார்த்து உன் சென் மப்பூமி முதலான விருத்தாந்தங்கள் என்னவென்று கேள்கு மிடத்தில் பவானி கூடல் சமீபத்தில் உண்டுபண்ணின அணை – வாய்க்கால் முதலான சங்கதிகளும் தெய்வ கடாட்சத்துனாலே காலிங்கக் கவுண்டன் என்கிற பேர் வழங்கப்பட்ட வரலாறும் கொங்கு இருபத்து நாலு நாட்டுலே பட்டக்காரர்களாய் சமானி டை...சி மரியாதிகள் தாள்வு நடக்கப்பட்டு சமுஸ்தானத்திலே காத்துக்கொண்டிருந்து காளிகாதேவி அனுக்கிரகம் பண்ணின நாள் வரைக்கும் வரலாறு அறியப்பண்ணிக்கொண்ட படியினாலே ராயர் அவர்கள் ரொம்பவும் சந்தோஷப்பட்டு உன்னுடைய நாமதேயம் என்னவென்று கேட்டார்கள். அப்போ பேர் அறியப் பண்ணிக் கொண்டபடியினாலே ராயர் அவர்கள் உத்திரவு செய்து என்னு டைய வம்சம் உத்தாரம்பண்ணி இருக்கிறயடியினாலே என்னுடைய பேர் தெய்வ கடாட்சத்துனாலே உண்டாகிய பேருடனே ராச கடாட்சத்துனாலே கொடுக்கப்பட்ட ராயச புத்தகத்துடனே காலிங்கராய கவுண்டன் என்று பேர் வச்சு உனக்கு என்ன வேணு மென்று கேட்டார்கள். அந்த சமயத்தில் என் காணியாட்சியான

ஆனைமலை சரிவுலே காவிடிக்கை நாடு என்னப்பட்ட பூமியை தயவு செய்ய வேணுமென்று கேட்டுக்கொண்டார்.

ராயரிடம் பெற்ற வரிசை

ராயரவர்கள் கடாட்சம் செய்து சிபஹல்லா பல்லாக்கு, உபய சாமரம், சுருட்டி, சூரியபான ஆலவட்டம், வெள்ளைக் கொடை, பச்சைக் கொடை, பஞ்சவர்ணக் கொடை, பஞ்சவர்ண வெட்டுப் பாவாடை, அனுமடால் கெருடடால் மகரடால் பசவசங்கரடால் பஞ்சவர்ணடால், ஆனைமேல் பேரிகை ஒட்டைமேல் நகாரு, குதிரைமேல் டகாரி எருதுமேல் தம்பட்டம், தாரை, சின்னம் எக்காளம் பேரிகை சிக்குமேளம் இது முதலான வாத்தியங்கள் பிருதுகளும் கொடுத்து ரண பாஷிகரம் கலிகிதுருயி முத்தொண்டி பஞ்சொண்டி ஒண்டி ரேக்கு வீர சங்கிலி னாக ககாணும் புலி செறமம் கரடி மயிர் வக்கிய பிரீதங்கனி களம் வீர கண்டாமணி சாமது ரோகா வெண்டையம் தங்க பிஞ்சு இது முதலான ஆபரணங்களை யெல்லாம் அலங்கரிச்சு குதிரைக்கு புலித்தோல் மேல் மடக்கு அடை சல்லி முகசல்லி பக்க சல்லி கால் தண்டை கலிகிதுருயி இது முதலான ஆபரணங்களை தறீச்சு பட்டத்துக் குதிரையென்று நேமுகம் செய்து பட்டணப் பிரவேசம் பண்ணிவிச்சு ஆனைமலை சரிவிலே காவிடிக்கை நாட்டு பூமிக்கு நீயே மனச புதாரனாக ஆண்டு கொண்டு சந்திராதித்தியர் உள்ள வரைக்கும் வம்ச பரம்பரையாய் மனசபுதாரனாக ஆண்டு அனுபவிச்சுக்கொண்டு வரவேணுமென்று பட்டாபிஷேகம் செய்து பட்டத்து ஆயுதம் கையிலே கொடுத்து அறுபத்து நாலு அமரகாரரை நேமுகம் செய்து இரட்டை வாள் பச்ச ஈட்டி, கரீட்டி, வெள்ளி ஈட்டி, தங்கக் கட்டு துப்பாக்கி வெள்ளி மூலாம் துபாகி சீறு மாறுடை இது முதலான ஆயுதங்களும் கொடுத்தார்கள்.

பாளையக்காரன்

முன்னாலே நாகூர் பாளையப்பட்டு பட்டக்காரர்கள் சரிசமமான மரியாதை கொடுக்கிறது இல்லை என்று சொன்ன மனவெறுப்புனாலே ராய சமஸ்தானத்திலே காத்து இருந்து தெய்வ கடாட்சத்துனாலே சகல பிருதுகள் ஆயுதங்களும் உண்டாய்காவிடிக்கை நாட்டுக்குப் பாளையக்காரராக காலிங்கராயக் கவுண்டர் என்கிற பேர் பிரசித்திப்பட்டவனாய்ப்பட்டு கட்டியங்களுடனே புறப்பட்டு ஆனைமலைச் சரிவிலே வனாந்திரத்திலே தம்முடைய மாட்டுப்பட்டிகள் இருக்கப்பட்ட இடத்தில் சேர்ந்து அரண் மனையும் கட்டி வீடுகள் உண்டுபண்ணி பூர்வத்தில் வனத்திலே

மாடுகளுக்கு ஆதாரமாகத்தோண்டியிருக்கப்பட்ட ஊற்றுக்குளிகள் இருக்கப்பட்ட இடத்தில் ஊரு கட்டிவிச்ச படியினாலே ஊற்றுக் குழி என்று கிராம நாததேயம் உண்டாகி ஊற்றுக்குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவனாய் இருந் தார்கள். ராயர் சமுஸ்தானத்திலே காலிங்கராயக் கவுண்டன் என்கிற பேர் தெய்வ கடாட்சத்துனாலேயும் பாளையக்காரர் என்று பிரசித்திப்பட்டு பாளையப்பட்டு உண்டான நாள் முதல் சாலிவாகன சகாபுதம் 1120 முதல் சகாபுதம் 1702 வரைக்கும் 582 பட்டங்களுடைய வரிசைகளும் அவாளாவளுடைய சரியைகளும் இதன் கீழே எழுதி வருகிறது.

பரம்பரை

வம்ச பரம்பரையாய் தெய்வ கடாட்சத்துனாலேயும் ராஜ கடாட்சத்துனாலேயும் காலிங்கராயன் என்கிற பேர் வமுச பரம் பரையாய் பட்டக்காரர்களுக்குப்பேர் உண்டாகி வருகிறது.

தெய்வ கடாட்சத்துனாலே சர்ப்பம் போன போக்கு வாக்கி யாலும் வெட்டி வச்சு அணையும் கட்டி விச்சு காலிங்கனென்கிற பேர் பிரசித்திப்பட்டு வமுசாபிவிருத்தியிலே காலிங்கராயனென் கிறவர் காவிடிக்கா நாட்டுக்கு மனபுதாரனாயி காலிங்கராய னென்கிற பேராலே ஊத்துக்குளி பாளையக்காரர் என்று பட்டாபி ஷேகம் அன்னருடைய நாள்வரைக்கும் காலிங்கராயன் அணை யென்றும் காலிங்கராயன் வாக்கியாலென்றும் பேர் பிரசித்திப்பட லாச்சுது.

1. காலிங்கராயக் கவுண்டர் பட்டமாண்ட வருஷம் 50

2. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 40

3. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கராய கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 23

4. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராய கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 20

5. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 19

6. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 21

7. இவருடைய தம்பி அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 12

8. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 23

9. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 27

10. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 16

11. இமர் குமாரன் கலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 9

12. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 28

13. இவர் குமாரன் விருமாண்டக் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 30

14. இவர் தம்பி அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 11

15. இவர் குமாரர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 20

16. இவர் குமாரன் ஈசுரமூர்த்திக் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 6

17. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 15

18. இவர் குமாரன் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 31

19. இவர் குமாரன் விருமாண்டக் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 23

20. இவர் குமாரன் பிள்ளை முத்து காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 13

21. இவர் குமாரன் சின்னைய காலிங்கராயக் கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 19

22. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 20

23. இவர் குமாரன் நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 30

24. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 26

25. இவர் தம்பி நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 12

26. இவர் குமாரன் காலிங்கராயக் கவுண்டன் பட்டம் ஆண்ட வருஷம் 29

27. இவர் குமாரன் நஞ்சைய காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 2

28. இவர் தம்பி அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்ட வருஷம் 4

முதல் பட்டம்

முதல் பட்டக் காரனாகிய காலிங்கராயக் கவுண்டன் நாளை யிலே ஊத்துக்குளி புரமும் உண்டு பண்ணி ஊற்றுக்குழி பாளையக் காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவர்களாய் கொங்கேளு சிவாலயம் முதலாகிய ஸ்ரீரங்கம் சிதம்பரம் கும்பகோணம் மாயூரம் திருக்கடவூர் ஆவடயார் கோவில் ராமேஸ்வரம் தர்ப்ப சேணம்[1] மதுரை பழனியாண்டர் பிரதட்சணமாய் இந்த பிரதீரத்து மஹா ஸ்தலங்களை எல்லாம் யாத்திரை செய்து அந்தந்த ஸ்தலங்களுக்கு தருமங்கள் தானங்கள் பண்ணி யாத்திரங்கள் தீர்ந்தவுடனே ஊத்துக்குழிக்கு வந்து ராய சமுஸ்தானத்திலே தமக்கு பிரசன்ன மான இஷ்ட தெய்வத்தைக் கோரி பிரார்த்தனை பண்ணி அகத்தூர் அம்மனென்று நிதர்சனமாகப்பட்ட தேவாலயம் சீரணோதாரணம் பண்ணி அகத்தூர் அம்மனென்று பேர் பிரசித்தி படும்படியாய் பூஜை நெயிவேத்தியங்கள் செய்விச்சுக் கொண்டு ராய சமுஸ்தானத்திலே தனக்கு மனசபுதார யிலாவுக்குச் சேர்ந்த வாரக்கனாட்டு யெல்லை பள்ளத்துக்குத் தெற்கு 'நல்லுருக்கா நாடு பாலாத்துக்கு வடக்கு புங்குலுக்கே நாடு தானசாரை பள்ளத்துக்கு மேற்கு கம்பால துரை மணலியாறுக்கும் கிழக்கு இந்த நான் கெல்லைக்குட்பட்ட கீழ்மேல் நாற்காதம் தென்வடல் இருகாதம் இந்த அத்துக் காவிடிக்கா நாட்டு காடுகளையெல்லாம் வெட்டி வச்சு அந்தந்தயிடங்களிலே நீர்ப்பாங்கு உண்டு பண்ணி வீடேத்தி ஊர்களும் உண்டுபண்ணிக் கொண்டு நஞ்சை புஞ்சை நிலங்களும் திட்டப்படுத்திநாடு வூர் பாளைப்பட்டுக்களுக்கு அரண்மனையிலே அதிக மரியாதைகாரனாய் ஊத்துக்குளி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப் பட்டவர்களாய் அதிதிறமைசாலிகளாய் பிரபுத்துவம் பண்ணிக் கொண்டு வந்தார்.

---

1. தர்ப்பசேணம் —திருப்புல்லணை.

இரண்டாவது பட்டம்

முதல் 8வரை

ரெண்டான் பட்டக்காரனான நஞ்சய காலிங்கராயக் கவுண்டன் நாள் முதல் எட்டாம் பட்டக்காரனான காலிங்கராயக் கவுண்டர் நாள் வரைக்கும் ஊற்றுக்குழி பாளையக்காரர் என்று பேர் பிரசித்திப்பட்டவர்களாய் வம்ச பரம்பரையாய்ப் பண்ணப் பட்ட தருமங்களைப் பரிபாலனம் பண்ணிக் கொண்டு அந்தந்த காலத்திலே ராய சமுஸ்தானாதிபதிகள் கட்டளையிட்டபடிக்கு சமுஸ்தானத்திலே ஆஜரிலே இருந்து நடந்து கொண்டு மனசு புதாரனாய் பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தார்கள்.

கால்வழியினர்

ஒன்பதாம் பட்டக்காரனாகிய நஞ்சய காலிங்க ராயக் கவுண்டர் நாளையில் அக்காலத்தில் பாண்டிய சிம்மாசனாதிபதி யாகிய விசுவநாத நாயக்கர் எழுந்தருளியிருக்குற நாளையில் சமுஸ் தானத்துக்குச் சேர்ந்து இருந்து பாளையக்காரர்களையெல்லாம் பேட்டிக்குத் தருவிச்சு மதுரைக்குப் போய் இருக்கும் நாளையில் அக்காலத்து தட்சிண பிரதேசத்திலே திறன்னவல்லி சீர்மையிலே[1] அஞ்சு கோட்டை போட்டுக் கொண்டு அஞ்சுராசாசளயென்றவான் சமுஸ்தானத்துப் பிரபுக்களை நிராகரிச்சு யெதிர் பாளையம் போட்டுக் கொண்டுயிருக்கும் நாளையில் அந்த சமயத்தில் நாயக்க ரவர்கள் உத்தரவுப்படிக்கு என் சமஸ்தான நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் சேன சேகரத்துடனே திர்ன்னவல்லி சீமைக்குப் போய் அஞ்சு ராசாக்களுடனே யுத்தம் செய்து ஒரு கோட்டையிலே இருக்கிற அஞ்சுராசா வெட்டிப் போட்டு கோட்டையைக் கைவசம் பண்ணிக் கொண்டு யெதிராளிகளையும் கொண்டுவந்து நாயக்கர வர்கள் சமஸ்தானத்திலே வைத்தார். அப்போ நாயக்கரவர்கள் 'நீ பராக்கிரமசாலி' என்று நிரம்பவும் சந்தோஷப்பட்டு தங்க னிகளத்திலே சுற தைத்து அதிலே தலைபோல பண்ணிப் போட்டு யெதிராளி தலையென்று காலுக்குப் போடுகுற பிறிதும் கொடுத்து பராக்கிரம நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் என்று பேரும் கொடுத்து ஆடையாபரணங்கள் முதலான ஆபரணங்களும் கொடுத்து சகல வெகுமதிகளும் பண்ணி மதுரை ஆஸ்தானக் கோட்டைக்கு அன்பத்தோரான் கொத்தளத்துக்கு தலமை வயிக்கும் படியாக நிகுதிசெய்து பாளையப்பட்டு கிராமங்களை

---

1. திறன்னவல்லி.--திருநெல்வேலி.

சுத்த ஜாரியாக அனுபவிச்சுக் கொண்டு வரும்படியாக நிகுதி செய்த படியினாலே அந்த நாள் முதல் பதினெட்டாம் பட்டம் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் நாள் வரைக்கும் மதுரை சமஸ் தான கர்த்தராகிய நாயக்கரவர்கள் பரம்பரையிலே கட்டு பண்ணின நிகுதி தீட்டுக்கு அரண்மனைக்கு நடந்துகொண்டு வமிச பரம்பரையாய் பாளையப்பட்டு ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு வந்தார்கள்.

பத்தொன்பதாம் பட்டக்காரனான விருமாண்டேக் காலிங்கராயக் கவுண்டர் நாளையில் அக்காலத்தில் மைசூர் சமஸ் தானத்தும் மதுரை சமஸ்தானத்துக்கும் கனுவாஇக்கு கீள்ப்பட்ட கெடிகளுக்காக யுத்த சன்னாஹமாக யிருந்தார்கள்.

இருபத்து மூன்றாம் பட்டக்காரரான நஞ்சிய காலிங்கராயக் கவுண்டர் நாளையில்[1] கணுவாய்க்கு கீள்பட்ட[2] கெடிகள் எல்லாம் மைசூர் சமஸ்தானத்துக்குச் சேர்ந்துயிருக்கும் நாளையில் அக்காலத் தில் மைசூர் சமஸ்தானத்துக் கர்த்தராகிய இம்முடிராஜ உடையா ரவர்கள் பேட்டிக்குப் போய் இருக்கும் நாளையில் அக்காலத்தில் மைசூர் சமஸ்தானத்துக்குச் சேர்ந்த கொடகர் சமஸ்தானத்துக்கு யெதுத்துயிருக்கிற நகளையென்று யென் வம்சத்தார்களில் சன சேகரத்துடனே[3] குடகு போகச் சொல்லி உத்தரவு ஆனபடி யினாலே சனசேகரத்துடனே கொடகு ராஜாவின் பேரிலே போய் யுத்தம் செய்து ஜெயிச்சு வந்தார்கள்.

அப்போ மைசூர் சமஸ்தான கர்த்தாக்கள் ரொம்பவும் சந்தோஷப்பட்டு அஷ்ட கோண தண்டிகைக்கு[4] தங்க முலாம் பூசி யெட்டு கலசத்துடனே தண்டிகையுங் கொடுத்து ஆடையாபரணங் களும் கொடுத்து ஊற்றுக்குழி பாளையப்பட்டுக்கு அக்காலத்து சேர்ந்து இருந்த கிராமங்கள் ஒன்பதுக்கும் வருஷம் ஒண்ணுக்கு ராசகோபாலி 756 நிகுதி செய்து உத்தரவு செய்தார்கள். அந்த நாள்முதல் என் சகோதரரான நஞ்சய காலிங்கராயக் கவுண்டர் அகத்தூர் காலிங்கராயக் கவுண்டர் பட்டம் ஆண்டு கொண்டு வந்த நாள் வரைக்கும் மைசூர் சமஸ்தானத்தார் கட்டளையிட்ட [5]நிகுதிப்படிக்கு அரமனைக்கு நடந்து கொண்டு ஊற்றுக்குழி பாளையக்காரர் என்கிற வாளாய் பட்டம் ஆண்டு கொண்டு வந்தார்கள்.

---

1. கணுவாஇ — பாளக்காட்டுக் கணவாய்
2. கெடி — கோட்டை.
3. சனசேகரம் — படை
4. தண்டிகை — பல்லாக்கு.
5. நிகுதி—கப்பம்

பூர்வம் மூதலாக என் வமுசத்திலுள்ள பாளையப்பட்டு ஆண்டு கொண்டு வரப்பட்டவர்கள் செவுறிய வுதார கெம்பீர குணாதிசயங்கள் உள்ளவர்களாய் இருந்து மற்ற பாளையக்காரர் களிலே அந்தந்த காலத்திலே அரமனைக்கு நிராகரிச்சுயிருக்கப் பட்டவர்களையும் தமக்கு யெதிரியாயிருக்கப்பட்டவர்களையும் மடக்கிக் கொண்டு ஊத்துக்குளியிலே கோட்டையும் பந்தோ பஸ்தும் பண்ணிக் கொண்டு கால்தளம் அய்யாயிரம் நூறு குதிரை ஆயுதங்கள் வச்சு இருக்கப்பட்ட கனு அய்யாயிரம் ஒரு கடகம் யானை இதுகளுடனே ஆனைமலை கானல்களிலே ஆனைகள் பிடிச்சு அரண்மனைக்குக் கொடுத்துக் கொண்டு அரமனையார் கட்டளையிட்டபடி நடந்து கொண்டு அரமனையார் கட்டளை யிட்ட ஆனைமலை மாச்ச நாயக்கன் பாளையம் பாதிகாவலும் முன்னாள் மூலை போதிக்கு வீரருயன் ஒரு பணமும் மதிப்பு பல சரக்கு பொதி ஒன்னுக்கு ஒரு ரூபாயும் மகமை நடந்து வந்தபடி யினாலே அந்தப் பாதிகாவலும் மகமையும் அனுபவிச்சுக் கொண்டு அரமனையிலே கட்டுப்பண்ணின நிகுதி பணமும் செலுத்திக் கொண்டு ஆண்டு அனுபவித்துக் கொண்டு வரும் நாளையில் என் முப்பாட்டனார் நாளிலே பாதிகாவல் விட்டுட்டுப்போய் மலையாளத்து கோளிகூடு ராசாவின் பேரிலே யுத்த கனுகத்திலே யெலைபள்ளியிலே விளுந்துபோய் விட்டார்கள் என் தொப்பனார் நாள் முதல் சுங்கம் மகமை நடந்து வந்தது.

என் தமையனார் ரெண்டுபேர் நாளையிலேயும் திப்பு சுல்தான் அங்காமி நாள் வரைக்கும் ஒரு நிகுதியில்லாமல் சில்லரை கள்ளர் அங்காமிகளுக்கும் தொந்தரைகள் பட்டுக் கொண்டு யிருந் தார்கள்.

பூர்வம் முதலாக வமுசாவளி முதலானதுகளுக்கு உண்டான ஆதாரங்கள் முதலானதுகளும் காலாந்திரங்களிலே ராசீகங்களிலே கைசோர்ந்து போய்விட்ட படியினாலே அகப்பட்ட பூர்வத்திய பளமுளி[1] — கிரந்தங்களினாலேயும் ஒளுகுகள்யாலேயும் பரம்பரை யிலே அனுபவித்த கேள்வியினாலேயும் தெரிந்து கொண்டு கைபீது தெரியப்படுத்திக் கொள்ளலாச்சுது.

கம்பெனி ஆட்சி

கலியுகாபுதம் 4891 மேல் செல்லாநின்ற விரோதிகிருது வருஷம் மாசி மாதம் 4 தேதி சுபதினத்தில் எனக்குப்பட்டமாய் குமாரசாமி

1. பளமுளி—பழமொழி

காலிங்கராயக் கவுண்டர் என்னப்பட்ட பேர் விளங்கிக் கொண்டவனாகயிருந்து திப்பு சுல்தான் துரைத்தனத்தில் சில்லரை கள்ளர் தொந்தரவுகள் பட்டுக்கொண்டு இருக்கும் நாளையில் மகாராஜ ராஜஸ்ரீ கும்பினி துரைத்தனமாகிறது என்று ரொம்பவும் சந்தோஷத்தை அடைந்தவனாய் குஞ்சு குழந்தைகளை யெல்லாம் பெம்பாயி சீர்மையிலே வச்சுப்போட்டு நான் ஊற்றுக் குழியிலே ஹாஜரிலே காத்துக்கொண்டு கும்பிணி தயவு கோரியிருக்கும் நாளையில் சித்தார்த்தி வருஷத்திலே மகாராஜராஜஸ்ரீ பாலக்காட்டுக் கோட்டை மேஜர் கமாண்டர் இன்சிபு (ஜேம்சு) ரமலி சாயபு அவர்கள் மஹாராஜராஜஸ்ரீ பெம்பாயி பவுசுதார்களுக்கு யெல்லாம் பெரியசேர்வை துரைகளாகிய இற்றியொட்டு சாயபு அவர்கள் மகாராஜராஜஸ்ரீ செண்டறல் அட்டலி சாயபு அவர்கள் மேல் எழுதப்பட்ட துரையள் என் பேரிலே கடாட்சம் செய்து வந்த படியினாலே[1] நானும் துரையள் கடாட்சயத்தும்படி நடந்து கொண்டு வந்தவனாய் இருந்தபடியினாலே என்னிடத்திலே பூரண தயவாகக் கடாட்சம் பண்ணிக் கொண்டு வந்தார்கள்.

மகாராஜராஜஸ்ரீ கம்பெனி துரையள் கடாட்சம் செய்து யென் மானமரியாதைகளைப் பரிபாலனம் பண்ணி ஊத்துக் குழிக்குச் சேர்ந்த ஒன்பது கிராமமும் கண்டு முதலான பேரீஜுலே சாதலவார் சிபந்தி தவிர பத்தில் மூணு பாளையக்கார மிறாசு பத்தில் மூணு சாரி செய்துயிருக்கிற படியினாலே சாதலவார் சிபந்தி தவிர பத்தில் ஏழு சருகாருக்குச் செலுத்திக் கொண்டு யென் பட்டத்து ஆயுதங்கள் தயவு செய்து இருக்கிறபடியினாலே ஊற்றுக்குழி பாளையக்காரர் என்ற பேராய் இருக்கிறேன்.

மகாராஜராஜஸ்ரீ கம்பெனி துரையவர்கள் கடாட்சத்துக்கும் பாத்திரனாய் குமாரசாமி காலிங்கராயக் கவுண்டர் என்கிற பேர் உள்ளவனாய் என் வம்ச பரம்பரையிலே சம்ரட்சணை பண்ணப் பட்டவாளுடைய சந்ததியிலே சேரப்பட்ட அடுத்த சன்ம சயிதமாய் முந்நூறு ஜனத்துக்கு அஹமன்னியாய் காலட்சேபத் துக்கு மார்க்கமாய் நடப்பிவிச்சுக் கொண்டு துரையள் கட்டளை யிட்டபடிக்கு நடந்து கொண்டு மஹாராஜராஜஸ்ரீ கம்பெனி துரையள் கடாட்சத்துக்குப் பாத்திரனாக இருக்கிறேன.

ஊற்றுக்குழி காலிங்கராயக் கவுண்டன் ருசு
(25 பங்குனி விஷு)

---

1. கடாட்சம் செய்து எழுதிய கம்பெனியார் கடிதம் பின்னர் காண்க.

புலவர் செ. இராசு. அளிக்கும்

"மோரூர்க் காங்கேயர் ஏடு"

ஸ்ரீமத் நந்திகேசுபர சுவாமியார் அனுக்கிரகத்தாலே திருவாய் மொழிந்தருளியபடிக்கு அநேகம் சதுர்யுகம்[1] பூசை கொண்டருளிய தேவாதி தேவன் தெய்வ உத்தமன் பத்திப் பிரியன் பத்தயசாசனன் பார்வதி மணாளன் திரு பொஷ்கரணி முக்கணீசுரன் நின்ற கோல மழகிய நிமலன் நிறமொரு பஞ்சவர்ணப் பிரகாசன் தெண்டாயுத அஸ்தன் செம்புத் தீவில் திராவிட தேசத்தில் தொண்ட மண்டலத் தில் காஞ்சிமா நகரில் திருக்கம்பையாற்றில் பார்வதி தேவியம்மன் அர்த்தபாகம் பெறவேண்டி அரியதவசு பண்ணுகையில்வாமபாகம்[2] பெத்தருளிய[3] அம்மன் வீரபாகுவைப் பார்த்து நீங்கள் கூ பேரும் தேவர் செரையை[4] மீட்டபடியினாலே எங்களுக்கு அரவகிரியைச்[5] சூழ்ந்த எளுகரை நாட்டுக்கும்கொங்கனென்றும்[6] பேருமிட்டுபட்டா பிஷேகம் சூட்டுகிறேனென்று அம்மன் கட்டளையிட்டபடிக்கு கொங்கு மண்டலத்திலே தெட்சிண கைலாசமாகிய அரவகிரியைச் சூழ்ந்த எழுகரை நாடெனும்காவேரிவவானி[7] திருவணிமுத்தாநதி[8] அலகுமுரிச்சான்[9] தொப்பை ஆம்பிராநதி [10] நொய்யல் ஆக சத்த நதியாகிய எழுகரைநாட்டிலுள்ள[11]சிவசந்நிதிகளும்பூந்துறை நாடு, பூவாணிநாடு, வஞ்சிநாடு[12] சேலநாடு, இராசிபுரம்நாடு, பருத்திப் பள்ளி நாடு ஏழுர்நாடு, வாழுவந்திநாடு, அரையநாடு மற்றுமுண் டான சிவசந்நிதிநாடு உறவின் முறையாரும் குடிபிரிதி சிட்டபரி பாலனம் பண்ணி அருளா நின்ற திருவளம்வீரலட்சுமி,விசயலட்சுமி வாசராகிய தளம் வம்முச பரிபாலராகிய ஆதிகன்னிவாடி[13]60காங் கயரோடே 60[14] காரண காங்கயனென்று இடங்கை பட்டமுத்து நல்லய்யன் குமாரன் நல்லய்யன் மோரூரு காணி[15] துந்துபி வருஷம் ஆவணி மாதம் 25 தியதி திங்கட்கிழமை சப்தமி திருவோண நட் சத்திரத்தில் 60 காங்யனுக்கு வெகுநாளாய்ப் பிள்ளையில்லாமல் 60 கருண காங்கயனென்று வந்த நல்லய்யன் குமாரன் நல்லய்யன் 60 காங்கயனுக்கு பிள்ளை வரம் வேண்டி நல்லபுள்ளியம்மன்[16] சந்நிதி

முன்பாக பச்சைப் பாப்பாளெரிவி செந்து வைராக்கியம் செய்து தன் செரசினை[17] இருதுண்டாக வெட்டி செயங்கொண்டகுமாரன் நல்லய்யன் பேரிலே சந்தோஷமாகி பின்பு 60 காங்கயனுக்கு என்ன வேணுமென்று கேட்க தேவரீர் நமக்குக் கன்னிவாடியில் இடங்கைகி குட்பட்டது நடந்த மேரைக்கு[18] வடக்கிலேயும் நடப்பிக்கவேணும் தேவரீர் என்று கேட்க அப்படியே தருகிறோமென்று கையில் கீழ்க் கரைப் பூந்துறை நாட்டில் அரவகிரியில் 60 காரண காங்கயரும் செங்குந்த கோத்திர உறவின் முறையாரும் இடங்கை முதலான உறவின் முறையாரும் ருத்ரோத்காரி வருஷம் புரட்டாசி மாதம் 15 தியதி சனிக்கிழமை மாளிக்கையிச்சம்உத்தரநட்சத்திரம் இந்தச் சுபதினத்தில் கூடி முருகாவுடையா சந்நிதி[19] இந்திரவிமானத் தேர் முன்பாக இருப்பு முக்காலி[20] வைத்து ஆச்சாரஞ் செராய் 12சுமை போட்டு அக்கினி எரியவிட்டு 60 காரண காங்கயனை அதின் மேலே இருத்தி ஆண்டவர் கிரீடந்தரித்துப்பட்டம் வைத்துக்குருக்கள்மார் ஆறுபேரும் கும்பாபிஷேகம் பண்ணி அட்சதை தாம்பூலம் குடுத்து இனிமேல் செங்குந்த கோத்திரத்திற்கு நடக்கவேண்டிய சாதி ஞாயம்[21] அத்தப்பாக முன்பதாகக்[22] கட்டலையிட்டோம் சொன்ன விபரமாவது விசாரிக்கும் போது அடிகரை பணம் 6 வைத்து மேல் ஞாயம் பேசவும் செங்குந்தர் குத்தத்துக்கு[23] அவுதாரம்[24] பணம்12 வாங்கக் கட்டலையிட்டார்கள், காராளர் காணிக்கை ஏருக்குக் கால் பொன்னும் செங்குந்த சாதிகள்மக்கத்துக்கு[25] வாரகன் கால்...

[ஏட்டின் நகல் உதவியவர் மல்லசமுத்திரம் ஊமையாம்பட்டி கவிஞர் ந. கந்தசாமி அவர்கள் இறுதிப் பகுதி கிடைக்கவில்லை இடங்கை வலங்கைப் பிரிவு பற்றிய சிறு குறிப்பு உள்ளது பிருந்தா பெக் எழுதிய peasant society of kongu காண்க].

இந்த ஏடு மோரூர்க் காங்கேயர் காலத்தில் திருச்செங்கோட்டைச் சூழ்ந்த பகுதியில் செங்குந்தர்கட்கு ஏற்பட்ட உரிமையை விளக்குவது.

1) சதுர்யுகம் -4 யுகங்கள்
2)வாமபாகம்- இடப்பாகம்
3) பெத்தருளிய-பெற்றருளிய
4) செரையை- சிறையை
5) அரவகிரி- திருச்செங்கோடு; இம்மலைக்கு நாககிரி,நாகமலை என்ற பெயர்கள் உண்டு.
6) கொங்கன்- தலைவன்
7) வவானி- பவானி
8) திருவணிமுத்தாநதி- திருமணிமுத்தாறு
9) அலகுமுரிச்சான்- எது என்று விளங்கவில்லை

10) ஆம்பிராந்தி- அமராவதி

11) ஏழுநதிகள் பாயும் பகுதி- எழுகரை நாடு எனக்கூறப்படு கிறது. கருத்து ஆய்வுக்குரியது.

12) வஞ்சிநாடு- கரூர்ப் பகுதி போலும்(?)

13) ஆதிகன்னிவாடி-காங்கேயரின் பூர்வீக ஊர்

14) அறுபது- அறுபது தண்டிகைக் காங்கேயர் என்பதுவழக்கம்

15) காணி- உரிமை

16) நல்லபுள்ளியம்மன்-

17) செரசு- தலை

18) மேரை-முறை

19) முருகாவுடையார், முருகன் போலும்(?)

20) இருப்பு- இரும்பு

21) ஞாயம்- நியாயம்

22) அர்த்தபாகம்- அர்த்தநாரி

23) குத்தம்- குற்றம்

24) அவுதாரம்- அபராதம்

25) மக்கம்- தறி.

புலவர் செ. இராசு அளிக்கும்

கும்பினிக் கடிதம்

ஊற்றுக்குழி பாளையக்காரர் காலிங்கராயக் கவுண்டருக்கு 1798 ஆம் ஆண்டு பாலக்காட்டுக் கோட்டை மேஜர் கமாண்டர் எழுதிய கடிதம்;-[1]

ஸ்ரீமன் சகல குண சம்பன்னரான சகல தர்ம பிரீதி பாலகனான பந்து சனசிந்தாமணியனான அகஸ்டித லட்சுமி பிரசன்னனான வெகுசன பரிபாலகனான நித்தியாவை தானலி நோதராக மகா மேருவுக்கு சரிசமான தீரனான மகா-ள -ள-ஸ்ரீ ஊத்துக்குளி காலிங்கராயக் கவுண்டர் அவர்களுக்கு ராஜமாலிய ராஜஸ்ரீ பாலக் காட்டுக்கோட்டை மேசர் கமண்டர் சேம்சு ரமலீ[2] சாயபு அவர்கள் மெத்தமெத்தசலாம்.

பெம்பாயில் பவுசுதாற மகாறாச ராஜஸ்ரீ றாசமானியறாஜஸ்ரீ சகல பவிசுக்கெல்லாம் பெரிய சென்றல் அவர்கள் இற்றியோட்டு சாயபு அவர்கள் ...ள... .. சென்டறால் அட்டலீ சாயபு அவர்கள் மலையாளத்துக்கெல்லாம் கமசல சாயபுதுரை அவர்கள் இவர்க ளெல்லாம் ஒருமனதாக யோஜனை செய்து நமக்கு அப்பனை தந் தார்கள் உங்களுக்குச் சொல்லச் சொல்லி-உம்முடையகாரியத்திலே மெத்த மெத்த சந்தோஷமாய் தங்கள் மனசுலே யென்ன காரியம் வேண்டியிருந்தாலும் வெகுமானப் பட்ட இங்கிலீஷ் கம்பெனிக் காரரோடே ராஜியாக இருக்க வேணும் சொல்லியிருந்த பிரகாரத் துக்கு அதே மேரைக்கு நமக்கு[3] அப்பணையாச்சுது.

அது காரியத்துக்கு இப்போ சர்க்கார் காரியத்திலே தாங்கள் கும்பினிக்கு செய்து நடக்க வேண்டிய காரியத்துக்கு யிப்பச் சம்மத மான படியினாலே தாங்கள் அறிய வேண்டி தங்களுக்கு தாக்கிதா எழுதியிருக்கிறோம். பின்னையும் நமக்கு அப்பனையான தலங்களுக் கும் தங்கள் வகையிலே தங்களைச் சேர்ந்த கவுண்டமாரும் தங்

களுக்குச் சினேசிதமாகயிருக்கிற கவுண்டமார் ஆனார் தங்களைச் சேர்ந்து இருக்கிறார்களோ அவர்களும் தாங்களுமாக கும்பினி சரு காறத்துக்கு எந்தப் பிரகாரம் குமுக்கு செய்வீர்களோ அந்தப் பிர காரம் பிரயாசைப்பட்டு நடந்து கொள்ள வேணுமோ அந்தப்படி நடக்க வேண்டியது அந்தப்படி நடந்து கொண்டால் தங்களுட குமுக்கு வேண்டி தங்களுக்கும் தங்கள் குஞ்சு குளந்தையள் தங்கள் சீர்மையும் மோதலும் தங்களைச் சேர்ந்த கவுண்டமாரேயும் இதுக் கெல்லாம் தங்களுக்கு வேண்டி இங்கிலீஷ் கம்பெனி சர்க்கார் உங் களை வச்சுரட்சிக்கிறாப் போலே நம்முடைய வசம் உம்மிட சீமை யும் தங்களையும் கம்பெனிசர்க்கார் உள்ளவரைக்கும் ரட்சிக்கிறாப் போலே செய்து தருகிறோம். தங்கள் கையிலே எந்தப் பிரகாரம் ஆகுமோ. பாலக்காட்டுச் சேரியிலிருக்கிற ஜனத்தோடே கூடி தாங்களும் தங்களைச் சேர்ந்த ஜனங்களும் நமக்குத்[4] துசும்னாக இருக்கிறவனை அலாக்கு செய்ய வேண்டுமோ அப்படிக்குச் செய்ய விம் அல்லாதே போனால் திண்டுக்கல்லிலே பவுசுகளத்தோடகூடா லிண்ணு தாங்கள் செய்விக்கிறதானால் செய்யவும் இல்லாதே போனால் பளனியிலே யிருக்கிற பவுசோடே கூடாணிற்று செய்ய ரதானால் செய்யவும் அல்லாதே போனால் தாங்களும் தங்களைச் சேர்ந்த ஜனங்களுமாக அவனையெந்த படியே சாரு செய்யவேணு மோ அந்தப்படி செய்யவும் மகா ராஜ ராஜஸ்ரீ சென்றல் இற்றி யோட்டு சாயபு அவர்களும் றாசஸ்ரீ சென்டறால் அட்டலீ சாயபு அவர்களும் கமசலசாயபு அவர்களும் இவர்கள்முன்னதாகதங்களை யெந்தபடி பெரியவாக்கி வைக்க வேணுமோ அந்தப் படியாக்கி நடப்பிச்சுக் கொடுக்கிறோம். தங்கள் மனசும் நம் மனசும் ஒன்றாக இருக்கிற படியினாலே தங்கள் காரியயக்காரர்ஒருத்தர் நம்மண்டை யிலே எந்நேரமும் பிரியாமல் காத்து இருக்கிறாப் போலே செய்ய வும். சர்க்கார் காரியம் எந்த வேளை எந்தப்படி வருமோ? ஆனபடி யினாலே தங்கள் மனுஷரைப் பிரியாமல் இருக்கச் செய்ய வேண்டியது. தாங்கள் இவ்விடத்துக்கு எந்த வேளை வந்தாலும் தங்களைக் காணுகிறது மெத்த சந்தோஷம்.

ராஜ மானிய ராஜஸ்ரீ பாலக்காட்டுக் கோட்டை மேசர் கமாண்டர் ஜேம்ஸ் ரமலீசாயபு,

(1798 மார்ச்சு 1)

1) தமிழக அரசின் பழஞ்சுவடிச் சாலையில் உள்ள கடிதத்தின் நகல்

2) சாயபு- மரியாதையாகக் குறிக்கும் சொல்

3) அப்பணை- உத்தரவு

4) துசுமன் -வேண்டாதவன் (திப்பு போலும்)

கொங்குப் புலவர்

1. வே. ரா. தெய்வசிகாமணி

தமிழ் நாட்டின், முதுபெரும் புலவரான வே.ரா. தெய்வசிகா மணிக் கவுண்டர் அவர்களை அறியாதார் இருக்கஇயலாது. தமிழ்க் கடலான அவர் இயற்றிய நூல்கள் எண்ணிலடங்கா. அதற்கு மேலாக அவர் பதிப்பித்துள்ள ஓலைச் சுவடிகள் ஏராளம். குறிப் பாக, முற்றும் அழிந்து விட்டதென்று எண்ணிக் கொண்டிருந்த "பஞ்சமரபு", இவரது அரிய கண்டு ,பிடிப்பாகும். அவரிடம் உள்ள ஓலைச் சுவடிகள், ஒரு பெரிய பெட்டி நிறைய உள்ளன. அவற்றைப் பதிப்பிக்கின்றோம் என்று கூறி, வாங்கிச் சென்று தொலைத்து விட்டோர் சிலர்: முற்றும் பதிப்பித்து இவரது பெயரையோ குறிக்காதோர் சிலர்.

முதுபெரும் தமிழ்க் கிழவர் உ.வே. சாமிநாதர் இவரது நெருங்கிய நண்பராவர், 'கொங்குப் புலவர் பட்டயம்' இவர் பாதுகாத்துப் போற்றி வைத்துப் படியெடுத்து, குறிப்புகள், கூறி உதவியதாகும்.

ஈரோடு வட்டத்தில், எழுமாத்தூருக்கு அருகில் உள்ள வேலம் பாளையம் இவரது ஊராகும். பல ஆண்டுகள் திருப்பாண்டிக் கொடுமுடி, திரு. சங்கரர் வித்யாசாலையில் தலைமைத் தமிழாசிரி யராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இந்த வயதிலும். தளராத ஊக்கத்துடன் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளார்கள்.

2. கொங்குப் புலவர் பட்டயம்

இதனை 'மதுக்கரைப் பட்டயம்' என்றும் சொல்வதுண்டு. மதுக் கரையில் எழுதப்பட்டதால் அப்பெயர் பெற்றது. வேளாளர் வீட்டுத் திருமணங்களில், மற்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் வாழ்த்துப் பாடும் புலவர்கள் பற்றிய செய்தியாகும்.

3. காலம்

கலியுக சகாப்தம், 4181 சித்தாத்திரி வருடம் பங்குனி மாதம் 13ம் தேதி வெள்ளிக் கிழமை இது கி.பி. 1080 க்கு நேர். கி.பி. 1080,

சித்தாத்ரி வருடம் தான். ஆண்டு பொருந்தி வருகின்றது. ஆனால் காலம் பொருந்தி வரவில்லை. முதல் தேவறாயர் காலம் கி.பி. 1406—1422. முற்காலத்துச் செய்தி, பின்னர் எழுத்து வடிவம் பெறுகிறதென்று கொள்ளலாம்.

4. மொழிநடை

பட்டயத்தின் மொழி நடை ஓரளவு தெளிவாக உள்ளது. பிழையும் குறைவு. வாசகர்கள் தாமே படித்துச் செய்திகளை எளிதில் புரிந்து கெள்ளலாம்.

5. பட்டயச் செய்தி

கொங்கு நாட்டார் திருமணங்களில் ஐயரை அழைப்பதில்லை. வடமொழி மந்திரங்கள் ஓதுவதில்லை. அருமைக்காரர் என்ற பெரியவர்தான் திருமணச் சீர்களை செய்து வைப்பார். இத் திருமணம் பற்றிய முழுவிவரம் அறிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழியல் திசம்பர் 74 இதழ் காண்க.

திருமணம், மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளில் வாழ்த்துப் பாக்கள் பாடுவதுண்டு. அவ்வாறு பாடுவோர் புலவர் எனப்பட்டனர். அவர்களுக்கு ஒவ்வொரு திருமணத்தின் போதும் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டுமென்பதை அரசு வழியாக உறுதி செய்து கொண்ட நிகழ்ச்சியே இப்பட்டயம் ஆகும்.

இப்புலவர்கள் தம்மைக் கம்பர் வழியினர் எனக் கூறுகின்றனர். கம்பரைப் பற்றியும் சடையப்பர் பற்றியும் செய்திகள் இப்பட்டயத்தில் வருகின்றன. தேரழுந்தூர் கம்பருக்கும், இதில் வரும் கம்பருக்கும் உள்ள தொடர்புகள் பற்றி ஆராய வேண்டியது தலையாயதாகும்.

விநோதரச மஞ்சரி, தனிப்பாடல் திரட்டுகளில் கம்பர் கொங்கு நாட்டிற்கு வந்து மிகவும் அல்லலுற்றுச் சென்றதாகச் சித்திரிக்கப் பட்டுள்ளன. ஆனால் இப்பட்டயத்திலோ கம்பர், கொங்கு வேளாளரை போற்றி, அவர்களின் மிகப் பெரிய நண்பராகக் காட்சி தருகிறார்.

கொங்கு நாட்டு வேளாளர் சோழ நாட்டிலிருந்து வந்தார்கள் என்ற செய்தியை இப்பட்டயம் உறுதி செய்கின்றது. தேனோலை முதல் இதழில் வெளியான மதுக்கரைப் பட்டயத்திற்குக் காலத்தால் முந்தியதாகத் தெரிகின்றது. மதுக்கரைப் பட்டயத்தில் கொங்கு வேளாளர், சோழ நாட்டிலிருந்து வேட்கோவரை

அழைத்து வந்து குடியமர்த்திய செய்தியைச் சொல்கிறது. வேளாளரின் திருமணச் சீர்கள் வேகையினைச் செய்து கொள்ள வேட்கோவருக்கு அனுமதி அளிக்கின்றது. கொங்குப் புலவர் பட்டயத்தில், இச்சீர்களைச் செய்யும் கட்டுக்கலன் வரிசையில் வேட்கோவர் பெயர் இல்லை. எனவேதான் இப்பட்டயச் செய்தி காலத்தால் முந்தியதெனக் கருதுகிறோம்.

இந்த இதழின் பின்னே 'சென்மப் புலவன் பட்டயம்' என்ற சுவடியும் உள்ளது. அதில் திருமணக் காலங்களில் புலவோந்திரம் சொல்ல வேட்கோவர் குடியைச் சேர்ந்த சென்மப் புலவனுக்கும், அவன் வழி வந்தோருக்கும் கட்டணங்கள் அளிக்கப்படுகின்றன.

தற்போதைய திருமணங்களில் மங்கல வாழ்த்துக் கவிதை படிக்கும் உரிமை நாவிதருக்கு வழங்கப்பட்டுள்ளது. நாவிதரைப் பண்டிதர் என்றும் அழைப்பர்.

எனவே ''புலவர்'' யார் என்பது பற்றியும், வாழ்த்துக் கவிதை மரபுகள் பற்றியும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாதது.

6. மங்கல வாழ்த்து

இப்பட்டயத்தில் சொல்லப்படுகின்ற மங்கல வாழ்த்துக் கவிதை, Dr. மீனாட்சி சுந்தரம் அவர்களின் கட்டுரை இணைப்பாக தமிழியல்—திசம்பர் 74 இதழில் வெளிவந்துள்ளது. பொருள் வளமுடையோர் இதனை அச்சிட்டு திருமண காலங்களில் வழங்குவதைக் கண்டிருக்கின்றோம். நேயர்களின் வசதி கருதி, அதனையும் சேர்த்து அச்சிட்டுள்ளோம்.

7. பிற வாழ்த்துக்கள்

திருமண காலங்கள் மட்டுமின்றி குழந்தைகள் பிறப்பின்போது பத்துப் பிள்ளைத் தமிழ் பாடுவதும் சொல்லப்படுகிறது. நிறைவாக வாழ்ந்தோர், இறையெய்தும் போது வாழ்த்தும் செய்தியும் கூறப்பட்டுள்ளது.

8. வரி

'வதுவையிறை வரி' என்ற அரசாங்க வரியை மாற்றி, 'இராசபடி பால் வர்த்தனை' என்று புலவர்களுக்கு வழங்கும் ஏற்பாடு குலோத்துங்கன் காலத்தில் ஏற்பட்டதாகத் தெரிகின்றது. காலப்போக்கில் அது சற்றுத் தளரவே விசய நகர மன்னர் காலத்தில் வேளாளரின் முயற்சியால் அது மீண்டும் உறுதி செய்யப்படுகின்றது.

9. ஒவ்வொரு நாட்டிற்கும், புலமை சொல்ல உரிமையுடையவர் யார்யாரென்று பட்டியல் தரப்பட்டுள்ளது. வேளாளர் தவிர எல்லாக் குலத்தாருக்கும், புலமை வாழ்த்து இருந்ததாகத் தெரிகின்றது.

10. இப்பட்டயம் மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயில் ஊரார் முன்னிலையில் எழுதப்பட்டுள்ளது. அங்கு வந்திருந்த பெருமக்கள் அனைவரும் ஒப்பமிட்டுள்ளனர். அவர்களின் குலமும் நாடும், பேரும் பட்டியலாகத் தரப்பட்டுள்ளன.

11. எழுதியர்

பட்டயத்தைச் செப்பில் எழுதியவர் சிலிப்பை ஆசாரி'. அந்தச் செப்புப் பட்டயம் கிடைக்கவில்லை. அதன் நகலான ஓலைச் சுவடியே கிடைத்துள்ளது. அச்சுவடி புதுப்பைச் செல்லப்ப வாத்தியார் வீட்டு ஏட்டுப் பிரதியாகும்.

12. ஆராய்ச்சிகள்

கொங்கு நாட்டு வரலாறும், அதன் மூலம் தமிழ் நாட்டு வரலாறும் தெளிவு பெற, இது ஒரு வரலாற்று மூலம் என்பதில் ஐயமில்லை. தமிழகக் கீழைக்கலை சுவடிக் காப்பகம் வெளியிட்ட சோழன் பூர்வ பட்டயம், கொங்கு பதிப்பகம் வெளியிட்ட மதுக்கரைப் பட்டயம், யிருபத்தி நாலு நாட்டுப் பட்டயம், சென்மப் புலவன் பட்டயம், கொங்கு இதழில் வந்த வேட்டுவர் பூர்வ பட்டயம் அனைத்தும் ஒருங்கே வைத்து ஆராயத்தக்கன. வெளியிடப்படாத பட்டயங்கள் வைத்துள்ளோர் தகவல் தந்து உதவ வேண்டுவது அவர்தம் கடமையாகும்.

கொங்குப் புலவர் பட்டயம்

கலியுக சகாத்தம் 4181 [1] மேற்செல்லா நின்ற சித்தாத்திரி வருஷம் பங்குனி மாதம் 13 தேதி சுக்கிர வாரமும் உத்தர நட்சேத்திரமும் பெற்ற சுபதினத்தில் நாலு சமஸ்தானத்துக் குங் கருத்தராகிய[2] விசய நகர்ப் பட்டணத்தில் தேவப்பராயர் செங்கோல் செலுத்தும் நாளில் வேளாளப் பிரபுக்களாகிய காராள வமிசத்தார் 48000 கோத்திரத்தாரும் ஒன்றாகக் கூடித் தேவப்ப ராயரண்டையிலே போய் எங்களுக்குப் புலமைநிலை நாட்டுப் பண்ணிக் கொடுக்க வேண்டுமென்று கேட்கவும் தேவப்பராயர் வேளாளப் பிரபுக்களாகிய காராள வமிசத்தாரைப் பார்த்து உங்களுடைய வமிசத்துக்குப்புலமைக் கம்பர் வாழிப்புலவனென்று[3] நம்மிடத்திற்கு வந்து முன் காலத்தில் மூவிராசாக்கள்[4] நாளில் குலோத்துங்கச் சோழராசா வானவர்[5] வதுவை யிறவரியைக் கம்பற்கு ராசபடி பால் வர்த்தினையென்றும்[6] மாடை அரைக் களிஞ்சு[7] பணங்கொடுத்தாரென்றும் பழமொழிச் சரித்திரம்[8]

---

1. 4181 கலி—கி பி. 1080 இதுமுதல் தேவராயர் காலத்துடன் ஒத்து வருவதில்லை. அவர் காலம் கி.பி. 1406—1422.
2. நாலு சமஸ்தானம்—சேர சோழ பாண்டிய விசயநகர்
3. புலமையுடைய கம்பரது வாழ்த்தினைப்பாடும் உரிமை பெற்ற தமிழ்ப் புலவன்.
4. மூவிராசாக்கள் நாள்—கி.பி. 12 ஆம் நூற்றுண்டில்.
5, கி.பி, 1120—1155 இரண்டாம் குலோத்துங்கன்.
6. குலோத்துங்க ராசாவின் முத்திரையிட்டபடி நிறையப் பால் வழங்குதல்.
   வதுவை இறை வரியைக் கம்பருக்கு மாற்றித் தரும் பொழுது இராசபடி பால் வருத்தனை என்று மாற்றித் தரப்பட்டது.
   படி—வரி
7. பொன் (மாடை அரைக்கழஞ்சு)
8. பழமொழிச் சரித்திரம் முது மொழி வரலாறு.

வாசித்துக் கொடுத்தான். அது கேட்டுக் குலோத்துங்க சோழ ராசா கொடுத்த வதுவையிற வரியை மாடை அரைக் களஞ்சு பணமும் படிபால் வெருத்தனையும் மாமூல் பிரகாரத்துக்கு வழங்கும்படியாக வுத்தரவு செய்து நஞ்சராயப் புலவனென்று பேருமிட்டழைத்துத்[1] தியாக வெகுமதி [2] கொடுக்கவும் இடது கையை யேந்தினான்.[3]

இடது கையிலே தியாக மேந்துகிற வழக்க மென்னவென்று கேள்க்க, வேளாளர் சமுகத்தில் தியாக மேந்துகிறது வலக்கை, அரசர்கள் சமுகத்தில் தியாக மேந்துகிறது இடக்கையுமென்று சொல்லிக்கொண்டான்.

உங்கள் புலவன் இடது கையிலே வாங்குகிறது வழக்கந்தானோ வென்று கேழ்க்கவும் வேளாளப் பிரபுவாகிய காராள வமிசத்தார் தேவப்பராயரிடத்தில் பழமொழிச் சரித்திரமாயுள்ள வசனம் பேசினது.

எங்கள் வமிசத்துக்குள்ள புலமை உஜச்சர்[4] வமிசத்தில் கம்பரும் கம்பரது கையேட்டுக் காரரும்[5] உள்ளவர்கள். மூவர் ராசாக்கள் நாளில் குலோத்துங்க சோழ ராசாவானவர் கம்பரைப் பார்த்து நம்முடைய பேரில் தமிழ் பாடவேணுமென்று கேட்டாரதுக்கு நாட்டுதல் நாட்டிப் பாடுகிறது[6] என்னவென்று கேட்டார். நம்முடைய பொன்னி நதியை நாட்டிப் பாடவேணுமென்று சொல்லவும் பொன்னி நதியானது நம்முடைய வேளாளரது எச்சில்

---

1. கம்பரது கையேட்டுக் காரனாயிருந்த நஞ்சராயப் புலவன் பெயரைச் சூட்டி.
2. தியாக வெகுமதி—கொடையாகிய வெகுமானம்.
3. இடது கையால் தியாக மேந்தினன் — குறிப்பிட்டவர்க்கன்றி மற்றையோரிடம் இடது கையால் தியாகம் வாங்குவது சிலர் கொள்கை.
4. உவச்சர்—
   "சீரணி சோழ நாட்டுத் திருவழந் தூரு வச்சர்
   காரணி கொடையான் கம்பன் தமிழினாற் கவிதை
   சொன்னான்"—இராமாவதாரம் பாயிரம்
5. கையேட்டுக்காரர்—கவிஞர் சொல்லும் கவிகளை கையில் ஏடு வைத்துக் கொண்டு எழுதுதலையும் வாசித்தலையும் செய்வோன்.
6. நாட்டுதல் நாட்டுப் பாடுதல்—குறித்த பொருளை நாட்டிக் கவிபாடுதல்.

கலத்துத் தண்ணீர் என்றுசொன்னார்.[1] அதனால் பொன்னி நதிக்குக் கூட்டிக்கொண்டுபோய்க் கம்பரை நிறுத்திக் கொண்டு எச்சில் பருக்கைச் சோற்றினைக் காண்பிக்கச் சொல்லவும் கங்கைப் பரமேசுவரியைக் கம்பர் தமிழ்ப் பாடினார். அப்பொழுது கங்கா பரமேசுவரியான உமையவள் எச்சில் பரிசோதனை காண்பிக்கவும் சோழராசாவானவர் மனது நொந்து வெகுளி கொண்டார். அப்போது கங்காபரமேசுவரியான மகாதாய் கோவத்துக்குக் கோவங்கொண்டு பொங்கி வருகிறதைக் கண்டு கம்பரைப் பார்த்து மிகவும் வணங்கி மகா தாயினுடைய மனங்குளிர்ந்து தன்னிலைக்கு நிற்கும்படியாய் பாடவேணுமென்று கேட்டார். அப்படியே பாடவும்[2] காவிரித் தாயினுடைய மனங்குளிர்ந்து தன்னிலைக்குள் நின்று போகவும் சோழ ராசாவானவர் கம்பரைப்பார்த்து உமக்கு வேண்டுமென்கிற காரியத்தைக் கேட்டுக் கொள்ளுமென்று சொல்லவும் அப்பொழுது கம்பர் கேட்டுக் கொண்டது.

நம்முடைய வேளாளவமிசத்தில் வாங்குகிற வதுவையிறவரியை ராசபடி வருத்தனையென்று நமக்கு என்றென்றைக்கும் நாட்டுதல் நாட்டிப் பண்ணிக்கொடுக்க வேணுமென்று கேட்டார்.[3] அப்படியே நல்லதென்று சொல்லிக் கலியுக சகாத்தம் 801 வருஷத்தில்[4] வதுவையிறவரியைத் தாம்பிர சாசனத்தில்[5] அரைக்களஞ்சு மாடை பணமும் ராசபடி வருத்தனை இன்று முதல்நாள் என்றென்றைக்கும் சந்திராதித்தருள்ள வரையில் பொன்னி நதியுள்ளவரைக்குமென்று குலோத்துங்க சோழர் கையெழுத்து நாட்டி கம்பற்குத் தந்தோமென்று கொடுத்தார்.

---

1. கம்பர் பாடியது :
   'மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
   கை கழுவும் நீர்மோதுங் காவிரியே—பொய்கழுவும்
   போர்வேற் சடையன் புகழ்மரபி னோர்பெருமை
   யார்கூற வல்லார் அறிந்து'.
2. கம்பர் காவிரி தன்னிலையில் நிற்கப்பாடியது-
   "கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள்
   பொன்னி கரைகடந்து போயினளென்—றின்னீர்
   உரைகிடக்க லாமோ உலகுடைய தாயே
   கரைகடக்க லாகாது காண்"
3. வதுவையிறவரி—இது அரசனுக்குச் செலுத்துவது. இதனை ராசபடிபால் வருத்தனை என்று மாற்றி நிலை நாட்டித் தருக என்றனர் என்க.
4. வருடம் சரியில்லை—கலியுகம் 801.
5. தாம்பிர சாசனம் — செப்புத் தகட்டில் எழுதிப் பொறிப்பது.

அந்தத் தாம்பிர சாசனத்தைக் கம்பர் வாங்கிக் கொண்டு வந்து பெண்ணை நாடு வெண்ணை நல்லூர்[1] ஆயி நயினாருடைய குமாரன் சடைய நயினார் கையில் கொடுத்தார்.[2]

அப்போது எங்கள்முன் பெரியோர்கள் காஞ்சிநாடு ஏனாதி நயினார் அவர்களும் மீனநாடு ஆண்டாராகிய பாண்டி மன்றாடியாரவர்களும் அளகநாடு உடையா நயினார் அவர்களும் வானாடு புள்ளை நயினார் அவர்களும் வீடுரு நாடு சிந்தாமணிநயினார் அவர்களும் ஆத்திப நல்லூர்நாடு பெரியாண்ட நயினாரவர்களும் கோவள நல்லூர்நாடு நல்லாண்ட நயினாரவர்களும் கோவைநாடு பண்ணை நயினாரவர்களும் செஞ்சிநாடு தேவராண்ட நயினாரவர்களும் இப்படித் தொண்டை மண்டலம் சோழமண்டலம் பாண்டி மண்டலத்திலுள்ள 79 வள நாட்டாரும்[3] ஒன்றாகக் கூடிக் காராள வமிசத்தை விளக்கம்பண்ணத்தக்கதாகக் கம்பர் வாக்கினாலே எங்கள் எருவிருதுக்குள்ள சீர் முதலானதும் ஏரெழுபதுக் கவிதையும் பாடி வைத்துக்கொண்டு எங்கள் வமிசத்துக் கலியாணத்துக்குச் சீரும் சிறப்பும் உள்ளதெல்லாம் வாழிக்கவிதை பதினாறிலேயும்[4] மங்கள வாழ்த்திலேயும் நாட்டுதல் நாடிப் பாடிவைத்துக் கொண்டு கம்பரையும் கூட்டிக்கொண்டு மூவராசாக்களையும்

---

1. பெண்ணை நாடு வெண்ணை நல்லூர்—பெண்ணையாறு பாயும் திருவெண்ணை நல்லூர்.
2. புதுவைச் சடையான் இவரின் வேறானவன் அவன் சங்கர முதலியார் குமாரன்.

   ‘ தருவுயர்ந்திடு புதுவையம் பதி
   தங்குமன்னிய சேகரன்
   சங்க ரன்தரு சடையன் என்றொரு
   தரும தேவதை வாழ்வதே’

   — பரராசசிங்கன் பாடல்

   ‘ மாணாகரன்செங் கரன் சடையன்
   வளஞ்சேர் சோழமண்டலமே’ —சோழ மண்டல சதகம்

   இவன் விக்கிரம சோழன் காலத்திலிருந்தவன்.

   நயினார்--நாயனார் என்பதன் திரிபு சேரசோழ பாண்டிய மண்டலங்களிலுள்ள வேளாளருக்கு முன்பு வழங்கிய பெயர்நயினார்.
3. 79 வளநாட்டார்—

   ‘ தாராள மாகவே யெழுபத் தொன்பதுநாடு
   சாற்றரிய வளநாட்டுளோர்’ —கம்பர் வாக்கியம்
4. வாழிக் கவிதை பதினாறு-இதனை முத்துசாமிக் கோனார் பதிப்பித்த மங்கல வாழ்த்துப் பாடல் காணலாம். இதன் பின்னர் சேர்க்கப் பட்டுள்ளது.

அழைத்துக்கொண்டு கருவூருக்கு வந்து தில்லை மூவாயிரம் பேரையும் வய்த்துக்கொண்டு எங்கள் கங்கைக்கு வமிசம் [1]அறுபத்து நாலு கோத்திரத்துக்கு[2] நாற்பத்தெண்ணாயிரங் கோத்திரமென்று வகுத்துப் பொன்னி நதியிலேராசாக்களுக்கு எச்சில் பரிசோதனை[3] காண்பிச்சதுக்காகப் பசுபதிலிங்கர் முன்னிலைக்கிக் கலத்து நிரம்பப் பால்பழம் சர்க்கரை நெய்யுடனே வாத்து வைத்துக் குலோத்துங்க சோழ ராசாக் கொடுத்த வதுவை இறவரியை மாடை அரைக் களஞ்சு பணமும் வய்த்து மற்றவர்க்கு முன்னாலே மங்கலவாழ்த்தும் பதினாறு வாழியும் படித்து நிறைவேற்றிக்கொண்டு எங்கள்வமிசங் குளிர்ந்து பசுபதிலிங்கர் முன்னிலைக்குச்[4] சத்திய சாட்சியாகச் சந்திராதித்தர் உள்ளவரைக்கும் காராள வமுசமுள்ளளவும் கம்பிற்கு ராசபடி பால் வருத்தனையென்றுங் கலத்தையெடுத்துத் தந்து கொண்டோம்.

காஞ்சிபுரத்திலே எரெழுபது தமிழ் அரங்கேற்றி வைத்து காமாட்சியம்மன் ஏகம்ப நாதர் முன்னிலைக்குக் கம்பர் தமிழ் உள்ளளவும் காழி மலையுள்ளளவும்[5] காமாட்சியம்மன் சத்திய காட்சியாகக் கம்பற்குக் காராள வமிசம் நாங்களெல்லோரும் அருமைச் சாசன பட்டயமெழுதிக் கொடுத்து முன்பு யெங்கள் வமிசத்துக்குக் கம்பரைப் புலமை நாட்டி வைத்துக் கொண்டோம்.[6]

அப்படியே கம்பருக்கு ராசபடிபால் வருத்தனை பணமும் எங்களுக்கு வாழிச்சீரும் மங்களவாழ்த்தும் ஏரெழுபதுக் கவிதையும்

1. சங்கரரும் பார்வதியும் தான்மகிழ்ந்த நாளதிலே கங்கை பெருகியிந்தக் காசினியில் பொங்குவதைக் கண்டு சிவனார் மகிழ்ந்து கையால் அணைத்தவுடன் ஒண்டொடியும் பாலகனும் உற்பவித்தார்.
   கங்கையினிடம் சிவாமிசமாகத் தோன்றியவர் வேளாளர் — மேழி விளக்கம் 291—2
2. சோழ நாட்டிலிருந்த 64 குடும்பங்களிலிருந்து தோன்றியவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் பேர்கள்.
3. வேளாளர் வீட்டு விருந்தினர்கள் விருந்துண்டு கைகழுவும் நீர் என்று பரிசோதனை செய்து காட்டியது.
4. கருவூர் சோழர் முடிசூட்டு நகரங்களில் ஒன்றாக இருந்தது.
5. காழிமலை—காஞ்சியை அடுத்திருக்க வேண்டும். (திருக்கழுங்குன்றமாக இருக்கலாம்)
6. "நாவிற் புகழ்கம்ப னாடற் கடிமையென்றே
   மாவைக் கரைத்துமுன்னே வைக்குங்கை"
   — திருக்கை வழக்கம் 43

எங்கள் கலியாணத்துக்குப் படித்துக்கொண்டு வருகுற காலத்திலே[1] சோழ ராசாவானவர் கம்பரைப் பார்த்து இனிமேலாகிலும் நம்முடைய பேரில் தமிழ்ப் பாடல் பாட வேணுமென்று கேட்டார். அதற்குக் கம்பர் சொன்னது வேளாளரைப் பாடுகிற நாவிலே உம்மைப் பாடுகிறதில்லையென்று சொல்லிவிட்டார். அதற்காகச் சோழராசாவின் கையம்பினாலே இறந்து போனார்.

இந்த ராசபடி பால் வருத்தனைப் பணம் கம்பர் கையேட்டுக் காரர் செங்குந்த கோத்திரம் போக்கங் கூட்டம் .நஞ்சராயப் புலவன் முன் பெரிய வாள்க்குநடந்து வருகிற காலத்திலே யெங்கள் முன் பெரியோர்களைச் சேரராசாவானவர் கலியுக சகாத்தம் 1051 வருசத்தில் எங்கள் பெரியோர்களைச் சோழ மண்டலம் விட்டுக் கொங்கு மண்டலத்துக்கு அழைத்து வருகிற போது எங்களுடைய புலமையும் பெரியோர்களுமாக வந்தார்கள்.[3] அப்போது சோழ ராசாவானவர் சுவாதீனமாய் எங்களுக்குக்கொங்கு மண்டல இருபத்து நாலு நாட்டிலேயும் காணி பூமி கொடுத்து மேன்மைத் துடனே வய்த்துக் கொண்டாடினர்.[4] அன்றுமுதல் இன்றளவும் வாழிச்சீரும் மங்கள வாழ்த்தும் ஏரெழுபதுக் கவிதையும் எங்களுக்கு நடந்து வருகிற காரியத்தை அத்தைத்த வுள்த்தினால் எங்கள் காராள வமிசத்துக்கு வர்த்தியாகாதென்று சொல்லிக் கேள்க்கவும் பின்பு ராசராசாக்கள் செய்த தருமத்தை ராசாக்கள் தானே அழிந்து (படாமல்) விட்டால் நீதிநிலை தருமசிந்தை யாவதென்ன வென்று சொல்லிக் கேள்க்கவும் இதுவெல்லாந் தேவப்பரர் செவி குளிரக் கேட்டுச் சந்தோசப்பட்டு வெகுமதி கொடுக்கும் போது இடது கையில் வாங்கிக் கொண்டு தேவப்பராயர் பேரில் பாடிப் படித்துப் புகழ்ந்து கொண்டு நம்முடைய வேளாளப் பிரபுக் களாகிய காராள வமிசத்தார் ராசிக் களத்தில் கூடையினால் கொடுப்பது குதிக்காலளவென்று புகழ்ந்து கொள்ளவும் வேளாளப் பிரபுக்களாகிய காராள வமிசத்தாரைப் பார்த்து தேவப்பராயர்

---

1. கம்பருக்கு அடிமை
   'பார்த்திப கண்ணியிற் சேரனும் சோழனும் பாண்டியனும்
   கூத்தழை மாநகர் வீற்றிருந்தார்முன் குலோத்துங்கனும்
   கார்த்திகைக் கம்பரைக் காவேரிஎச்சிலைக் காட்டுவதற்கு
   மாத்தெனத் தேயடி மைப்புகு வார்கொங்கு மண்டலமே,
   — கொங்கு மண்டல சதகம்—67 மற்றும் 83, 85
2. ஆண்டு பொருத்தமாக இல்லை—கலியுகம் 1051 (கி.பி. 950 ஆக இருக்கலாம்).
3. சோழன் பூர்வ பட்டயச் செய்திகளோடு ஒப்பிடலாம்.
4. சோழராசா என்பது பொருத்தமில்லை. சேரராசா என்றிருக்க வேண்டும்.

உங்களுடைய வமிசத்துக்குப் புலமை நஞ்சராயப் புலவனுக்கு முன்னடந்த மாமூல்படியே ராசபடி பால் வருத்தனை மாடை அரைக்களஞ்சு பணமும் கொடுத்துக் கொண்டு கம்பர் வாழியும் மங்கள வாழ்த்தும் ஏரெழுபதும் படித்துக் கேட்டுக் கொண்டு விளக்கமாய்ச் சந்திராதித்தருள்ள வரையில் சுகமாயிருங்களென்று சொல்லவும் நல்லதென்று கேட்டுக் கொண்டு தேவப்பராயர் கையில் நஞ்சராயப் புலவனுக்குக் கொங்கு மண்டல இருபத்து நாலு நாட்டிலேயும்[1] ராசபடி பால் வருத்தனைப் பணம் வாங்கு கிறதுக்குத் தருவுவாராமல் படிக்கு உத்தரவு பிரமாணிக்கம வாங்கிக் கொடுத்து அனுப்பிவிச்சுக் கொண்டு மதுக்கரைக்கு வந்து செல்லாண்டியம்மன் கோவிலிலே இருபத்து நாலு நாட்டுக்கு மிவனே புலமையென்று வரிசையும் கொடுத்து மகுடஞ்சூட்டிக் கொங்கு இருபத்து நாலு நாட்டிலேயும் ஏரெழுபதும் பதினாறு வாழியும் படித்துக் கொண்டு நாளிக்கம்பு ஒரு வள்ளம் ஏருக்கு எட்டு வள்ளக்கம்பும் களத்தில் பெருவச் சாட்டில் ஒரு சாடு கம்பும் கொங்க முறத்தில் ஒரு முறக்கம்பும் (முதல்) கலியாணத்துக்கு அரைக் களிஞ்சு மாடைப்பணமும் நடுக்கலியாணத்துக்குக் கால்க் களஞ்சு மாடைப் பணமும் கடசிக் கலியாணத்துக்கு அரைக் (கால்) களஞ்சு மாடைப் பணமும் நாட்டுக்கு முக்களஞ்சு மாடைப் பணமும் பூந்துறை நாடு மேல் கரை 32 கீழ்க்கரை 32 ஆக 64 கிராமமும், காங்கய நாடு 12 கிராமமும் குறுப்ப நாடு தென் குறும்பை வீரசோழ புர நாடு சேமறத்தி ஆக 32 கிராமமும் இந்த மூன்று நாட்டுக்கும் செங்குந்த கோத்திரம் போக்கங்கூட்ட நஞ்சராயப் புலவனுக்குக் கையேட்டுக்காரர் உகச்சன், பாலிடையன், சோளியன், வணிகன், வேதியன், மங்கலன் சேரகுலன், பச்சமலையாளன், சேனைக் கொடியன், திருவம்படிக் காரன், சவழன், இத்தாதி பேருக்கும் 21 நாடு இந்த 21 நாட்டிலேயும் பால் குடிக்கும்படி புலவருக்கு வருத்தனைக்கு ஏழ்பணங் குடுக்கவும், தென்கரை நாடு 12 கிராமமும் அண்ட நாடு 32 கிராமமும் உளவிட நாடு தென் பொங்கலூர் நாடு

---

1. 'முந்திய மன்னர் மூவரும் கூடி
உய ரெழுபத்து ஒன்பது நாட்டில்
நயமிரு பத்து நான்குநாட் டுள்ள
கங்கை பாலகர் காராளர் தங்கள்
மங்கல மான மணமது முடிக்க' — என்னும் மங்கல வாழ்த்துப் பாடலால் சோழ தேசம் 79 நாட்டு வேளாளர் களே கொங்கு தேசம் 24 நாட்டு வேளாளர்கள் என்பது தெளிவாம்.

சேர்த்தி ஆக 2 நாட்டுக்கும் வணிகன் கொத்துக்கு வதள கொத்து செங்குந்த குலத்திராசிக் கூட்டத்தில் திருக்கைவேலப் புலவன் திருவாவினங்குடிப் புலவன் செல்லக் குமாரப் புலவன் மங்கல நாத பட்டன் ஆகக் கொத்து 4 பொங்கலூர்க்கா நாடு வாரக்க நாடு ஆனைமலை நாடு நல்லூர்க்கா நாடு உள்பட நாடு வடவாசைப் பேருரு நாடு சேர்த்தி ஆக நாடு 6 சேரகுல வேளாளரில் கருவி கூட்டத்தில் பிறம்பட்டப் புலவன் செங்குந்த குலத்தில் பச்சாங் கூட்டத்தில் பூங்கோதிப்பட்டன் சேனைக் கொடிக்காரனில் அக்த்தி கூட்டத்தில் சந்திரப்பட்டன் அனந்தபட்டன் ஆகக் கொத்து 4.

ஆரை நாட்டுக்கு உள்பட நாடு வண்டிக் கோட்டை நாடு சேர்த்தி சவளங் கொத்துக்கு வதளங் கொத்து செங்குந்த குலத்தில் ஆருங் கூட்டத்தில் செவளநாதபட்டன் பொன்னங் கூட்டத்தில் ஆண்டிப் புலவன் ஆக கொத்து 2.

அரைய நாடு காஞ்சிக் கோவில் நாடு ஒடுவங்க நாடு இந்த 3 நாட்டுக்கும் வேதியன் கொத்து வதள கொத்து செங்குந்த குலத்தில் பூந்துரையான் கூட்டத்தில் கொள்ள லிங்கப்பட்டன் தீர்த்தகிரிப் புலவன் சேஷபட்டப் புலவன் ஆக கொத்து 3.

தலைய நாடு மணல் நாடு வெங்கலநாடு பூவாணி நாடு இந்த நாலு நாட்டுக்கும் சோழியகுல வெள்ளாளரில் செல்லப்பட்டப் புலவன் வழாசப்பட்டன் உத்திரிய கூட்டத்தில் முத்தப்புலவன் வெள்ளோட்டான் கொத்தோடே ஆக 4.

வடகரை நாட்டுக்குப் பாலிடையன் கொத்துக்கு வதளகொத்து செங்குந்த குலத்தில் சூரி கூட்டத்தில் சம்பைச் சாமனாதன் கொத்து 1.

வையாபுரி நாடு காவிரிக்கா நாடு இந்த ரண்டு நாட்டுக்கு சேர குல வெள்ளாளரில் பவனி கூட்டத்தில் அவனாசி பட்டன் வேல பட்டன் அகத்தி கூட்டத்தில் சித்த நாதபட்டன் செங்குந்த குலத்தில் மகளி கூட்டத்தில் சின்னப்பட்டன் ஆகக் கொத்து 4.

கிழங்கு நாட்டுக்கு உட்பட நாடு நன்னாவல் நாடு செரித்தி நாடு கரமங்கல நாதன் கொத்துக்கு வதளக் கொத்து செங்குந்த குலத்தில் மகளி கோத்திரத்தில் காளிநாதப் புலவன் சோழியகுல வெள்ளாளரில் உழவன் கூட்டத்தில் செம்பலிங்கப்பட்டன் ஆக 2.

ராசிபுரநாடு தட்டையநாடு எழுகரை நாடு இதுக்கு உள்பட நாடு நரையநாடு பருத்திப்பளி வேள்குறிச்சி இருடப்பச்சை நாடு 3 பச்சைமலையாளன் கொத்து 1 உகச்சன் 1 திருவம்படிக்காரன் 1 ஆகக் கொத்து 3.

வதளக் கொத்து செங்குந்த குலத்தில் ராசிக் கூட்டத்தில் செங்குப் புலவன் அத்த நாரிப்பட்டன் ஆகக் கொத்து 2.

உகச்சன் கொத்தில் கொங்கப் புலவன் சித்திலிங்கப்பட்டன் திருவம்படிக்காரன் கொத்து அம்பல நாதபட்டன் கும்பட்டப் புலவன் இந்தக் கொத்துக் காரனுக்குக் கலத்துப்பால் கொடுப்ப தில்லை. செங்குந்த குலத்தான் ராசி கூட்டத்தான் கலத்துப் பாலெடுத்துச் சாப்பிட்டுக் கொண்டு தன் பங்குப் பிரகாரத்துக்கு படிப்பணம் பங்கு கொடுத்து வரவும். இதன் பிரகாரத்துக்கு நடத்தி வரவும் கொங்கு இருபத்து நாலு நாட்டுக்கு உள்பட நாடு எட்டு நாட்டுக்கும் நாட்டார் கல்லென்று நாட்டி வய்த்து கங்கை குல வேளாள வமிசத்தாரென்குற வேளாளர் கலியாணச் சீருபண்ணி வரப்பட்டது.

கொங்கு இருபத்து நாலு நாட்டாருங் கூடிக் கலியாணம் நடத்திவந்ததுக்காக இப்போது நாட்டார் கல்லுக்குச் சீரு நடத்தி வருகிறதற்காக. நாட்டார் கல்லுக்குக் காப்புக்கட்டி குப்பாரி கொட்டிச் சீருக்கு பெண்ணுக்குக் கங்கணங்கட்டி நாட்டுக் கல்லுக்குப் பெண்ணெடுக்குஞ் சீருக்கும் தக்கோர் படியென்று மூன்று படிக்காரரும் நாட்டார் கல்லுக்கு விருது வாத்தியத்துடனே நடத்தி வரவும். இதுக்கு ராசபடி அரைக்களஞ்சு. மாடைப் பணத்திலே தக்கைப் படிக்காரனுக்கு தலைக் கலியாணத்துக்கு பணம் ஒன்று. கடைசிக் கலியாணத்துக்குப் பணம் ஒன்று. தக்கைப் படிக்காரனுக்கு இது பிரகாரம் வருத்தனை நடத்தி வரவும். பண்பாடிக்கு இது பிரகாரம் வர்த்தனை நடத்தி வரவும்.

கூத்தாடிக்குக் கலியாணந் தோறும் அரைப்பணம் வருத்தனை நடத்திவரவும் ராசபடிக் காரருக்கு பட்டம் புலமைக்கு ரட்டப்படி வருத்தனையும் தக்கோர் படிக்காரருக்கு இந்தபபடி வருத் தனையும் ஆக படி-5

தக்கைப் படிக்காரன் சிவகோத்திரத்தில் காமாட்சி, நீல கண்டன், காவேரி, நாராயணன், சொக்கலிங்கன், முருகநாதன், அத்தநாரி, ஆயிமுத்தன், முத்துலிங்கன் ஆக தக்கைப் படிக் கொத்து 9. பண்பாடியில் நவதானிய கோத்திரத்தில் சங்காரன், அவநாசி சுந்தரன், முத்து வீரன், குமரன், பழனி, நல்லான், பகவதி செங் கோடன், தாண்டான் ஆக பண்பாடிக் கொத்து 10 கூத்தாடியில் மாணிக்கை வமிசத்தில் மருதன், ஒவலன், சின்னான், முத்து வேலன், பச்சான், லிங்கன், முத்துக்காளி, கப்பினி, ஆயிமுத்தன், அத்தநாரி, தீத்தான், குமரவேலன், ஆயிமுத்தன், கூத்தாடிக் கொத்து 13. தக்கைப்பாடிக்காரனுக்கு விருது, உடுக்கைபண்பாடிக்கு

விருது பூணையுந்தாசியும், கூத்தாடிக்கு விருது. கைத்தலம், மத்தளம் மாணிக்கையுடனே இந்த மூன்றுபடிக்காரரும் நட்டார் கல்லுக்குக் குப்பாரி கொட்டும் சீருக்கும் கங்கணங்கட்டிப் பெண்ணெடுக்கும் சீருக்கு நாட்டார் கல்லுக்கு வாத்தியத்துடனே இப்படி தக்தோர்படி மூன்று படிக்காரரும் நாட்டார் கல்லுக்குச் சீருநடத்திவரவும். நம்முன் பெரியோர்கள் எல்லோரும் கூடி நீலிபலிக்கு எழுபது பேரில் முதல்வனாகிய கணவாள கோத்திரத்தில் நல்லாண்டார் குமாரர் கந்தாண்டார் பிறந்ததுக்காக முன் பெரியோர்கள் எல்லாருங்கூடி பிள்ளைப்பால் வருத்தனையென்று நம்முடைய வேளாள வமிசத்தில் தலைப்பேற்றுப் பிள்ளை பிறந்தால் கிண்ணியில் பாலும், தொப்புளுக் காணிக்கைப் பணம் 1. மஞ்சள் காணிக்கைப் பணம 1. வாசல்படி வழித்து பிள்ளையார் நாட்டி வைத்து கிண்ணியில் பால்வார்த்து வைத்து பிள்ளைத் தமிழ்ப்பாடல் 10, தக்கைப் பாடல் 10, பாடி வாழ்த்துதல். வாழ்த்திக் கிண்ணியில் பாலெடுத்து தக்கோர் படிக்காரனெடுத்துச் சாப்பிட்டுக் கொண்டு தொப்புளுக் காணிக்கைப் பணம் 1, தக்கை விருதுக்காரனுக்கு நடத்தி வரவும். மஞ்சள் காணிக்கைப்பணம் 1. பண்பாடிக்கு நடத்தி வரவும். இது பிரகாரத்துக்கு நடத்தி வரவும். கூத்தாடிக்கு வருத்தனை, அருமைப் பெரியோர்கள் அடைந்து போனால்[1] அருமை வாசலிலே கூத்துக்கட்டி கைத்தளமத்தளம் மாணிக்கையுடனே ஆடலும் பாடலுமாக மோச்சைக் கவிபாடி வாழ்த்துநல் வாழ்த்தி வரவும். இது பிரகாரம் நடத்தி வரவும் இதுக்கும் மங்கிலியப் பண்ணையத்து வீட்டுக்கு அரைப்பணம் வருத்தனையும் பயலாகு வீட்டுக்கு கால்பணம் வருத்தனையும் இது பிரகாரம் நடத்தி வரவும். நம் முன் பெரியோர்கள் நடத்தி வரப்பட்ட முறமையை இப்பொழுது எல்லோருங்கூடி இதை நிறுத்த வேண்டியதில்லையென்று நடப்பு நாளில் வைத்து இருக்கிறது. இது பிரகாரத்துக்கு கொங்கு இருபத்து நாலு நாட்டிலேயும் நடத்தி வைத்து வரவும். கங்கைகுல வமிசம் கொங்கு வேளாளருக்கு, வசிய[2] குலத்தில் கொங்கச் செட்டிகளுக்கு, செங்குந்தகுலத்தில் கொங்கு கைக்கொள்வருக்கு[3] படி பாலுக்குள்புலவர்கள் வமிசத்தார்களுக்கு, இந்தவமிசத்தார்கள் கல்யாணம் செய்யும் சீர்முறைமைக்கு நாட்டார் கல்லுக்கு குப்பாரி கொட்டும் சீரும் நாட்டார் கல்லுக்கு காப்புக்கட்டி பெண்ணெடுக்கும் சீரும் அருகுமணச்சீரும் வாழிச்சீரும் மங்கல வாழ்த்துப் படிபால் வருத் தனையும் நடத்தி வரவும்.

---

1. அடைந்து போனால் — இறந்து போனால்.
2. வசிய குலம் — வைசிய குலம்
3. கைக்கொள்வர் — கைக்கோளர்.

இந்தச் சீரு தவறிக் கலியாணஞ்செய்தால் சாதிக்குக் குறைச்சலாவார். இந்தச் சீரு தவறாமல் நடத்தி வரவும். கங்கை வமிசத்து தென்திசைக் கொங்கு வேளாளர் கலியாண வாசலுக்குக் கட்டுக் கல்லர் பதினெண் பேருள்ளவர்கள். நாவிதன், குயவன், வண்ணான், கணக்க குலத்தான், கொல்லன், தச்சன், கலக்கொத்தி, கண்ணன், மாலைகாரன், பாணன், பாலிடையன், உப்பிலியன், ஒகச்சன், கோயிலாண்டி, பள்ளன், பறையன், சக்கிலி இந்தப் பதினெண் பேரும்[1] வேளாளர் கலியாண வாசலில் அவரவர் வைக்கிற செலவளியைச் சீரு சிறப்புடனே வைத்து அவரவர் வாங்குகிற செல்வளி வரிசையை வாங்கி வரவும் இது பிரகாரத்துக்குக் கொடுத்து நடத்திவரவும். நாவிதன், ஆண்டி, கணக்க குலத்தான், ஒகச்சன் பாலிடையன், மாலைகாரன், பறையன் இந்த ஏழுபேர் கட்டுக் கல்லரும் தங்கள் தங்கள் கலியாணத்துக்கு நாட்டுக்கல்ச் சீரு நடத்திவரவும். நாட்டார் கல்லுக்குப் பறையன் தாங்குநித்ததுக்காக அருமைக் கலியாணத்துக்குச் செல்வளி போக மிடாச்சோறு தாளியில் பருப்புங் கொடுத்து வரவும்.

பூந்துறைநாடு, மேல்கரை கீழ்க்கரை ஆக சா 604 கிராமத்துக்கு மேல் கரைப் பூந்துறை நாடில் நாட்டார் கல்லுக்கு தரம் நாலு. தென்கரை நாடு 12 கிராமத்துக்கு தரம் ரெண்டு. காங்கய நாடு பன்னிரண்டு கிராமத்துக்கு நாட்டார் கல்லுக்குத் தர மூணு. இப்படிக் கொங்கு இருபத்து நாலு நாட்டுக்கும் நாட்டார் கல்லுக்கு இது நரபலியென்று இருபத்து நாலு நாட்டாரும் நாலுபட்டமும் கூடி இதுவே சம்மதியென்று நாட்டார் கல்லென்று நாட்டி வைத்தசாசனம்[2] இப்படி இருபத்து நாலு நாட்டுக்குப் புலமைப் பட்டயம் கொடுத்து புலமைக் கொத்து முறைமையும் நாட்டி வைத்து நாட்டுக் கல் சீருக்காக தக்கோர் படியென்று நாட்டி வைத்து நரபலி நாட்டார் கல்லுக்குக் கொடுத்துச் சீரு நடத்திவைத்து வெண்ணை நல்லூருச் சடையன் நாற்பத் தெண்ணாயிரங் கோத்திரமும் விளக்கம் பண்ணி கருமமும் நடப்பிவிச்சுக் கொண்டோம். பூமியாகாசம் சந்திராதித்தருள்ள வரையில் நடப்பிவிச்சுக் கொண்டு வரவும்.

காங்கய நாடு புரளந்த குலத்தில் இம்முடி சுந்தர காங்கய மன்றாடியார். பயிரகுலத்தில் விசுவச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார். செங்கண்ணர் குலத்தில் சிதம்பரப் பல்லவராயக்

1. ஒன்று குறைகிறது.
2. கொங்கு 24 நாட்டாரும் நாலு பட்டமும் கூடி நாட்டி வைத்த நாட்டுக்கல் சாசனம்.

கவுண்டர் பூந்துறை நாடு காடை குலத்தில் நல்லதம்பி வாரண வாசிக்கவுண்டர். ஆண்டாக்கவுண்டர். பயிரகுலத்தில் விசுவராயக் கவுண்டர் புறவுடைராயக் கவுண்டர். சாத்தந்த குலத்தில் காலிங்க ராயக் கவுண்டர், பெரியண கவுண்டர், உலகுடையார், ராசாக் கவுண்டர், கண்ண குலத்தில் நல்லதம்பிக் கவுண்டர், கூரை குலத்தில் வெங்கிட்டராயக் கவுண்டர். பனங்காடர் குலத்தில் அவினாசிக் கவுண்டர், ஆண்டா நல்லய கவுண்டர், கீழ்க் கரைப் பூந்துறை நாட்டில், மோரூருக் கண்ண குலத்தில் கண்ணப்ப மன்றாடியார் தண்டிய வேலப்ப கவுண்டர். பொருள் தந்த குலத்தில் பெருமா காங்கய கவுண்டர். தென் கரைநாடு பெரிய குலத்தில் அவனாசி வேணாவுடையார். பூச குலத்தில் வாதுரு தொண்டமாக் கவுண்டர் வசிய குலத்தில் கொங்கச் செட்டிகளில் லட்சும நாராயண செட்டியார் ஆறநாடு மணிய குலத்தில் மசக்காளி வேல கவுண்டர். பொன்கலூர்க்கா நாடு பொன்ன குலத்தில் பெரியண கவுண்டர், முத்து நல்லாக் கவுண்டர். ஒதாள குலத்தில் சேனைவள மன்றாடி யார் ரகுநாதக் கவுண்டர், கரியமணிக்கவுண்டர். அரையநாடு கூரை குலத்தில் முத்துச்சாமிக் கவுண்டர், முத்துப் பெரியண கவுண்டர். காஞ்சிக் கோவில்நாடு செம்ப குலத்தில் சின்னார வேல கவுண்டர், கண்ணர் குலத்தில் ராவுத்த நல்லாக் கவுண்டர். குறுப்ப நாடு ஈஞ்ச குலத்தில் ரகுநாத கவுண்டர் உளவடை தென்குறுப்பை வீரசோழ புரநாடு பனங்காடர் குலத்தில் செங்கடி வாரண வாசிக்கவுண்டர். செவந்தி குலத்தில் தேவண கவுண்டர் வசிய குலத்தில் கொங்கச் செட்டிகளில் அவனாசி செட்டியார். ராசிபுரநாடு வேள் குறிச்சி ஏழு கரையில் விளிய குலத்தில் லட்சும தொண்டமாக் கவுண்டர் கூரை குலத்தில் ரங்கய கவுண்டர். இப்படி இருபத்தி நாலு நாட்டாரும் நாற்பத்தெண்ணாயிரங் கோத்திரத்தாரும் நாலு பட்டக்காரருங்கூடி ஒவ்வொருவர் கைஒப்பிதம் நாட்டி வய்த்து எழுதிக் கொடுத்த தாம்பிரசாசனப் பட்டயம்.

இதுக்கு விகாதம் பண்ணாமல் நடப்பித்த பேர்கள், புத்திர புத்திரபாரம்பரியமாய்ச் சந்திராதித்தருள்ள வரையில், சாலோக சாமீப சாரூப சாயுச்சியாத முண்டாகி, திருச்செங்கோட்டு அர்த்த நாரீஸ்வரசுவாமியார் சிவ தீர்த்தத்தில் மூழ்கின பலனும், பஞ்ச வர்ணத் தெரிசனஞ் செய்த பலனும், சண்முக தீர்த்தத்தில் மூழ்கின பலனும், கார்த்திகை நட்சத்திரத்தில் சுப்பிரமண்ணிய சுவாமியார் சேவித்த பலனும், காசிக்குப் போய் விசாலட்சியம்மனையும் விசுவ நாதரையும் சேவித்த பலனும், காசி தீர்த்தங்கொண்டுபோய் இராம நாத சுவாமிக்கு அபிஷேகம் பண்ணின பலனும் சிதம்பரத்துக்குப் போய் சிவகாமியம்மனையும் மார்கழி மாதம் திருமஞ்சனத்தைச் சேவித்த பலனும், காஞ்சிபுரத்திற்குப் போய் காமாட்சியம்மனையும்

ஏகாம்பர நாதரையும் நாலாந் திருநாளில் ரிஷப வாகனக் காட்சியைத் தெரிசித்த பலனும் மதுரைக்குப் போய் மீனாட்சியம்மனையும் சொக்கநாத சுவாமியையும் ஆவணி மூலத்திருநாளில் சேவித்த பலனும், அஷ்டைசுவரியமும் சம்பன்னருமாய் ஆகுவோராகவும். இந்தத் தர்மத்தை அநீதம் பண்ணியழித்த பேர்கள் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவார்கள். மாதா பிதாவைக் கொன்ற தோஷத்திலே போவார்கள். குருவை நிந்தித்த தோசத்திலே போகவும், சிவத்தலங்களிலே சிவாலயங்களை இடித்த தோசத்திலே போவார். இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணி நடப்பிவித்த பேர்கள் அநேகம் புத்திரர் பௌத்திரராய் அசுவமேதயாகம் பெறுவார்கள்.

இந்தப் பட்டயம் எழுதினது மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோவிலில் எழுதினது. எழுதினவர் சிலிப்பை ஆசாரி. அர்த்த நாரீசுவரர் ரட்சிக்கவும். சென்னிமலை யாண்டவர் ரட்சிக்கவும். கரியபெருமாள் லட்சிக்கவும். மதுக்கரைச் செல்லாண்டியம்மன் லட்சிக்கவும் குருவே துணை. சிவமயம் ராமசெயம்.

(இப்பட்டயம் புதுப்பை செல்லப்ப வாத்தியார் வீட்டு ஏட்டுப்பிரதி)

அறுகமணம் எடுக்கும்போது சீர்க்காரர் சொல்வது

'திங்கட்குடையுடைய சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக்கு அறுகிட வந்து நின்றார் மணப்பந்தலிலே
சங்கொக்க வெண் குருத்தீன்று பச்சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண் சிவந்து
பங்குக்கு மூன்றுபழம் தரவேண்டும் பாரப்பனம் துண்டமே

மாப்பிள்ளைக்கு

ஆயன்பதியில் அரன்பதிவந்து உற்ற அழக
மாயன் ஊதுங் கருவியானாலும் தூயமணிக்
குன்றுபோல் வீற்றிருக்கும் குவிமுலையாள் தன்னுடனே
இன்றுபோல் என்றும் இரு.

மணப்பெண்ணுக்கு

கணவனே தெய்வம் கருத்ததனில் வைப்பாய்
குணமலி தார்க் குழலி மாதே குணம் உடைய
காந்தன் மகிழக் கலந்துவிளையாடத் திரு
வேந்தர் எடுத்தார் அறுகு.

கொங்கு வேளாளர் திருமணத்தில் நாவிதன் கூறும் மங்கல வாழ்த்து

நல்ல கணபதியை நான்காலமே தொழுதால்
அல்லல் வினையெல்லாம் அகலுமேல் சொல்லரிய
தும்பிக் கையானை தொழுதால் வினைதீர்க்கும்
நம்பிக் கைகொண்டு எல்லோர் வினாயகரே.

அலைகடல் அமிர்தம் ஆரிலும் பெரியோர்
கந்தர் இந்திரர் கருவாய் முகத்திடு
சந்திர சூரியர் தானவர் வானவர்
முந்திய தேவர் மூவர் காத்திட
காய்த்தினைக் கழித்து கல்யாணம் தனக்கென்று
நல்ல கல்யாணம் நடந்திடும் சீரு
தப்பிதம் வராமல் சரஸ்வதி சரணம்,
பேழை வயிறனை குறித்திடு நேரம்
வேழ முகவனை விரும்படி முகவனை
அடியான் சோதினை அவனியோர் குறித்து
கடிதாய் வந்து கருத்திலே வந்து
நினைத்தது எல்லாம் நீயே முடித்து
மனத்தயர்வு போக்கி மதியது சரணம்.
கிரேதா திரேதா துவாபர கலியுகம்
சேரன் ஒருவன் சோழன் ஒருவன்
பார மாமுடிப் பாண்டியன் ஒருவன்
இவர்கள் மூவரும் இராஜாக்கள் இராஜியம்,
ஆண்டு வாழ்த்திடும் திதிபக அதிபக
சிறந்து மானிட வாழ்வது சுற்றம்
வாழ்வது பொருந்தி இந்திரன் தன்னை
இனிதென்ற நாளில் பக்குவமாக பருவம்கண்டு
வேதியன் பக்கம் விரைவுடன் சென்று
ஜோதி கழித்து ஜோதிடம் கேட்டு
இந்த மாப்பிள்ளை பேர்தனைப் பேசி,
இந்தப் பெண்ணைப் பேர்தனைக் குறித்து,
இருவர் பேரையும் ராசியும் கேட்டு
கைத்தாள் உடைய கயிற்றுப் பொருத்தம்
உண்டு என்றுசொல்லி ஒன்பது பொருத்தம்
உத்திரத் துடனே தட்சணை கேட்டு
மச்சன் ஊருக்கு சென்டை நடந்து
சிலபேர் உடனே உரியார் வந்து
உன் மகளுக்கு என்று சொல்லி
பிடிதனை வெற்றிலை பிடிதனைப் பிடித்து,
மடிதனில் கட்டி நாளது குறித்து
நல்ல விருந்துண்டு வாழ்வது மன்னவரை.
மகமக மகிழ்ந்து தக்கோர் புகழோர்
கணக்கரை அழைத்து சேர்ந்து அடியோலை
திருந்த எழுதி திசைதிசை யெங்கும்
தென்னவரை அழைத்து வாழை கமுகு

மகமே ருடனே சூழ விளைந்து
தோரணம் கட்டி மூத்தோர் வந்து
மெழுக துவளித்து பார்த்த இடமெங்கும்
பாலது தெளித்து பண்டு பாறு
பெரிய கலம்தன்னை கொண்டு வந்து
குடம் உடன்விளக்கி நேரிய சம்பா
அரிசியை நிறைத்து பாரிய வெல்லம்
பாக்கு வெற்றிலை சீருடன் நெய்யும்
தேங்காய்ப் பழங்கள் வாரியே வைத்து
வரிசை குறையாமல் முக்காலிமேல் வைத்து
குணம் பொருந்திய குடிமகனை அழைத்து
மூளரி மைத்திட முகமது துடைத்து
கிளரி மைத்திட காப்பதும் கட்டி
ஏழு தீர்த்தம் இசைந்திட நீரும்
மேளம் உடனே விளாவியே வார்த்து
சின்னச் சோற்றை சீர்க்காரர் கழித்து,
அன்னம் முப்பழம் ஆவின் பாலுடனே
வந்த வருடனே வாசலைக் கிளறி,
சாணாங்கி கொண்டு தரைதனை மெழுகி
கணபதி தன்னைக் கருத்துடன் வைத்து,
அறுகது சூடி குழவிக்குக் கங்கணம்
குணமுடன் தரித்து குப்பாரி கொட்டி,
குலத் தேவதையைத் தான் அழைத்து,
செப்பமுடன் மன்னவர்க்குத் திருநீற்றுக் காப்பணிந்து
கொத்தரளி கொடியரளி கோத்தெடுத்த நல்லரளி
முல்லை இருவாட்சி முனைமுறியாச் சண்பகப்பூ
நாறும் கொழுந்து நந்தியா வட்டம்
வேறும் கொழுந்து வில்லக்காய் பத்தினி
தண்டமாலை கொண்டைமாலை அழகுடன் பூண்டு,
சாந்து சந்தனம் தான்படி நீரளந்து
சேர்ந்திடு குங்குமம் சிறப்புடன் பூசி
திட்ட முடன் போழை தன்னில்
சோறுநிறை நாழிவைத்து செஞ்சோறு அஞ்சடை
தட்டிகள் வைத்து சுற்றி எறிந்து
திட்டி கழித்து சிவசூரியனைக் கைமுனைந்து
அட்டியங்கள் செய்யாமல் அழகுமனைக்கு வந்து
நற்கரும்பு நாட்டி நல்லமுகூர்த்த மிட்டு
பேய்க்கரும்பு நாட்டி பெற மண்ணுப்போட்டு
சாலும் கரகமும் சந்திரன் முன்னாக

ஆயிரம் பெருந்திரி அதுவும் வலமாக
சுத்தமுடன் கலம்விளக்கி சோறரிசி பால்பழம்
பத்தியோர் அத்தனைக்கும் பாரித்த மணவறையை
மணவறையை அலங்கரித்து மன்னவரைத் தானிருத்தி
இணையோங்கும் தங்கையரை ஏந்திழையைத்
தானழைத்து

சந்தனம் புனுகு சவ்வாதும் பூசி
மந்தாரை மல்லிகை மரிக்கொழுந்து மாலையிட்டு
கூறை முடித்துவைத்து குணமுள்ள தங்கையர்
போழை முடிதான்சுமந்து பிறந்தவரைச் சுற்றிவந்து
முன்னை ஒருதரம் வினாயகருக்கு இணைஓங்கி
பின்னை ஒருதரம் பிறந்தவருக்கு இணைஓங்கி
இணைச் சீர்தன்னை ஏர்வையுடன் முடித்து
செல்வ வினாயகர்க்குத் தேங்காய் மூர்த்தமிட்டு
சந்திர சூரியர் சபையோர் தானறிய
இந்திரனார் தங்கச்சி இணையோங்கி நின்றபின்பு
பாங்காகக் கைமுகைந்து பாரிசெய் போகிறோமென்று
போதவே பால்கொடுத்து போஜனங்கள் தானருந்தி
தாயாருடைய பாதம் தலைபணிந்து தண்டனிட்டு
போய்வா மகனேயென்று புத்திரனார் மனம்மகிழ
அடியுமென்றார் பேரிகை அஷ்டதிக்கும்
தான் முழங்க

அண்ணன் ஆனவர் ஆனையின் மேல்வர
தகப்பன் ஆனவர் இரதத்தின் மேல்வர
ஆனைகதி வீதி அழகுள்ள மாப்பிள்ளை
சேனைகதி வீதி சிறந்து முன்னடக்க
ஆகாச வானம் அதிர முழங்கிவரும்
சூரிய வாணம் துவண்டாடி வீசிவரும்
மாப்பிள்ளைக்கு மைத்துனர் வாவாஎன்று தானழைத்து
வெகுஜனத் துடனே விடுதியில் போயிறங்கி
நாழியரிசிக் கூடை நன்றாக முன்னனுப்பி
பொட்டிகளும் போழைகளும் பொன்னுகளும் சீப்புகளும்
பட்டுமணி நகையும் பாக்கியமோர் மாங்கல்யம்
திட்டமுடன்மங்கையர்க்கு திருப்பூட்டப்
போகிறோமென்று

அன்ன நடையார்கள் அருமைபெற்ற பெரியோர்கள்
பொன்னுவளைக் கையதனாலே போழைமுடிதான் ஏந்தி
இன்னும் சிறுசீர் ஏந்திழையோர் சூழ்ந்துவர
நாட்டில் உள்ளசீர்சிறப்பு நாங்கள் கொண்டுவந்தோ
மென்று

கொண்டுவந்து உள்புகுந்தார் கொம்பனையர்
மாளிகையார்
கொண்டுவந்த பொன்முடிப்பை கொடுத்துச் செலுத்து
மென்றார்

கன்னியர் எல்லவரும் கண்டு மனமகிழ்ந்து
பொன்பூட்ட வந்தவர்க்கு பூதக்கலம் தானனுப்பி
செங்கையினாலே செகப் பிட்ட இருவரும்
சாப்பிட்டுப் பசியாறி சந்தோஷம் ஆகி
ஆம்எங்கள் பெண்ணை அலங்கரித்து குலம்கோதி
மாமன்எடுத்து மணவாளன் பக்கம் வைத்து
ஊட்டுமென்றார் சாதம் உடுத்துமென்றார் பட்டாடை
பூட்டுமென்றார்பொன்னெடுத்து பெண்ணுத்
திருக்கழுத்தில்
ஆரமணிவார்கள் அழகுரத்தின ஜோதி மின்ன
மாணிக்கம்போல் மாங்கல்யம்வைடூரியம்போல் திருப்பூட்டி
கலம்பெரிய அரிசிதன்னில் கைகோர்த்து முன்னிருத்தி
சிங்காரமான தெய்வச் சபைதனிலே கங்கா குலம்விளங்க
கம்பர்சொன்ன வாக்கியங்கள் மங்களமும் கன்னிசொல்ல
வாத்தியம்எல்லாம் அதிர்ந்துமுழங்க மறையோர்கள்
வேதம்சொல்ல
வாத்தியங்கள் தான்அடங்க பந்தல் கிளரி
பாக்கிலைவழங்கி மேகமஞ்சள் மிஞ்சிகள் பூத்தி
பாகமஞ்சள் பந்தங்கள் பிடித்திட ஆடுவான் பாடுவான்
ஆலாத்திக்குட் படுவான் தேடிவந்து கைமுகைந்து
சிவா என்ற பேர்களுக்கு மாமனூர் கொடுக்கும்
கேளுமென்று
கட்டுமாடு கவலைப்பசு கட்டுக்கிடாரி பிரிவைகள் ஆடு
மாப்பிளை ஊர்காணி ஆட்சிக்கு வட்டகலம் செம்புடனே
குதிரையோர் பல்லாக்கு குறையாத செல்வமும்
எல்லாச்சீரும்
ஏர்வையாய்க் கொடுத்தும் கைக்கு நீர்வார்த்து
அம்மி மிதித்து அருந்ததியைத் தான் பார்த்து
ஆல்போல் கிளைகிளைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போல் கிளைகிளைத்து முசியாமல் வாழ்ந்திருக்க!
செல்வம் செழித்திருக்க! தீர்க்காயுளாய் வாழ்ந்திருக்க!
பார்த்த ஜனம்அத்தனை பாக்கியம் பெற்றிருக்க!
இருந்த பெரியோர்களெல்லாம் இனியதுபோல்
வாழ்ந்திருக்க!

நன்றி:—தமிழியல் : 6

சென்மப் புலவன்

1. கிடைத்த இடம்

கொங்கு 24 நாடுகளில் ஒன்று வாழ வந்தி நாடு ஆகும். வாழவந்தி நாட்டைச் சேர்ந்த வேட்கோவரில், ஒரு பூசாரியின் தலைமையில் இயங்கும் குடிகள் நாமக்கல்லில் உள்ளன. அவர் களின் கோவில் வீட்டில் ஒரு செப்புப் பட்டயம் உள்ளது. அதன் தலைப்பில் சாமி படங்கள் கீரப்பட்டுள்ளன அதன் இரண்டு பக்கமும் எழுதப்பட்டுள்ளன.

2, படித்தவர்

பட்டயத்தின் எழுத்துக்கள் நன்றாகப் படிக்கும் வகையில் திருந்திய நிலையில் உள்ளன. இப்பட்டயத்தைப் படித்து எழுதி உதவியவர் நாமக்கல், இராசன் B.Com., ஆவர்.

3. காலம்

விசய நகர மன்னர்களின் அதிகாரம் பெற்ற இராயர் காலத்தில் முதல் படி எழுதப்பட்டிருக்கலாம். இப்போது கிடைத் துள்ளது பின்னர் எழுதப்பட்ட நகலாக இருக்கலாம்.

கலியுக சகாப்தம் 4230 க்கு மேல் சவும்ய வருடம், ஆவணி மாதம் 15 தேதி எனக் குறிப்பு வருகின்றது. இதற்கு நேரான ஆங்கில ஆண்டு கி.பி. 1129. இது சவும்ய ஆண்டாக இருக்கின்றது. எனினும் அதே காலத்தில் எழுத்து வடிவம் பெற்றதாகக் கருத முடியவில்லை. ஆங்கிலேயர் வருகைக்குமுன், அதாவது சுமார் 300 ஆண்டுகட்கு முன்பு முதன் முதலில் எழுதப்பட்டிருக்சலாம்.

4. மொழி

இடைக்காலத்தில் வழங்கிய மணிப்பிர வாளத்திற்கு முந்திய வடிவமாகக் கொள்ளலாம். பிழை மலிந்துள்ள போதிலும்,

உருமாற்றம் எளிதில் புலனாகின்றது. மூல வடிவம் தெளிவாக உணர முடிகின்றது.

5. பட்டயச் செய்தி

சென்மப் புலவன் என்பவன் வாழவந்தி நாட்டைச் சேர்ந்த புகழ்மிகு வேட்கோவன். மோடி வித்தைகள் செய்வதில் வல்லவன். சிதம்பரத்திலிருந்து இரண்டு கூத்தாடிகள் வாழவந்தி வருகின்றனர். சென்மப் புலவனிடம் தன் கை வரிசையைக் காட்டித் தோற்றுப் போகின்றனர். சென்மப் புலவன் தன் திறமையைக் காட்டுகிறான். ஊரார் அவன் திறத்தை மெச்சிப் பரிசுகள் வழங்கி நிலக்கொடை அளிக்கின்றனர்.

பின்னொரு காலத்தில் பவானி கூடுதுறையில் கூடுகின்ற 24 நாட்டு வேட்கோவரும், சென்மப்புலவன் வழிவந்த வாழவந்தி நாட்டாரைப் போற்றித் தம் திருமணத்தில் புலவோந்திரம் சொல்வதற்கு ஏற்றுக்கொள்கின்றனர் அதற்கான கட்டணங்களை நிர்ணயித்துக் கொள்கின்றனர்.

6. சில குறிப்புகள்

1. பட்டயம் எழுதிய காலத்தில் வழங்கியது 'கெண்டிறாயர் பணம்' ஆகும்.

2. வேட்கோவர், குயவர் என்று அழைக்கப்படாமல் திருநீலகண்டர் என்றே சொல்லப்படுகின்றனர். 64 நாயன் மார்களில் இரண்டாவதாக வைத்து எண்ணப்படுபவர் திருநீலகண்ட நாயனாராவர். குயவர் குடியில்பிறந்தவர்.

3. பிரபுட தேவராயர், திருமலை நாயக்கர், அவர்களின் காரியக்காரர் றாமசெந்தற நாயக்கர் (இராமச்சந்திர நாயக்கர்) காலத்தில் எழுதப்பட்டது.

4. வாழவந்தி நாட்டின் எல்லை விபரம் இறுதியில் சேர்க்கப் பட்டுள்ளது. வாழவந்தி, கூடச்சேரி, பில்லூர், நாமக்கல், சீரம்பூர், மனப்பள்ளி, பிருந்தகம், நடுவலூர், கோதூர், மோகனூர், ஆரியூர், தோலூர், சாத்தம்பூர், பிள்ளைக்கலத்தூர், கோனூர், வள்ளியூர், திண்ட மங்கலம், நடந்தை, மேலச் சாத்தம்பூர், இவை அனைத்தும் வாழவந்தி நாட்டைச் சேர்ந்த கிராமங்கள்.

5. கொங்கு நாட்டின், பல்வேறு நாடு ஊர்களிலிருந்து வந்து சேர்ந்து ஒப்பமிட்ட வேட்கோவரின் பெயர்கள் உள்ளன.

7. பட்டயத்தின் மூல பாடம்

பட்டயத்தியன் முதல் பத்தி, விசய நகர மன்னர் காலத்து மெய்க்கீர்த்தி ஆகும். மெய்யான செய்திகள் எதுவுமில்லை என்பதே உண்மை.

சென்மப் புலவன் பூர்வோத்திரம் எழுதிய நாள் : கலி 4230 சவும்ய, ஆவணி, 15 தேதி. (கி.பி. 1129) ஆண்டு பொருந்தி வருகின்றது.

சென்மப்புலவன் பற்றிய புகழ் சற்று மிகையாகத் தோன்றினாலும், அவன் திறமை மிக்கவன் என்பதில் ஐயமில்லை, உண்மையெனக் கொள்ளாவிடினும் அக்காலக் கதையாகக் கொள்ளலாம் பட்டயத்தில் உள்ள வாசகங்களின் திருந்திய வடிவம் சில வருமாறு.

வறாயக் கவுண்டன், பொத்திய சேர்வைக்காரன், சாமிநாதப் பிள்ளை, மற்றும் ஊர்க்குடி மக்கள் (பன்னிரு வகைத்தொழிலாளர்) கூடியிருக்கும் போது, மோடி வித்தை தெரிந்த கூத்தாடிகள் இரண்டு பேர், சிதம்பரத்திலிருந்து வாழவந்திக்கு. வித்தையாட வந்தனர். செங்கல் சாவடியில் தங்கினார்கள் 'எங்கள் வாழவந்தி நாட்டில் செம்மோடி சித்தன் சென்மப் புலவன், அவனோடு ஆடுக' என்றனர் 'மக்கள் என்ன இனம்' எனக் கேட்க, 'திருநீலகண்டர்' என்று பதிலுரைத்தனர். 'சமயல் பண்ண நவபாண்டம் தரட்டு' மென எகத்தாளம் பேசுகின்றனர். அவன் திறம் அறிந்து வரச் சென்றனர்.

அப்போது சென்மப் புலவன் பானை தட்டிக்கொண்டிருந்தான் (பானையின் உட்புறம் இடது கையால் கருங்கல்லைப் பிடித்துக் கொண்டு, வலது கையில் ஒரு தட்டுப் பலகையால், பானையை அடித்து மூடுவது வழக்கம்).

கூத்தாடிகள் 'மனைகின்ற கல்லும், சென்மப் புலவனின் ஆசனப் பகுதியும் ஒட்டிக் கொள்ள வேண்டுமென' வித்தை செய் கின்றனர்.

சென்மப் புலவன். இதனை அறிந்து ஆங்காரமிடவே அவை விலகிச் சென்று விழுகின்றன.

- வந்தவர்கள் பந்தல் காலோடு சேர்ந்து நின்றனர். தன் மோடித் திறத்தால், அங்கேயே அவர்களைக் கட்டி விடுகிறான். அவர்களால் விலக முடியவில்லை; விடுவித்துக்கொள்ள முடிய வில்லை. தோல்வியை ஒப்புகின்றனர்.

சென்மப் புலவன் ஊராரறியத் தம் திறமையைக் காட்டுவதற் காக 'வயிரவன்' என்ற பெயருடைய தன் நாயை இழுத்துக் கொண்டு, சிங்காரப் பாறைக்குச் செல்கிறான். அங்கு ஒரு முயலைப் பிடித்து, அதன் மூலம் செய்தி அனுப்ப, ஊரார் வந்து பார்க்கின்றனர்.

தனது நாய், வைரவனை, 60 மார் சங்கிலியை முழுங்கச் செய்கிறான். அதன் ஆசனவாய் வழியே அச்சங்கிலியை உறுவி எடுத்துக் காட்டுகிறான். பின்னர் ஒரு இரும்புக் கடப்பாரையை முழுங்க வைத்து ஆசனவாய் வழியே வெளியே எடுக்கிறான்.

தனது நாவின்மேல் ஊசியை நிறுத்தி அதன்மேல் கலப்பையை நிறுத்திக்கொண்டு, நான்கு வீதியும் சுற்றிக்கொண்டு ஆடி வருகிறான்.

இரண்டு முறம் எடுத்து இரண்டு கைகளிலும் இறக்கைபோலக் கட்டிக்கொண்டு, பறந்து காட்டுகிறான். கீழே இறங்கும்போது தரையில் இறங்காமல் குளத்தில் இறங்குகிறான். (பாதுகாப்பிற் காக இருக்கலாம்.)

இந்த வித்தைகளையெல்லாம் பார்த்து ரசித்த, ராசாக்கள், துரைகள், கவுண்டர்கள், மணியகாரர்கள் மகிழ்ந்து பத்து மா நஞ்சை நிலமும், பதினைந்து வள்ளம் புஞ்சைக் காடும் பரிசாக அளித்து நகர்வலம் அழைத்து வருகின்றார், பறந்து இறங்கிய குளத்திற்குச் சித்தன் குளம் எனப் பேரிட்டனர்.

அதற்குப் பிறகு 24 நாடு, 3 பட்டத்தைச் சேர்ந்த மக்கள் கூடி எங்கள் சாதியில் "புலவாந்திரம்" நடத்த வேண்டுமென்று கேட்கின்றனர். (புலவாந்திரம் என்னவென்று தெரியவில்லை, தெரிந்தோர் எழுதுக) புலவாந்திரம் பின்கண்டவாறு நிர்ணயிக்கப் பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வருசம் ஒன்றுக்கு ஒரு கெண்டிறாயர் பணம் 1; திருமணத்தில் மாப்பிள்ளை வீட்டிற்கு 2 பணம் 120 பாக்கு. பெண் வீட்டிற்கு 2 பணம், 120 பாக்கு.

பின்னர் சென்மப்புலவன் தனது உறவின் முறையாருக்கு விருந்து வைத்து, துப்பட்டியும் பாக்கு வெற்றிலையும் பரிசாக அளித்து அனுப்பி வைக்கிறான்.

சென்மப் புலவன் வழியில் மூன்று பிள்ளைகள். மூத்தவனுக்குப் புலவாந்திரம் சொல்லும் உரிமை; நடுவலவன் கூடச்சேரியானுக்கு தோலூர் நாச்சிமார் கோயில் பூசை உரிமை, கடைசியான், ஊருக்கு மனைச்சல் வேலை செய்து பிழைக்கும் உரிமை என ஒப்புக் கொள்ளப்படுகிறது.

புலவாந்திரம் என்றால், ஊரார் வீட்டு நல்ல விழாக்களில் வாழ்த்துப் பாடி பரிசுகள் பெறுவதாகும் என்று தோன்றுகிறது. கொங்குப் புலவர் பட்டயமும் இதே போன்ற செய்தியைத் தான் சொல்லுகின்றது.

இனி ஒரு 700 ஆண்டு காலத்தைக் கடந்து வந்தால், இப் பட்டயத்தை எழுதிய காலம். பவானி கூடலில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பழைய கதையை நினைவு கூர்ந்து எழுதிவைத்துக் கொள்கின்றனர். அதில் கலந்து கொண்ட வேட்கோவர் அனைவரின் நாடும், ஊரும் உள்ளன.

8. பயன்பாடு

இப்பட்டயத்தில் வரும் சென்மப் புலவன் செய்தியை, ஒரு சிறுகதை என்றபடி எடுத்துக் கொள்ளலாம். இறக்கை கட்டிக் கொண்டு பறந்து பார்க்கின்ற முயற்சி அவ்வப்போது தமிழகத்தில் இருந்துள்ளது தெரிகின்றது, பறந்தபின் இறங்குவதற்கு குளத்தை தேர்ந்தெடுத்துள்ளது, அவர்களின் புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறது.

திருமண காலங்களிலும், பொதுவாகவும் வாழ்த்துப் பாக்கள் சொல்ல (புலவாந்தரம்) ஏற்பாடு செய்து கொண்டமை தெரிகின்றது.

அக்கால நாட்டுப்பிரிவினை, பெயர்கள், பல அரிய சொற்கள், நல்ல தமிழ்ச்சொற்களின் உருமாறும்பண்பு முதலியன ஆராய்வதற்குரியன.

9. கருத்துக்கள்

இப்பட்டயத்தின் செய்திகளை ஆராயும்போது புதிய கருத்துக்கள் தோன்றினால் எழுதி அனுப்புக.

வாழவந்தி நாட்டுச் சென்மப்புலவன் பட்டயம்

சுபாரீயீசுபரி அம்மன், மகாமண்ட லேசுபறன் அரியறாய தல விபாடன், பாசக்கி, தப்பு வறாத கண்டன், கண்ட நாடு கொண்டு, கொண்ட நாடு குடாத கண்டன். யம்மண்டலம் திரை கொண்ட ருளிய யிறாசாதிறாசன், றாச பறமேசுபரன், றாசமார்த்தண்டன், றாச கெம்பிறன், றாச புயங்கறன் றாச வசீகரன், றாசபிருதாபகன் றாச வல்லவன் பறறாச சர்ப்ப கருடன். பானுதிமிறாச சூரியன், பாதாழ விபாட பயங்கறன், பறறாச ரூமன், பறமண்டலாதீப கண்டன், றன் நிர்க்கிற கன்னியன், றண பத்திறகாழி, சகாயன் மனின்டன வைறவ காரிய துறந்தறன், துஷ்ட நீக்கிறக சிஷ்டி பரிபாலகன், துண்டறண்ட கண்டன், துலுக்கர் மோகம் தவிழ்த் தான், ஒட்டிய துலுக்கரை வோட வென்றவன், ஒட்டிய தழவி பாடன், சீனகர், தெலுங்கர், சாவகர், மகதர், மாழுவர், மறாட்டி யர், வொட்டியார், அவணர், சோனகர், ஆரியர், குச்சலர், கூபகர், களிங்கர், சிங்களர், வங்களர், கன்னடர், கொங்கனர், கௌசலர், துலுவா, துலுகர், பாஞ்சாலர், கெவுடர், கொங்கர், குனுகர், சேறன், சோழன், பாண்டியன், யீழகர், பீமாங்குசகன்ணோசியர் யிது முதலான தேசத்தின் பதினென் பூமியிலுள்ள பேர்களும் வந்து அஞ்சலி கொண்டு சேவிக்கும் நறனாறாயணமூர்த்தி, நறலோக கண்டன், நறலோக சூரியன், சேறன், சோழன், பாண்டியன், வழ்ழாழறாயன், யீழமும், கலிங்கமும், திரைகொண்டு வேட்டியாடி கண்டருளியர், பயப்படாத மகுட மந்தாதி பறாக்கிறம தாஷ்டிகன் சிங்காசன், அதிபதியாகி, உத்திற, தெக்கண, பூர்வ பச்சம்சத்த சமுத்திறாதிபன், சச்சமைய சார்ந்த சதுருபாயன், அதிபதி, திரி மூர்த்திக் குணாசல யதிரி, கால பருவகாரிய துறந்தறன், நிபுண ணாகிய பார்முலுதாலும் பரிதி கோத்திறன், பொரைக்கி தன்மனை போலவும் நெரிக்கி அரிச்சந்திரனைப் போலவும், சிலைக்கி விசய னைப் போலவும் வாள்வுக்கு குபேறனைப் போலவும், வடிவுக்கு அனங்கனைப் போலவும் புகழுக்கு விக்கிரமாதித்தனைப் போலவும், போகத்தில் மேகவாகனைப் போலவும், குடைக்கி கற்நனைப்

போலவும், நீதியிர் கிருஷ்ட்ணறாயரைப் போலவும், வுத்தம குணத்தன், ஒரு சொல் வாசகன், பத்திரக்காதன், பறாசுறாமன், யிப்படி பூலோதேவேந்திறநாகிய பிறவுடை தேவராயர், நிகளங்கறாயர், நீலகண்டறாயர், அச்சுதறாயர், றாமறாயர், றகுபதிறாயர், ஆணைகுந்திறாயர், மனுகிஷ்ணறாயர், விருப்பாச்சிறாயர், மல்லிகார்ச் சுனறாயர், வெங்கடபதிறாயர், சீரங்கறாயர், அய்யனவர்கள் தாயில்லாத பேர்க்கு தாயனவும் தந்தையில்லாத பேர்க்கு தந்தையனவும், அல்லவை யகர்த்தி நல்லவை நடத்தி, தேவதாயம் பிரம்மதாயம் மாடப்பிரம், அன்ன சத்திரம் யிப்படி னடத்தி, ஆரிலொன்ரு கடமை கொண்டு, பூலோக மெங்கும் ஒரு குடை நிலர்சீள் நிரித்தி திக்கு விசயம் செயிது, றாச்சிய பாரம் பன்னி யருழா நின்ற கலியுக சசார்த்தம் 4230 க்கு மேல் செல்லா நின்ற சவும்மிய வருஷம் ஆவணிமாசம் 15 தேதியில் மங்கலவாரம் சிங்கலக்கின பெர்த்த நாலில் பிறவுடை தேவறாயர் வர்களும் திருமலை நாயக்கர் றாசா அய்யறவர்கள் காரியத்திர்க்கு கர்த்தறான றாம செந்தற நாயக்கர் றாச அய்யனவர்கள் நாலின், திரு நீலகண்டன் சென்மப்புலவன் வாழவந்தியில் யெழுதின பூர்வோத்திறத்தின்விபறம்

யிற்றனாள் சென்மப்புலவன், கூடவறயாகவுண்டன், பொத்திய சேர்வகாரன் சுவநாத பிள்ளை தனக்கு குடியானவர்கள் சகலரும் பனிரண்டு கட்டு கல்லனை காசா வர்த்தகரும் யிருக்குர நாளில் சிதம்பரத்திலிருந்து கூத்தாடி மோடி வித்தைக்காரர் வாழவந்திக்கி வீத்தையாட வந்தார்கள். செங்கல் சாவிடியில் யிரங்கி நார்கள். மோடிவித்தை பாருங்கொலென்று கேட்டார்கள். கவுண்டகளும் குடிப்படை சகலமான பேரும் ஆடுரது நிருமென்ரு சொன்னூர்கள். நம்மிட வாழவந்தி நாட்டுகுல்லாக செம்மோடி சித்தன் சென்மம புலவன், அவனுட அப்பனே கொண்டு ஆடுங் கொலேன்ரு சொன்னூர்கள். அவர்கள் யென்னத்தாரென்று கேட்டார்கள். அவன் திருனீல கெண்டநென்று சொன்னார்கள். அப்படியாநால் சமயல் பண்ணுவதர்கு நவபாண்டம் வேநுமென்ரு சென்னார்கள். அவன் திறானி பார்த்துவற போநார்கள். அந்த வேலையில் பானை பனுகுறான். யிந்த மோடி வித்தைகாரர் அவனை பார்த்து 'மனையற கல்லும் அவன் சூத்தும் பொருதப் பார்த்தார்கள். திரும்பி பார்த்து ஆம்காரீ மிட்டு குலைவையிட்டான். சீலயும் கல்லும் வொரு பொதி க்ன் முண்டு பழய படிக்கி போயி விளுந்தது. யிந்த மோடி வித்தைகார் பந்தகாலோட சாந்திருந்தார். அவர்களை 'பின்கட்டுமாறி கட்டிநார் போலெ' பொருந்த பாத்தான். அவர்கள் பர்த்து விடுவிக்க முடியாமல் யெங்கள்மேலெ தப்பிதம் சரியென்று

சொனார்கள். அப்படியாகாது விருது வேண்டயம்டால் நிசார் குதிரை கொடை கீழெ வச்சதேயானால் நான் விடிவிச்சி விடுகு ரேறொன்று காரியகாரர், சேர்வைக்கார், வேர்விலிகார், முன்பாக சென்னான். அப்படிவுன்னுடைய சுருபத்தை அரியோம், யெங்கள் மேலெ தப்பிதம், சரியென்ரு பாதம் பனிந்து கொண்டார்கள். நீங்கள் போங்கலென்ரு சொல்லி அனிப்பிவெச்சு போட்டு தடி ரென்று யெளுந்திருந்து கருவைறவனை பிடித்து கொண்டு அது மேலெ அருவது மார் சங்கிலியை யெடுத்து முதுவிலை போட்டு கொண்டுபோய் சிங்கார பாரை மேலிருந்து கொண்டு முசலை தரிவிச்சி சீட்டெளுதி செம்மோடி சித்தன் வித்தை வறுகுரதென்டு சீட்டெகளுத்திவ கட்டி முசலையனுப்பி வச்சான். நாசர் சபைக்கி கொண்டு போயிற்றது. அதை வாசித்து பார்த்து யெதிர்கொண்டு வந்தார்கள். சென்ம்ம புலவன் பராக்குயென்ரு சொல்லி வைறவன் முந்நெ சங்கிலியெடுத்து முலுங்கென்று சொன்னான். அது மிளுங் கிச்சி. சூத்திலெ பிடிங்கி விட்டான் சுவாமி பறாக்குயென்ரு. கடப்பாரையெடுத்து முன்னெ போட்டான். ஆக்ருமாயன்ரு ஆம்கார் மிட்டான். மிலுங்கிச்சி. அதை சூத்திலெ பிடிங்கி விட்டான். சுவாமி பறாக்குயென்ரு யேல், கலப்பையேல் கருவை தடியேல் னுகம் யிதுவெல்லாம் வொன்னுமேலொன்னு நிருத்தி ஊசி முனையிலை நிரித்தி நாவின் மேலெ வச்சி நாலு வீதியும் சுத்தி ஆடி வந்தான். சுவாமி பறாக்குயென்ரு, றண்டுமுரம் கொண்டு வற சொல்லி, றண்டு தோளுலையும் கட்டி பரைவையாக பறந்து பறக்கும்போது தெய்வ பாழியில் வந்துனின்றான். றாசறாசாக்கள்' துறைகள் பார்த்து கவுண்டர்கள், மனியக்காரகள் சந்தோசப்பட்டு சித்தன் குளமென்று பேறுமிட்டு கல்வெட்டு போட்டு நஞ்செயில் பத்து, மானிலம், புஞ்சயில், பதனஞ்சிவள்ள, காடும் குடுத்து. மூலைக்கி மூலைக் கல்வெட்டும் போட்டு, சகல வெகுமானமும் பன்னி, னாலு வீதியும் ஊர் மெறமனையும் வந்து வாழவந்தி நாட்டுக்கு செம்மோடி சித்தன் சென்ம புலவனென்ரும் பேறுமிட்டு திருமலை னாயக்கன் காரிய துரந்தறான புன்னமுடனாதர், கும்சேர் பாதமரிய சிதேவியம்மன் அரிய தேவாதி தேவர்கள் அரிய நடப்பி வச்சு போட்டு பொனார்கள்.

யிப்படியிருக்கும் நாழயிலெ திருனீல கண்டர் யிருவத்தி னாலு னாட்டு வுரை முறையாரும் மூன்ரு பட்டமும றாயர் றாசாக்களுக்கு சந்திச்சி கொண்டு சென்ம புலவன் வுங்களுக்கு பிரபல மாய்யிருக்குறானே யெங்கள் சாதியில புலவாந்திரம் நடத்த வேனுமென்ரு கேட்டார்கள். அதன் பின் வுங்கள் சாதி = 24 = நாட்டு வுரை முறையும் அழப்பியென்று சொல்ல னல்ல தென்ரு சொல்லி அனவொரும் வந்து கூடி, றாயற்

வற்கலெ காணும் போது, றாயற் வுங்கலை நல்லது சொல்லி,திய்யது விலக்க, அலைத்தோமென்ரு சொல்ல அப்பொ வுரைவின் முறை யார் அனவோருமாய் கூடி சென்மம புலவன் வுங்களுக்கு பிரபலமா யிக்குருனே யெங்களுக்கு புலவாந்திரம் வேனுமென்ரு கேல்க்க அப்பொ அனவரும் சம்மதிச்சி புலவாந்திரம் வூட்டுக்கு வருசம் ஒனுக்கு கெண்டிறாயர் பனம் = L கலியாணத்திர்க்கு மாப்பிள்ளை வீட்டுக்கு பனம் = 2 பாக்கு = 120 பெண் வீட்டுக்கு பனம் 2 பாக்கு 120 நெட்டவேலய்யமும் யிந்தபடிக்கு பட்டயமும் வாழவந்தியில் யெழுதி கொடுத்து 24 நாட்டு வுரை முரை யாரும் மூன்று பட்டமும் சம்மதிச்சி பட்டயமும் யெழுதி கொடுத்த விபறம் அப்பொ சென்ம புலவன் 24 நாட்டு வுரை முறை மூன்று பட்டக் காறருக்கு விருந்திட்டு நாட்டுக்கு ஒரு துப்படியும் குடுது பாக்கு வெத்திலையும் குடுத்து யிருந்தான். யிந்த புலவாந் திரம் பிரபல்லியப் பன்னி வந்தால் வுத்திர கொத்திரமாய் வாள்ந் திருந்தார்கள். யிதுக்கு விகாதம் பன்னினாலும் நிந்தினை பன்னினாலும் கெங்க கோதாபுரி சிந்து னதியிலெ யேளு களும் பசுவை கொன்ற தோஷத்தில் போககடவேனாகவும். றாயர் றாசாக்கள் கவுண்டர்கள் அரிய நறசிங்க பெருமாளுக்கும் சீதேவியம் மனுக்கும் புனைமுடை யெல்லாம் அபிசெகட்டலை சென்னது 50 பொன்படி சிலவு விருந்து சிலவு அபிசெக பன்னினதும் நாட்டுக்கு பச்சடம் செலவும் மூன்ரு பட்டதுக்கும் யிதுவெல்லாம் 50 பொன் நாடு அரிய விபறம் செம்மோடி சித்தன் பிளைகள் மூன்று பேருக்கு யாகம் மூத்தவனுக்கு பொல வாந்திரம். நடுவலவன் கூடச் செரியானுக்கு தொலூர் நாச்சிமார் கோவில் பூசாரி, தன் யிலயவன் வூரமனைச்சல் பன்னுகுரவன் யிந்த மூன்ரு பேரும் வாழ வந்தி நாட்டிலெயிருந்த விபறம் ஒன்றுக்கொன்ரு தொறாமல் யிருந்தார்கள்.

24 நாட்டு வுறவின் முறையாப் பேர் தெங்கரை நாட்டு திருக்க வேலன், காங்கய நாடு சனி பெருமான், ஆரு னாட்டு றாயப்பன், குருப்பநாட்டு செம்மணன், பூந்துரை நாட்டு செட்டியன்னன், காவடிக்க நாட்டு வல்லியன்னன், நல்லூர்க்க நாட்டு நல்லணன், வய்யாபுரி நாட்டு சுக்கற மணியன், அண்ட நாட்டுகுமாரன், தலைய நாட்டு சிரை மீட்டான், தட்டய நாட்டு நஞ்சப்பன், மநனாட்டு காளியண்ணன், கிழங்கு நாட்டு வேலப்பன், வாரக்க நாட்டு காழியப்பன், வடகரை நாட்டு அரைச்சாலை, அரைய நாட்டு தீத்தான், காஞ்சிகோயில் நாட்டு வாரணவாசி, றாசீபுரம் நாட்டு செல்லப்பன், வெங்கல் நாட்டு பழனியப்பன், வாழவந்தி நட்டு வேலப்பன், பர்த்திபல்லி நாட்டு நல்லிசெட்டி புவானி நாட்டு குப்பன்னன், பங்கலூர் நாட்டு விருமன், வுடுவங்க,

நாட்டு காசியன்னன். யிதுகுல் அட்ச புள்ளிகார் திருச்சம்கோடு அர்த்தநாரி, மோரூர் மொதரி அன்னியூர் நசசி, சாமகுளம் பெரியன்ன. மருதகோயவ முத்தூர் பூலைவாடி வுருமன், குண்டிடம் வள்ளியன்னன், குயிலெநஞ்சன்னன்

யெட்டூரும் நம்மசாதி திருனீல கண்டர் நாட்டார் 32 கோத்திர மரியவும் குடுத்தது மேற்படி நாமக்கல் நரசிங்க பெருமாள் நாமகிரியம்மன் றச்சிக்கவும் மோகனூர் கொமறீசர் ரச்சிக்கவும் மனைப்பள்ளி சொக்காள் றச்சிக்கவும் வீரவத்தறாய பெருமாள் துணை சீதேவி யம்மன் துணை

வாழவந்தி நாட்டு யெல்லை விபரம்—வாழவந்தி—கூடச்சேரி—நாமக்கல் - கீரம்பூர்—மனப்பள்ளி—பிருந்தகம் — நருவலூர் — கோதூர் - முகவனூர்—ஆரியூர்—தொலூர் —சத்தம்பூர் — பிள்ளைகளதூர் கோணூர்—வள்ளிரம்—திண்ட மங்கலம்— நடந்தை—மேல சாத்தம்பூர்—ஆரியூர் நகரம் —யிது வாழவந்தி நாட்டுக்குச் செற்ந்தது.

பின் குறிப்பு :

வெள்ளோட்டுச் சாத்தந்தை காலிங்கராயன், வீரபாண்டியன் காலத்தவன். கி. பி. 1263 ஆம் ஆண்டு 56½ மைல் நீளமுள்ள காலிங்கராயன் கால்வாயை பாண்டியன் துணையுடனும், தன் குடும்பச் சொத்துக்களைக் கொண்டும் 'காளிங்கராய வினியோகம்' என்று விதித்த வரியைக் கொண்டும் வெட்டினான். (இப்பட்டயம் வீர பாண்டியனையே தவறாக உக்கிர குமாரபாண்டியன் என்று கூறுகிறது) 'வெற்றிமிகுத்த வீரபாண்டிய வேந்தமைச்சன் கற்ற அறிவினன் காலிங்கராயன்' என்பது தனிப்பாடல் பகுதி. கி. பி. 13 ஆம் நூற்றுண்டின் நிகழ்ச்சியை 400 ஆண்டுகள் கழித்து கி. பி 17 ஆம் நூற்றாண்டில் செவிவழிச் செய்தியாகக் கேள்விப்பட்டு எழுதி வைத்ததாக இப்பட்டயம் தோன்றுகிறது.

பட்டயத்தைப் போற்றிப் பாதுகாத்து அளித்தவர்
வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் ஆவர்.

காளிங்கராயன் அணைகட்டியது பட்டயம்

ஸ்ரீமது, சுபநமஸ்து, ஸ்ரீமன் மகாமண்டலீஸ்வரன், பாசைக்கி, தப்புவராத கண்டன், ஆரியதழவிபாடன், ஆரிய மோகந்தவிழ்த்தான், துலுக்கர் தழவிபாடன், துலுக்கர் மோகந்தவிர்த்தான் தொட்டிய தழவி பாடன், தொட்டிய மோகந்தவிழ்த்தான், ஒட்டிய தழவிபாடன், ஒட்டிய மோகந் தவிழ்த்தான், பலனாவுக் குறைவறாத மன்னன், கண்டநாடு கொண்டு கொண்டநாடு குடாத கண்டன், வினவிசை, கனவிசை, ஈழமும் ஆழமும் ஒரப்பான பட்டணமும் ரகுபதி, கெசபதி, அசுபதி, நரபதி நால்வகைப் படையோடுங் கூடி கெசவேட்டை கொண்டருளிய ராசாதி ராசன், ராசமார்த் தாண்டன், ராசகுல திலகன், ராசகெம்பீரன், நாடாளு நாயகன், ருடகுலதுங்கன், பூலோக தேவேந்திரன், ஆரணமுரையார், ஆறிலொன்று கடமைகொண்டு, ஆடுங்கடைமணி நாவசையாமல் அரசாளும், கரிகால்சோழன், மகாறாசாவய்யரவர்கள், யகமகிழ்ந்து கொடுக்கும், மக்கள் முறைமையும் தரிப்பான நன்மையும் பொருந்தியிருந்தி யிருந்தபடியினாலே பொன்னூஞ்சலும் பூந்தேரும், பூச்சக் கரக்குடையும் பெற்றருளிய கங்காகுல திலகன், காராள சிரோமணி, மேழிக் கொடியோன், மின் குவளை மாலிகை மார்பன் நாற்பத்தியெண்ணாயிரங் கோத்திரத்துக்கும் முதன்மையாயிருக்கும் கொங்கு தேசத்துக்குச் சேர்ந்த தென்கரை நாட்டு செட்டிவேணாவுடையான், நரையநாடு காசிப கோத்திரம் பிறாமணபிள்ளை பொங்கலூரு தெய்வசிகாமணி, பூந்துரை நாடு வாரணவாசி, வெள்ளோட்டுக் கனகபுரம், நஞ்சயன், ஆருநாட்டு மசக்காளி வேலணன்.

குருப்பை நாட்டு ரகுநாதணன், ஒடுவெங்கை நாடு முத்துவேலப்பன் நல்லூரந்தநாடு வாணவறாயன், வாரக்கநாடு பொங்கணன், காவு லிக்கநாடு உடையணன், எங்களைப் பத்துப் பேரையும் காங்கய நாட்டுச் சரவண காங்கயணன், பார்த்துச் சொன்ன வசனம்: கனக புரத்து நஞ்சயன் மகன் லிங்கயன் வானியாற்றில் அணைகட்ட வேணுமென்று நம்மையுந் தாவுதுரை பார்த்துவரச் சொல்லவேணு மென்று யீரோட்டுக்கு யெங்களை அழைத்துக் கொண்டுபோய் வானியில் நாவுதுரை அணைகட்டுகிறதுக்கு பார்த்தவிடத்தில்வெள் ளோட்டிலிருக்கும் *வெள்ளவேட்டுவன் பாளையக்காரன் யென்னு டைய எல்லையிலே தாவுதுரை பார்க்கிறதென்ன, அணைகட்டு கிறோ மென்று பேசுகிறதென்ன நீங்கள் அணைகட்டவேண்டா மென்று பிலந்துடனேமறித்தான்.

அதன்பிறகு நாங்கள் பத்துப்பேரும் ஈரோட்டுக்கு வந்து அதுக் குத்தக்கின சோமாசிகளை அனுப்பிவச்சு வெகு பிரதியுடனே சொல்ல கேளாதபடியினாலே இவனுடைய கெருவத்தையடக்கி அந்தத்தாவில் அணைகட்டாமல் விட்டுப் போரதில்லை யென்று பிரதிக்கினை செய்து அவையஸ்தங்குருந்து ரண்டு மூணுமாசவரைக் கும் அவனுடனே சண்டை செய்து யெங்களினாலே செயிக்கமாட் டாமல் எழைச்சுப்போயிருக்கும் வேளையிலே எண்ணைமங்கலம் பதியிலேயிருக்கும் காளியண்ணன், மதுரைக்குப்போய் சமஸ்தானம் ஆளப்பட்ட உக்கிர குமாரபாண்டிய ராசாசமுகத்துக்குப் போயி வெகுமதியும் கட்டக்கயரும் வெட்டவாளும் துஷ்ட சம்மாரமும் சிஷ்ட பரிபாலனமும் செய்துகொண்டு யிருக்கச் சொல்லி வரப்பிர சாதம் வாங்கிக்கொண்டு ஆனைமலை நாட்டு பாளையப்பட்டு செங்கோல் செலுத்திக்கொண்டிருக்கிற நாளையிலே நாங்கள் பத் துப்பேருங் கூடிக் காலிங்கராயனை ஆனைமலைக்கு அனுப்பிவிட்டு காளியணனை யீரோட்டுக்கு வரவழைத்து வெள்ளவேட்டுவன் விருத்தாந்தமெல்லாம் வழிவிபரமாய்ச் சொல்லி அவனைச் செயம் பண்ணி அந்த ஆற்றில் அணை கட்டுகிறபடிக்குச் செயிச்சுக் கொடுக்கவேணுமென்று மெத்தவும் பத்துபேருங்கூடி வெகுவிதத் திலே கேட்டுக்கொண்டதனாலே நல்லது என்று சம்மதிச்சு அந்த வெள்ளவேட்டுவன் யிருக்கும் வெள்ளோட்டுக்கு ஒ ஏருரவு கொண்டு போயி அவன் ஊடையத்தையுந் தகர்த்தி ஊரையுங் கொள்ளை பண்ணி சிறிது ரானுவங்களையும் வெட்டி அவன் தலையும் வெட் டிக்கொண்டுவந்து யெல்லோரும் காணத்தக்கநாயி வய்த்தபடி யினாலே நாங்களிருவத்திநாலு நாட்டாருங்கூடிச் செட்டிவர்த்தகங் கள் பலபட்டரைச் சாதிகளையும் வரவழைத்து நம்மசனங்கள்மேற்கு

*வெள்ளைவேட்டுவன்—காலிங்கராயன் கைபீது காண்க.

நல்லூர்க்க நாடு ஆனெமலை நாடு காவிலிக்க நாடு வாரக்க நாடு ஆரு நாடு, குருப்புநாடு, ஒடுவங்க நாடு யிந்த யேழு நாட்டிலையும் சிவாரத்தனஞ் செய்யவேண்டிய—நிமுத்தியமாக பரந்துபோயிருக்குஞ் சனங்கள் அந்தந்தச் சாதிகளுக்குண்டான வரமுறைமை தாய் தகப்பனுக்கு அமுதுபடையாதவன் புருசன் பெண்சாதியை முடுக்கி விட்டவன்பெண்சாதியானவள் புருசன் வார்த்தைக்கு யேருமாறாகப் பேசினவள் ஒருத்தருக்கொருத்தர் மித்துருபேதஞ்செய்கிறபேர்கள் இப்படி நாலுவிமாயி முறைமை தப்பி நடவாமல் தருமநீதமாம் நடக்கும்படிக்கி யிருபத்திநாலு நாட்டாருங்கூடி செட்டி வர்த்தகர்களும் பலபட்டரைச் சாதிகளுக்கும் சம்மதிச்சு காளியணனுக்கு சாதிபட்டயம் நேகமுஞ் செய்துகொடுக்கவேணுமென சகலமான செனங்களும் அனைவருங்கூடி யீரோட்டுக் கோங்கிலியம்மன் சன்னதிக்குப் போயி அம்மனுக்குப் பதினாயிரம் பழம், நெய்பேதினஞ் செய்தபின்பு காளியணனுக்குச் சாதீனப் பட்டயங் குடுத்தபோது, பொங்கலூரு நாட்டு தெய்வசிகாமணி வந்து யிந்தப் பட்டயம் யெனக்குச் சேரவேணுமென்று மரித்துச் சொன்னான். நல்லதுயென்று தாராபுரம்-பிரமியணன் சொல்லும் வசனம்—உங்கள் ரெண்டு பேர் படிக்குத் திருவுளச் சீட்டெழுதி அம்மன் பாதத்திலே வய்ந்து ரெண்டுபேரையும் பார்த்துச் சுனையிலே ஸ்தானஞ் செய்து அம்மனைப் பிரதச்சனம் வலமாயிவந்து தெய்வசிகாமணி நான் முன்னமே யெடுப்பேனேன்று சமுத்துக் கூறினான்.

சரவண காங்கேயன் சொல்லும் வசனம் நீ போயி இந்தப் பேர்ப்படிக்கி இந்தச் சீட்டு உன் கயிக்கு வந்தால் யுனக்கே நேமுகஞ் செய்து முடிக்கிமென்று சொன்னார்கள்.

அப்போ கோவிலுக்குள்ளே அடியெடுத்துவைக்கவும் அம்மன் மடியிடையில் வயிலாயிருந்து ஒரு நீர்ச் சர்ப்பம் வடவாமுகக் கினி போலுஞ் சீறிக் கோபித்து யெழுந்தது கண்டு பயந்து நடு நடுங்கி பிரண்டு கொண்டு பின்னிட்டு வந்து சோபந்தட்டி மயங்கி விழுந்தவனை காளியணன் யெடுத்து மார்போடணைத்து நெஞ்சத் தட்டி அம்மனைத் தியானிச்சுத் தண்ணீர் முகத்துக் கெரச்சு பயத்தை (தி) நிறுத்தி அவன் மனசைத் தயிரியப் படுத்திப் பண்ணினான்.

அதன்பிற்பாடு பத்துப்பேருங்கூடி காளியண்னே உன் பேர்ப் படிக்குச் சீட்டு எடுத்துவரச் சொன்னார்கள். அதன்பிறகு சுனையிலே ஸ்தானம் செய்து அம்மனை வலப்பிரதச்சினமாய் சுத்தி வந்து கோவிலுக்குள் புகவும் நாகசர்ப்பம் கோவம் மாறி மாயமாய்ப் போய்விட்டது. அதன்பிறகு அம்மன் பாதத்திலே

யிருந்த திருவுளச் சீட்டு எடுத்து வந்து பத்துப் பேருங் காணத்தக்கதாகச் சபையிலேவைத்தான். பத்துப் பேரும் சீட்டெ டுத்துப் பார்த்து உன்பேருபடிக்குச் சீட்டு யிருக்குதென்று அனை வருங் கூடிச்சொன்னார்கள்.

வெண்ணை மங்கலத்திலேயிருக்குற ஆனைமலைக் காளியண்ண னுக்குச் சாதி பட்டயங்குடுத்து பாகுபச்சடமும் ரெட்டப்படிபாக்கு வெத்திலையுங் குதிரை குடை தீபட்டியும் ஒத்தைக் கொம்பும் ஒத் தத்து கும்பமும் மகப்பட்டையு கட்டக் கயரும் வெட்ட வாளும் அடிக்க ஆத்தியாக்கையும் அஷ்டாவுக்காரமும் வேண்டிய விருது களும் அளியாத தருமமும் சிலா சாசின பட்டயம் அமைந்தது.

இந்தப் பட்டயம் புதுப்பை செல்லப்ப வாத்தியார் வீட்டு ஏட்டுச் சுவடியிலிருந்து காகிதத்தில் பிரதி செய்யப் பெற்றது. வித்துவான் வே. ரா தெய்வசிகாமணிக் கவுண்டர் எழுமாத்தூர் வேலம்பாளையம் ஈரோடு வட்டம். 7—7—1974

மல்லிகுந்தம் பட்டயம்

1. சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மேச்சேரி ஒன்றியம், மல்லிகுந்தம் என்னும் சிற்றூரில், இராமகண்டன் என்பாரிடம் இப்பட்டயம் உள்ளது.

2. மல்லிகுந்தம் என்னும் ஊரில் இப்பட்டயம் இருப்பதினால் இதற்கு 'மல்லிகுந்தம் பட்டயம்' எனப் பெயர் பெறுகின்றது.

3. படிப்பதற்கும், படியெடுப்பதற்கும் அதன் உரிமையாளர், மறுத்தும், பல சோதனைகளுக்கிடையில் படியெடுத்தவர் பெருந்துறை கி. தண்டபாணி ஆவர்.

4. பட்டயத்தின் நீளம் 14 அங்குலம். அகலம் 9.7 அங்குலம். எடை 1 கிலோ 560 கிராம். வகை செப்புத்தகட்டால் ஆனது. மொத்த வரிகள் 69 முன் பக்கம் 35 பின்பக்கம் 34 மொத்த வாக்கியங்கள் 22.

5. காலம் கி. பி. 1708 மே 29, (29-5-1708) இதில் கூறப்பட்டுள்ள சாலி வாகன ஆண்டு பிழையாக உள்ளது—ஒத்து வரவில்லை. சாலி வாகன ஆண்டுக்குப் பதில், கலியுக ஆண்டாகக் கொண்டால் ஓரளவுக்குப் பொருந்தி வருகின்றது;

6. இதில் காணும் உரைநடை, ஓரளவுக்குப் படித்துப் பொருள் கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆனால், பிழைகள் மலிந்தும், மெய்யெழுத்துக்களான ஒற்றெழுத்துக்களுக்கும், முற்றுத் தொடர் வாக்கியங்களுக்கும், புள்ளிகள் இடப்படாமலும் உள்ளது.

7. சித்திரங்கள்

முன்பக்கம் : திருவாச்சியுடன் நான்கு கரங்களுடன் அமர்ந்த நிலையில் உள்ள ஓர் அம்மன் (காமாட்சியம்மன்) சித்திரம் பட்டயத்தின் தலைப்பக்கத்து நடுவில் காட்சி தருகின்றது. அதற்கு வலப்பக்கத்தில், ஓர் அனுமன் வணங்கும் படியான படமும், அதன் வலப்பக்கத்தில் ஒரு வட்டமும் வரையப்பட்டுள்ளன. அம்மன் படத்திற்கு இடப்பக்கம், மண்டியிட்டபடி ஒரு கருடாழ்வார்

போன்ற ஒரு சித்திரமும், அதன் இடப்பக்கம் ஒரு வட்டமும் வரையப்பட்டுள்ளன.

அம்மன் சித்திரத்தின் கீழே. ஒரு தேர் நிற்பது போலவும், அதன்முன், தலை துண்டிக்கப்பட்ட ஒரு பெண்ணின் உடல் மண்ணில் கிடப்பதுபோலவும், அதனருகில் தலைப்பாகையுடன் ஓர் ஆண் நின்றுகொண்டிருப்பதுபோலவும், தேரில் இரண்டு சங்கிலிகள் பூட்டப்பட்டிருப்பதுபோலவும், படங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

பின்பக்கம்: ஆண் கழுதை ஒன்றின்மீது மனிதன் ஒருவன் அமர்ந்து இருப்பதுபோலவும். அதன் முன்னும் பின்னும் இரண் டிரண்டு மனிதர்கள் நின்று கொண்டிருப்பதுபோலவும், ஆக ஐவர் கரங்களிலும் கேடயங்களும் போர்க்கருவிகளும், தாங்கியபடி நின்று கொண்டிருப்பது போலவும் படங்கள் வரையப்பட்டுள்ளன.

8. செய்திகள்.

காஞ்சீபுரத்து காமாட்சியம்மனுக்குச் சில சமூகத்தினர் ஒன்று சேர்ந்து, தேர் ஒன்றைச் செய்வித்தனர். அத்தேரை காஞ்சீ புரத்தின் நான்கு திருவீதிகளில் இழுத்துவர முற்பட்டபொழுது, சேணிய சிம்மப்புலி என்னும் மோடி வித்தைக்காரன் அதனை இழுக்கவொட்டாமல் மந்திரத்தினால் கட்டித் தடுத்து நிறுத்தி விடுகின்றான். இவன், வைணவரில் வலக்கையானவன்.

வைணவரில் இடக்கையானவரின்தேரை மந்திரத்தினால் இவன் தடுத்து நிறுத்திவிட்டதினால். அவர்கள் எப்படியும் தேரைத் திருவுலா வரச்செய்ய வேண்டும் என்ற வேட்கையினால், சிம்ம அனுமன் என்னும் வேறொரு மந்திரவாதியை வரவழைத்துத் தேரை இழுக்க உதவும்படி வேண்டுகின்றனர். அதற்கு அவன் நரபலி கொடுத்தால்தான் தேரை இழுக்க இயலும் என்று கூறித் தன்னருமை மனைவியையே நரபலியாகக் கொடுத்து தேரை நகர் வலம் வரச்செய்கின்றான். இந்த அருஞ் செயலைப் பாராட்டி அவனுக்குச் சில உரிமைகள் வழங்குகின்றனர்.

9. குறிப்புகள்

மல்லிகுந்தம் என்னும் ஊரில் வாழ்ந்துவரும் இராம கண்டன் என்பவர் இப்பட்டயத்தை மிகவும் பேணிப் போற்றி வருகின்றார். தலைமுறை தலைமுறையாக, இப்பட்டயம் தம் குடும்பத்தாரின் அரிய சொத்தாக இருந்து வருவதாக கூறும் அவர், அதனால் பல நன்மைகளும் அடைகின்றார். இப்பட்டயத்தால் அவரும், அவர்

தாயாதியரும் பெறும் பயன், அவ்வூரின் 15கல் சுற்றளவில் உள்ள வன்னியர், மற்றும் பட்டயத்தில் கூறப்பட்டுள்ள சில சமூகத்தினரிடம் இருந்து, ஆண்டொன்றுக்குக் குறிப்பிட்டளவு தானியங்களை, அறுவடை காலங்களில் இனாமாகப் பெறுவதுதான். இப்பரிசியல் பெறச் செல்லுங்கால், பட்டயத்தையும் உடன்கொண்டு செல்வார்களாம். அதனைக் காட்டித் தானியங்களைப் பெறுவார்களாம்.

10. இதில்காணும் சாலிவாகன ஆண்டு பிழையாகும். கலியுக ஆண்டாகக் கொள்ளுதல் வேண்டும். கலியுக ஆண்டிலிருந்து 3101 யைக் கழித்தால் கி பி. ஆண்டாகும். 4802—3101=1701 சர்வதாரி ஆண்டு 1708இல் வந்துள்ளது. ஆதலின், கலியுக ஆண்டாகக் கொண்டு, கி. பி. 1703இல் இப்பட்டயம் எழுதியதாகவும், பட்டயத்து நிகழ்ச்சிகள் நடந்ததாகவும் கொள்ளலாம். சுமார், 300 ஆண்டுகளுக்கு முந்தையது என்பதை, அதில் காணும் வரிவடிவங்களும், 23வது வரியிலுள்ள 'கொச்சி' என்னும் ஊரின் பெயரும், 25வது வரியில் காணும் 'காகிதம்' என்னும் சொல்லும் மெய்ப்பிக்கின்றன.

65 முதல் 69 வரை உள்ள வரிகள் இடைச் சொருகலாகத் தோன்றுகின்றது. 19வது வரியில் உள்ள 'சேணிய சிம்மப்புலி, என்பவன், தேனோலை ஐந்தாம் இதழ், 28 ஆம் பக்கத்தில் கூறப்பட்டிருக்கும் 'சென்மப்புலவன்' ஆக இருக்கலாமோ என்னும் ஐயம் எழுகின்றது.

அனுப்புதல் :

கி. தண்டபாணி
பாத்திரக்கடை
மேச்சேரி (636453)
சேலம் Dt.

வரிகள்	பட்டயத்தின் படி	முன்பக்கம்
1	உசோசிய விசய சாலிபவாகனம் சகாற்தி ௪௲௮௱௨ (4802)	
2	ஸ்ரீ சருவதாரி ஸ்ரீ செல்லா நின்ற வைகாசி மீ˚. ௱௫. ௨ சுக்குரவாரம் (15 தேதி) அவுட்ட நஷிசத்திரம் அமிர்தயோகம் சகல குணசம்	
3	பன்னறன அகண்டி தனலட்சுமி பிரசன்னறான அ	
4	ண்டினவறை ஆதரிக்க வல்லவறான குருபூசை சி	
5	வபூசை மரவாதவறான காமாட்சியம்மன்	
6	அருளுடையவரான வாடாதமாலை யுடை	
7	யவறான வெத்தி மநசு சிவமநசு வன்	
8	ன த் தடுக்கு யுடையவறான பந்துசன	
9	போசகறான வீரகண்டாமணி வீரவெண்	
10	டயம் உடையவறான நகபத்து உடையவறான	
11	சிங்கக்கொடி ஆளிக்கொடி ஆண்புலிக்கொடி அனு	
12	மக்கெடி கெருடக்கெடி பூச்சக்கரக்கொடை அக்கினிக்	
13	குதிறை வேட்டுப்பாவாடை வெண்சாமறம் உடையவறான கா	
14	ஞ்சிபுர தள (ல)த்தில் பெரியசோழனார் சின்ன சோழனார் 'பெரிய ந	
15	ல்ல பண்டாரத்தார் சின்ன நல்ல பண்டாரத்தார் உடையா	
16	ர் பாளையம் பிச்சிவரத்து பண்டாரத்தார் அவர்காளைச் சே	
17	ந்த. ௯(9) சாதியார் சேர்ந்து காஞ்சிபுர தளத்தில் அவர்கள் சமு	
18	கத்தில் காமாட்சியம்மனுக்கு ரதம் உண்டு பண்ணி நாலு வீதி	
19	யும் ரதப்பிரதட்சணம வரும்போது சேணிய சிம்மப்புலி எங்கு	
20	ரவன் அந்தத்தேறை மந்திரத்தினால் அந்தத்தேரை யிழுக்க	
21	வொட்டால் நிறுத்தினான் யிவன் வலக்கையா னவன்	
22	யிடக்கை பாணத்தார் தேரை நிரித்தினபடியால் யிதற்கு	

23 கொச்சி மலையாளத் திலிருக்குர யிடக்கை சிம்ம அனும
24 ந்தனை அழைப்பித்து தேறை ஓட்டவேணு மென்று யோ
25 சித்து அவனுக்கு காயிதம் யெழுதி அனுப்பிவித்து அவனை வரவழை
26 த்து இந்த சங்கிதிகளைச் சொன்னார்கள் அவன் அதற்கு அஞ்சனம்
27 போட்டு பார்வையிட்டு சொல்லுகுறே னென்று சொன்ஞன் அப்படிக்
28 கிசெய்யென்று சொன்ஞர்கள் அவன் பார்வை யிட்டு. யஉ. ௲ (12000) பூதப்
29 பிசாசுகளை யேவல் செய்து தேரை நிறுத்தியிருக்குறானென்று சொ
30 ன்னான் அதற்கு யென்ன செய்குரதென்று கேட்டார்கள் அதற்கு
31 நரபொலி கொடுத்தால் தேறை யிழுக்கலா மென்று சொன்னா
32 ன். அதற்கு அவர்கள் ஆனை குதிறை ஒட்டயிதுகள் காவுகுடுக்
33 குறேம் நரபொலி யெப்படி கொடுக்குரதென்று சொன்னார்கள் நீங்
34 கள் யிதற்காக ஆயாசப்படவேண்டாம் யென் பெண்சாதி ஆவல்
35 தித்தம்மாளை வெட்டி பொலி குடுத்து தேறை யிழுக்குறேனென்
பின்பக்கம்
36 சொல்லி அப்படியே பொலிகுடுத்து 'யஉ௲. (12000) பூதப் பிசாசுகளை
37 விடுதல் செய்து .யஉ௲. (12000) ஆனை யிழுக்குர தேரை யிருப்பு சங்கிலி
38 போட்டு தானெருவன் தன்னுடைய மூக்குனாலே நாலு வீதியு
39 ம் யிழுத்து வந்து நிலையிலே விட்டு யிடக்கை பாணத்தாருக்கு
40 சரணாகதி செய்துகொண்டான். அப்போது அவர்களுக்கு சந்
41 தோஷம் வந்து நம்முடைய தலைபோகுரத்தை நம்முடைய சாதி
42 பிள்ளை தன்னுதவையை குடுத்து திருப்பினபடியால் யிவ
43 னுக்குயென்ன குடுத்தாலும் நிலைநிற்காதெ சந்தருள் சூரியாள்
44 ஆகாஷவாணி பூமதேவி கல்லும் காவேரி புல்லும் பூண்டும்
45 உள்ள வறைக்கும் சாதனகற்பனமா செப்புபட்டயம்செய்து
46 கொடுத்தார்கள் அதுயென்னமென்றால் யிடங்கை பாணத்தார்

47 கள் வன்னிய சாதியார் தலைக்கட்டு. க-னுலை(யு)ம் முக்கு
48 ருணி (குருணி) அரிசியும் குடுக்கவேண்டியது மனோவிசுவ பிற்மா ஆசாரி
49 நகா சிந்தாமணி காவேரி கறைகண்டவர் முடக்கு மாணிக்கத்
50 தை முச்சரட்டால் கோத்தவர் காஞ்சிநகர் அயோத்தியா நகர்தெ
51 ண்ட காவேரிநகர் கெருடக்கொடி யுடைய நகரத்தார் செங்குந்திய
52 ஈர் மஞ்சப்பாவாடை யுடையவர் தேவேந்திரப்பள்ளன் வெள்ளைகொ
53 டை வெள்ளை வெண்சாமரமயடைவர் (உடையவர்) விருதுகோங்கி பூதக்
54 கொடியுடையவர் யிவர்களுக்கெல்லாம் தலைகட்டு. க—னுலை
55 ம் முக்குருணி அரிசியும் கொடுக்க வேண்டியது யிதுகள் குருத்துஉ
56 ளருக்கொரு (உழவுக்கொரு) ஆடும் பண்ணியும் குடுக்கவேண்டியது யிந்தப்பிர
57 காரம் யிடங்கை பாணததார் ஆகாசவாணி பூமதேவிசாட்
58 சியாக கொடுத்து யிருக்கிறோம் யிந்தபட்டயமும். யஅ. (18)விரு
59 தும் கொண்டுவரப்பட்ட சாதிப்பிள்ளைக்கி தடையில்லாமல்
60 குடுக்க வேண்டியது அப்படிக்கி குடாமல் யாதாமொரு
61 வர் தடை செய்தவர்கள் கெங்கைக் கறையிலே காரும்
62 பசுவை கொண்ண தோஷத்தில் போவார்கள் பிறாமண
63 ஊக் கொண்ண கோ(தோ)ஷத்தில் போவார்கள் உடையார்
64 பாளையம் பண்டாரத்தார் திருமுகம் உ

பிற்சேர்க்கை

65 பொமமலனா கான விருது கொசங்கிச் சாளிசாதி: யஅ (18) : அ
66 வனுக்கு வரிதலைகட்டு ஒண்ணுக்கு: யரு பனம்: கொ
67 டுத்து:ரு: நெள்ளு வள்ளம் தடையிள்ளமள் குடுகிறது
68 படாய் கலியாணத்துக்கு ... சாவுக்கு...ரு...மாடு...க குடுக்கவும்
69 ச்சி உரு அரிவள்ளம்
குடுக்கவும்.